Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 470 பிலவ வருடம், மாசி மாதம் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(04.03.2022) ஹிஜ்ரி - 1443, ரஜப் - 30, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30

## சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு ஆலோசனை

இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடனைக் குறைப்பதற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய அணுகுமுறையை கூடிய விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இலங்கை அதிகாரிகளுக்கு சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது. 02 பக்கம்

## ரஷ்யா மீது போர்க்குற்ற விசாரணை ஆரம்பம்

15 பக்கம்

## டீசல் தட்டுப்பாட்டின் எதிரொலி;

### 09 ஆயிரம் தனியார் பஸ்கள் சேவை நிறுத்தம்

**யோ.தர்மராஜ்**

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இதுவரை 8 ஆயிரம் தொடக்கம் 9 ஆயிரம் வரையான பஸ்கள் போக்குவரத்திலிருந்து... 02 பக்கம்



## விமல், கம்மன்பில 'அவுட்'

# அமைச்சரவையில் அதிரடி மாற்றம்



**யோ.தர்மராஜ்**

அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பை மீறியதாகக் கூறி அமைச்சர்களான விமல் வீரவங்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அமைச்சுப் பதவிகளிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டனர். இதனையடுத்து நேற்று மாலை புதிய அமைச்சர்கள் பதவிகளை ஏற்றுக் கொண்டனர். 02 பக்கம்

# எரிபொருளுக்காக மக்கள் நடுத்தெருவில்!

## அத்தியாவசிய சேவைகளில் பெரும் பாதிப்பு




இடம்: சிலாபம் படப்பிடிப்பு: ஜூட் சமந்த

**யோ.தர்மராஜ்**

நாட்டில் நிலவும் டொலர் பிரச்சினையால் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பல்வேறு துறைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதுடன், பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகியுள்ளனர். எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக நாடு முழுவதும் நீண்ட வரிசையில் பொதுமக்கள் இரவு பகலாக காத்திருப்பதை அவதானிக்க முடிந்தது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக போக்குவரத்து, மின்சாரம், தொழிற்சாலைகள், பொருள் விநியோகம், அலுவலக போக்குவரத்துகள் மற்றும் செயற்பாடுகள், மீன்பிடித்துறை, வைத்தியசாலை போக்குவரத்துகள் மற்றும் மருந்து விநியோகம், ஆடைத்தொழிற்சாலைகள், பேக்கரி உற்பத்திகள், விவசாயம், மரக்கறி விநியோகம், ஹோட்டல் துறை, எரிவாயு விநியோகம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன.

02 பக்கம்



**உஷ்**

விமல் - கம்மன்பில இருவரையும் அமைச்சுப் பதவிகளிலிருந்து ஜனாதிபதி நீக்கிய பின்னர் அரசாங்கத்துக்கு எதிராக உருவாகும் புதிய அரசியல் அணியின் நடவடிக்கை விரைவுபடுத்தப்பட்டுள்ளதாம். ஆளுங்கட்சியின் எம்.பிக்கள் பலர் அரசிலிருந்து வெளியேறக் கூடுமென சொல்லப்படுகிறது.

## பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு ஐ.நா. சுயாதீன நிபுணர்கள் போர்க்கொடி!

### இன்று விவாதம்; அழுத்தங்கள் பிரயோகிக்கவும் வாய்ப்பு

**நமது விசேட செய்தியாளர்**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் இலங்கை மீதான விவாதம் இன்று இடம்பெறவுள்ள நிலையில், இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்படுவதற்கு உடனடியாக தடை விதிக்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் உள்ள மிகப் பெரிய சுயாதீன நிபுணர்கள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

ஐ.நாவின் விசேட அறிக்கையாளர்கள், சுயாதீன நிபுணர்கள் மற்றும் குழுக்களின் அறிக்கைகளைக் கொண்டு, சர்வதேச மனித உரிமைகள்...

02 பக்கம்



## 02 மாதங்களில் 10 ஆயிரம் டெங்கு நோயாளர்கள்

**கே.சுபானி**

நாடு முழுவதும் ஜனவரி, பெப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களில் 10ஆயிரத்து 146 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்குநோய் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

02 பக்கம்

## சுகாதார ஊழியர்கள் நேற்றும் போராட்டம்

### நோயாளர்கள் பெரும் அவதி

**யோ.தர்மராஜ்**

சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு கோரி முன்னெடுத்த வேலை நிறுத்தப் போராட்டத்தை தற்காலிகமாக கைவிட்டிருந்த சுகாதார தொழிற் சங்கங்கள் நேற்று முன்தினம், நேற்று... 02 பக்கம்

## பெரமுனவின் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் விசாரணை

### பங்காளிகளின் கூட்டத்தில் கலந்துகொண்டதால் நடவடிக்கை

**யோ.தர்மராஜ்**

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 11 பங்காளிக் கட்சிகள் இணைந்து "முழுநாடும் சரியான பாதையில்" எனும் தொனிப்பொருளில் நடத்திய மாநாட்டில் கலந்துகொண்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இரு உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை முன்னெடுக்கப்படும் என கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் 'தமிழன்' நாளிதழிடம் நேற்று... 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..



உண்மைய சொல்லப்போனா விமல், கம்மன்பிலவுக்கு லொட்டரி விழுந்த கதைதான்...



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக ஜெனீவாவுக்கு சென்றுள்ள வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், நீதி அமைச்சர் அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே ஆகியோர் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லேவை சந்தித்துக் கலந்துரையாடினர்.



ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் வலுசக்தி அமைச்சராக காமினி லொக்குகேவும் மின்சக்தி அமைச்சராக பவித்ரா வன்னியாராச்சியும் நேற்று பதவியேற்றுக்கொண்டனர்.



நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக வாகன சாரதிகளும் பொதுமக்களும் நீண்ட வரிசையில் காத்திருந்ததை படங்களில் காணலாம். (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே, ஏஷான் தசநாயக்க)



இலங்கைக்கான பாகிஸ்தானின் புதிய உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாருக் புர்கியை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று அந் நாட்டு உயர்ஸ்தானிகராலயத்தில் சந்தித்து தான் எழுதிய இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் பற்றிய ஆய்வு நூலை பரிசளித்தார். இதன்போது முன்னாள் இராஜாங்க அமைச்சர் அலிஸாஹிர் மௌலானாவும் உடனிருந்தார்.




பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தி சிறைக் கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பினால் கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்துக்கு முன்பாக நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு ஒரு வருடமாக தடுத்துவைக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர் யுவானிஸ் விமல்ராஜை விடுவிக்குமாறுகோரி, அவரது குடும்பத்தினரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர். (படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

## சுகாதார ஊழியர்கள்...

ஆகிய இரு நாட்களாக மீண்டும் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்த நிலையில், அதனை தற்காலிகமாக கைவிடுவதற்கும் தீர்மானித்துள்ளன.

எனினும், இரு நாட்களாக முன்னெடுத்த போராட்டத்தால் நோயாளிகள் பெரும் பாதிப்புக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளதாக கவலை வெளியிட்டனர்.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பெப்ரவரி 07ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை 09 நாட்களாக சுகாதாரத் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்து வந்த தொடர் வேலைநிறுத்தப் போராட்டம், கடந்த 15ஆம் திகதி முதல் தற்காலிகமாக கைவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், உரிய தீர்வு கிடைக்காதமையினால் நேற்றுமுன்தினம், நேற்று ஆகிய இரு நாட்களாக மீண்டும் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளன. கடந்த 16 முதல் தங்களுடைய தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தை தற்காலிகமாக கைவிடுவதற்கு தீர்மானித்துள்ளதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

இந்த காலப்பகுதிக்குள் ஜனாதிபதி தலையிட்டு தங்களுடைய கோரிக்கைக்கு உரிய தீர்வை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் இல்லையேல் மீண்டும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் இறங்குவதாகவும் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.இந்த நிலையில், தங்களுடைய கோரிக்கைக்கு இதுவரை உரிய தீர்வு கிடைக்காதமையினால் நேற்றுமுன்தினம் (02) மற்றும் நேற்று (03) ஆகிய இரு நாட்களாக மீண்டும் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தன. இந்த நிலையில், அப்போராட்டத்தை தற்காலிகமாக கைவிடுவதுடன், தீர்வு கிடைக்காவிட்டால் மீண்டும் போராட்டத்தை முன்னெடுப்பதாகவும் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

எனினும், இரு நாட்களாக தொழிற்சங்கங்கள் முன்னெடுத்த போராட்டத்தால் வைத்திய சாலைகளுக்கு வருகைதந்த நோயாளிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டது.

## எரிபொருளுக்காக மக்கள்...

நாடளாவிய ரீதியில் நாளுக்கு நாள் பல எரிபொருள் நிலையங்களில் 'எரிபொருள் இல்லை' என்ற அறிவித்தல்கள் வைக்கப்படுவதால், மக்கள் நீர், ஆகாரம் இன்றியும் தூக்கமின்றியும் பல மணி நேரமாக வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர். சில இடங்களில் நோயாளிகளை அழைத்துச் செல்லும் அம்பியூலன்ஸ் வண்டிகளும் எரிபொருளுக்காக வரிசையில் காத்திருந்ததையும் காண முடிந்தது.

### போக்குவரத்து

எரிபொருளுக்காக வரிசையில் காத்திருக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதால், நாட்டின் பல பகுதிகளில் போக்குவரத்துகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன. போக்குவரத்துக்கு தேவையான எரிபொருள் இல்லாதமையினால் 09 ஆயிரம் தனியார் பஸ்கள் போக்குவரத்திலிருந்து விலகியுள்ளன.

சில இடங்களில் பல கிலோ மீற்றர் தூரத்துக்கு வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையினால் போக்குவரத்துத் தடைகளும் ஸ்தம்பித நிலைமையும் காணப்பட்டன. நாட்டில் பலபகுதிகளிலுள்ள எரிபொருள் நிலையங்களுக்கு எரிபொருள் வாகனம் வருகைதந்ததும் பட்டாசு கொளுத்தி, கைகூப்பி வரவேற்றதையும் காண முடிந்தது.

மேலும், முச்சக்கரவண்டி போக்குவரத்துகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டதால் வாடகைக்குச் செல்லும் பயணிகளும் பாதைகளில் நீண்ட நேரம் காத்திருந்ததுடன், வாகனங்களின்றி நடந்தும் சென்றனர்.

### பொருட்கள் விநியோகம்

பொருட்களை கொண்டுச்செல்லும் கொள்கலன்களின் போக்குவரத்துகளும் தடைப்பட்டுள்ளன. குறிப்பாக, 02 ஆயிரத்துக்கு மேற்பட்ட கனரக வாகனங்கள் போக்குவரத்திலிருந்து விலகியுள்ளன. இதனால், பொருட்கள் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதால் நாட்டில் பல பகுதிகளில் பொருட்களுக்கான தட்டுப்பாடு நிலவுகின்றது.

மேலும், ஹோட்டல் மற்றும் பேக்கரி உற்பத்திகளும் பாதிக்கப்பட்டுள்ளன. உற்பத்திகளை கொண்டுச் செல்வதற்குக்கூட எரிபொருள் இல்லாத நிலைமை காணப்படுவதால் பல பேக்கரி உற்பத்தியாளர்கள் கடைகளை மூட வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தனர். நடமாடும் பேக்கரியாளர்களை தற்போது பாதைகளில் காண முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளதாக நுகர்வோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

### அரச மற்றும் தனியார் நிறுவனங்கள்

இதேவேளை, அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கான போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டுள்ளதால் ஊழியர்களின் வருகையும் குறைவடைந்துள்ளதால், சேவைகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன. குறிப்பாக, 03 இலட்சத்துக்கும் அதிகமான ஊழியர்கள் சேவைக்கு வருகைதரவில்லையென அரச சேவை, உள்ளூர் மற்றும் மாகாண சபை அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன.

### வைத்தியத்துறை

வைத்தியசாலைகளுக்கான போக்குவரத்திலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் மருந்து விநியோகமும் பாதிக்கப்பட்டுள்ளதாக மருந்தக வட்டார தகவல்கள் தெரிவித்தன. இதேவேளை, சில இடங்களில் நோயாளிகளை அழைத்துச் செல்லும் தனியார் வண்டிகளும் எரிபொருளின்றி இடைநடுவே நிர்க்கதியான நிலைமைக்கு தள்ளப்பட்டிருந்ததுடன், அம்பியூலன்ஸ்வண்டிகளும் கூட எரிபொருளுக்காக வரிசையில் காத்திருக்க வேண்டியிருந்ததையும் காண முடிந்தது.

### விவசாயத்துறை

எரிபொருள் தட்டுப்பாடு விவசாயத்துறையிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதன்படி, உரப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட தற்போது விளைச்சல் செய்யப்பட்டுள்ள உற்பத்திகளை அறுவடை செய்யவும் விற்பனை செய்யவும் முடியாத இக்கட்டான நிலைமையை எதிர்நோக்கியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். விளைச்சல் செய்யப்பட்டுள்ள நெற்களை அறுவடை செய்யும் இயந்திரங்களுக்கு உரிய முறையில் எரிபொருள் கிடைக்காதமையினால் அறுவடைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும், அறுவடை செய்யப்பட்ட மரக்கறிகளை உரிய முறையில் சந்தைப்படுத்துவதற்கு கொண்டுச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதால் பல சந்தைகளில் மரக்கறிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு விலை அதிகரிக்கும் சாத்தியக்கூறுகளும் காணப்படுவதாக விற்பனையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

### மீன்பிடித்துறை

இந்த எரிபொருள் தட்டுப்பாடு மீன்பிடித் துறையிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மீன்பிடிக்குச் செல்லும் படகுகளுக்கு உரிய முறையில் எரிபொருள் கிடைக்காதமையினால் கடலுக்குச் செல்ல முடியாத நிலைமைக்கு தாங்கள் தள்ளப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். நாங்கள் தொடர்ந்து கடலுக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டால் நாட்டில் மீனின் விலைகளும் அதிகரிக்கலாம் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

### மின்வெட்டும் தொழிற்றுறையும்

நாட்டில் கடந்த வாரத்திலிருந்து மின்சார உற்பத்திக்கு போதிய எரிபொருள் கிடைக்காதமையினால், 2 – 3 மணி நேர மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டிருந்தது. ஆனால், நாளுக்கு நாள் எரிபொருள் தட்டுப்பாடு நிலைமை தொடர்வதால் தற்போது முதல் 08 மணி நேரத்துக்கும் அதிகமான நேரம் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மின்வெட்டின் காரணமாக பல தொழில் நிறுவனங்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன. குறிப்பாக, மின்வெட்டு அமுல்படுத்தப்பட்ட காலப்பகுதியில் இரவு நேரங்களில் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்ட நிலையில், தற்போது பகல், மாலை மற்றும் இரவு நேரங்கள் என மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதனால், மின்சாரத்தை நம்பி முன்னெடுக்கப்படும் ஆடைத்தொழிற்சாலைகள் உள்ளிட்ட பல தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, எரிபொருள் தட்டுப்பாட்டை கட்டுப்படுத்துவதற்காக நிறுவனங்களில் வேலை நாட்களை கட்டுப்படுத்துவதற்கும் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எரிபொருளை நம்பியுள்ள நிறுவனங்களின் வியாபார செயற்பாடுகளும் தொடர்ந்து முடங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளன. ஆகவே, எரிபொருள் தட்டுப்பாடு தொடருமாக இருந்தால் நாடு முற்றாக ஸ்தம்பிதமடையும்.

### அமைச்சின் அறிவிப்பு

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு காணப்பட்டாலும் இனி இந்த நிலைமை தொடராத வகையில் எரிபொருளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாக வலுசக்தி அமைச்சு அறிவித்துள்ளது. துறைமுகத்திலுள்ள 37 ஆயிரத்து 300 மெற்றிக்தொன் டீசல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

இதில் 08 ஆயிரம் மெற்றிக்தொன் டீசலை மின் உற்பத்திக்கு விநியோகிக்கவுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், 28 ஆயிரத்து 300 மெற்றிக்தொன் டீசல் மற்றும் 09ஆயிரம் மெற்றிக்தொன் விமானங்களுக்கு பயன்படுத்தப்படும் எரிபொருள் அடங்கிய கப்பல் இன்று (04) துறைமுகத்தை வந்தடையவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. எனவே, தற்போதுள்ள எரிபொருளை முறையாக பகிர்ந்து விநியோகிப்பதால் எரிபொருள் தட்டுப்பாடு குறைக்கப்படும் எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

## 02 மாதங்களில்...

மேலும் டெங்கு நோய் பரவும் அதி அபாய வலயங்களாக ஒன்பது மாவட்டங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இது குறித்து தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு நேற்று (03) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனவரி முதல் பெப்ரவரி 27ஆம் திகதி வரையான இரண்டு மாத காலப்பகுதிக்குள் நாடு முழுவதும் 10ஆயிரத்து 146 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

குறிப்பாக பெப்ரவரி 21முதல் 27வரையான காலப்பகுதிக்குள் அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு (161பேர்), கம்பஹா (103பேர்), களுத்துறை (67பேர்), கண்டி (21பேர்), காலி (52 பேர்), யாழ்ப்பாணம் (98பேர்) குருநாகல் (26பேர்), புத்தளம் (82பேர்), இரத்தினபுரி (31) ஆகிய 09 மாவட்டங்கள் டெங்கு அதி அபாய வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்படி 09 மாவட்டங்களில் கொலன்னாவை, நுகேகொடை, கஹதுடுவ, கட்டானை, மினுவாங்கொடை, சீதுவ, பண்டாரகம, வாதுவ, ஹரிஸ்பத்துவ, கண்டி, பலப்பிட்டிய, மன்னார், கிண்ணியா, கல்முனை வடக்கு, பொத்துவில், குருநாகல், நிக்கவரெட்டிய, பொல்காவெல, வாரியபொல, பதுளை, எஹெலியகொட, கலிகமுவ, மாவனெல்லை மற்றும் ரம்புக்கனை போன்ற பல பிரதேசங்களில் டெங்கு தீவிரமாக பரவிவருவதாக டெங்குநோய் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

## விமல், கம்மன்பில 'அவுட்'...

அதன்படி போக்குவரத்து அமைச்சராக இருந்த பவித்ரா வன்னியாராச்சி மின்சக்தி அமைச்சராகவும் மின்சக்தி அமைச்சராக இருந்த காமினி லொக்குகே வலுசக்தி அமைச்சராகவும் பொறுப்பேற்றுள்ளதுடன் கைத்தொழில் அமைச்சராக எஸ்.பி.திசாநாயக்க பொறுப்பேற்றுக் கொண்டார்.

முதலில் கல்வி அமைச்சராக எஸ்.பி. நியமிக்கப்படவிருந்தார். ஆனால், கல்வி அமைச்சை விட்டுக்கொடுக்க முடியாதென தினேஸ் குணவர்தன தெரிவித்ததை அடுத்தே, எஸ்.பி. திசாநாயக்க கைத்தொழில் அமைச்சை பொறுப்பேற்றுக்கொண்டதாக அறிய முடிந்தது.

விமல் வீரவங்ச, வாசுதேவ நாணயக்கார மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் இணைந்து அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுத்திருந்த மாநாட்டை தொடர்ந்தே அமைச்சர்களாக இருந்த விமல் மற்றும் கம்மன்பில ஆகியோர் அமைச்சு பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

ஆரம்பத்திலிருந்து அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சித்து வந்த இவர்கள் நேற்றுமுன்தினம் (02) அரசின் செயற்பாடுகளை பகிரங்கமாக விமர்சித்ததால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களை மாத்திரம் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதன் பின்னர் இந்த அமைச்சரவை மாற்றம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த அமைச்சரவை மாற்றத்துக்கு முன்னர் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற குறித்த பேச்சுவார்த்தையில், அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பை தொடர்ந்து மீறி வருவதால் அமைச்சர்களான் விமல் வீரவங்ச, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, அவர்களை அமைச்சு பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானத்தையும் எடுக்க வேண்டியுள்ளதாகவும் அவர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்தபோது தெரிவித்துள்ளார்.

அரசில் அங்கம் வகிக்கும் 11 பங்காளிக் கட்சிகளும் இணைந்து நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த அரசுக்கு எதிரான மாநாட்டைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களை மாத்திரம் அழைத்து நேற்று (03) கலந்துரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது, அரசுக்கு எதிரான குறித்த மாநாட்டில் கலந்துகொண்ட மொட்டு கட்சி உறுப்பினர்களான இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க மற்றும் பிரேம்நாத் சீ தொலவத்த ஆகியோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என அனைத்து உறுப்பினர்களும் கடுமையாக வலியுறுத்தியுள்ளனர்.

அத்தோடு, அரசாங்கத்தின் செயற்பாடுகளை தொடர்ந்து விமர்சித்து வருவதோடு, அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பை மீறும் அமைச்சர்களான விமல் வீரவங்ச, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக, அவர்களை அமைச்சு பதவியிலிருந்து நீக்க வேண்டும் எனவும் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர்.

யுகதனவி ஒப்பந்தம், எம்.சி.சி. ஒப்பந்தம் போன்ற அரசின் ஒவ்வொரு செயற்பாடுகளையும் ஆரம்பத்திலிருந்து கேள்விக்குறியாக்குவதுடன், ஒத்துழைப்பு தருவோம் என அமைச்சரவையில் கூறிவிட்டு வெளியில் சென்று அமைச்சரவையை விமர்சிக்கும் அவர்களுக்கு எதிராக இனியும் அமைதிகாக்க முடியாது. எனவே, இவர்களுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அனைத்து உறுப்பினர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, தான் இவர்களுக்கு அதிக நிதிகளை ஒதுக்கி உதவிகளை செய்தாலும் இன்று இவர்கள் தன்னை பகிரங்கமாக விமர்சிப்பதுடன், மோசமாகவும் நடந்துக்கொள்கின்றனர் என நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை செவிமடுத்த ஜனாதிபதி, இவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவர்களை அமைச்சு பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானத்தையே தான் எடுக்க வேண்டியுள்ளதாக இக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். இதனையடுத்தே, அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பை மீறியதாகக் கூறி அமைச்சர்களான விமல் வீரவங்ச, உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சு பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

## பெரமுனவின் இரு...

தெரிவித்தார்.

அரசாங்கத்தை விமர்சித்து நடத்தப்பட்ட குறித்த மாநாட்டில் கலந்துகொண்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களான இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க மற்றும் பிரேம்நாத் சீ தொலவத்த ஆகியோர் தொடர்பாக வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

11 பங்காளிக் கட்சிகளும் அரசாங்கத்துக்கு எதிராக நடத்திய மாநாட்டில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் இருவரும் கலந்துகொண்டது என்னை பொறுத்தவரை தவறானது. எனவே, இது குறித்து கட்சி என்ற அடிப்படையில் முக்கிய தீர்மானம் ஒன்றை எடுத்தாக வேண்டும்.

குறிப்பாக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவையும் அதன் உறுப்பினர்களையும் கடுமையாக விமர்சிக்கும் ஒரு இடத்தில் இவர்கள் இருவரும் ஏன் கலந்துகொண்டனர் என்பது குறித்து அவர்களிடம் வினவ வேண்டும். எனவே, கட்சியின் ஒழுக்காற்று குழுவானது இது குறித்து கலந்துரையாடி இறுதித் தீர்மானங்களை எடுக்கும்.

இதேவேளை, குறித்த மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட சில கருத்துகளை எங்களால் ஏற்றுக்கொள்ளவே முடியாது. அரசாங்கத்தில் அங்கம் வகித்துக்கொண்டு அரசாங்கத்தையே விமர்சிப்பது குறித்து ஜனாதிபதியே முடிவெடுத்தாக வேண்டும் - என்றார்.

## பயங்கரவாதத் தடைச்...

சட்டத்துக்கு இணங்க, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை திருத்தியமைக்குமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தன்னிச்சையாக நபர்கள் தடுத்து வைக்கப்படுவதானது, மனித உரிமை மற்றும் சுதந்திரத்துக்கு மிகப் பெரிய ஆபத்து என சுயாதீன நிபுணர்கள் குழு சுட்டிக்காட்டியுள்ளது. ஆதலால், சர்வதேச சட்டவிதிமுறைகளுக்கமைய இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் திருத்தப்படும் வரை அது பயன்படுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டுமென அந்தக் குழு கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கடந்த வருடம் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இந்த வருடம் ஆய்வுக்குட்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதால் பயங்கரவாதத் தடைச்சட்டம் குறித்தும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பேரவையின் 49ஆவது கூட்டத்தொடரின் இன்றைய இலங்கை குறித்த விவாதத்தில் இந்த விடயம் வலியுறுத்தப்பட வேண்டுமென பல்வேறு அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

## சர்வதேச நாணய நிதியம்...

இலங்கையுடனான கருத்துப் பரிமாற்றத்தைத் தொடர்ந்து அவர்கள் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்.

அதேபோல் சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நிறைவேற்று சபையும் "Artical IV" இன் கீழ் இலங்கையுடனான தமது கலந்துரையாடல்களை நிறுத்தியுள்ளதாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டீசல் தட்டுப்பாட்டின் எதிரொலி...

விலகியுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று (03) தெரிவித்தார்.

அத்தோடு, வலுசக்தி அமைச்சராக இருந்த உதய கம்மன்பிலவுடன் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் இன்று (04) நண்பகல் 12 மணிக்கு பின்னர் தங்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கு உறுதியளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எரிபொருள் தட்டுப்பாடுகளுக்கு மத்தியில் தனியார் பஸ்கள் போக்குவரத்திலிருந்து விலகுவது குறித்து வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போதிருக்கும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக போக்குவரத்திலிருக்கும் தனியார் பஸ்கள் போக்குவரத்திலிருந்து விலக வேண்டியுள்ளது. இதனால், இதுவரை 08 ஆயிரம் தொடக்கம் 09 ஆயிரம் வரையான பஸ்கள் விலகியுள்ளன. 05 ஆயிரம் வரையான பஸ்களே சேவையில் இருக்கின்றன.

இந்த நிலையில், உதய கம்மன்பிலவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் தனியார் பஸ்களுக்கு தேவையான எரிபொருளை இலங்கை போக்குவரத்து சபையின் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

அதன்படி, இன்று (04) நண்பகல் 12 மணிக்கு பின்னர் தனியார் பஸ்களுக்கு தேவையான எரிபொருளை குறிப்பாக, 100 – 150 லீற்றர் அடிப்படையில் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார். ஒருவேளை, உரிய முறையில் எரிபொருள் விநியோகம் கிடைக்காதபட்சத்தில் தற்போது சேவையிலிருக்கும் பஸ்களும் விலக வேண்டிவரும் - என்றார்.

# இன்றைய ராசி பலன்

**04.03.2022 வெள்ளிக்கிழமை மாசி 20**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**நட்சத்திரம்: ரேவதி**
அ.கா 1.56 - 05.03.2022
அதிகாலை 2.29 வரை

**யோகம்: சுபம்**
அ.கா 3.29 - 05.03.2022
அதிகாலை 1.45 வரை

**திதி: பூர்வ பட்ச துவிதீயை**
இரவு 8.45 வரை

**பூர்வ பட்ச திரிதீயை**
இரவு 8.45 - 05.03.2022
இரவு 8.35 வரை

**முற்கரணம்: பாலவம்**
காலை 9.05 வரை

**பிற்கரணம்: தைதுலம்**
காலை 9.05 - இரவு 8.45

**சுப நேரங்கள்**
காலை 6.22 - 7.51
மாலை 5.23 - 6.23

**அசுப நேரங்கள்**

**ராகு காலம்**
காலை 10.52 - பி.ப 12.22

**குளிகை காலம்**
காலை 7.52 - 9.22

**எமகண்ட காலம்**
மாலை 3.22 - 4.52

**துர் முகூர்த்தம்**
காலை 8.46 - 9.34
பிற்பகல் 12.46 - 1.34

லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி

**மேஷம்:** எதிர்மறை எண்ணங்கள் பணிகளில் பாதிப்பை உண்டாக்கலாம். குடும்பத்தில் செலவு அதிகரிப்பால் ஏற்படும் விவாதத்தில் மன நிம்மதி கெடலாம். பழைய எண்ணங்கள் மனதில் தோன்றலாம். அவசர முடிவுகளை தவிர்ப்பது நன்மை. இறைவணக்கம் தேவை.

**ரிஷபம்:** வெளிநாட்டு உறவுகளால் சுப செய்திகள் கிடைக்கலாம். காதல் திருமண முன்மொழிதல் உண்டாகலாம். உடல் நலம் சீராகும். உங்கள் அறிவுத்திறனால் ஆளுமை ஏற்படலாம்.

**மிதுனம்:** தொழில் முதலீடுகளில் கவனமாக இருந்து தவறுகளை தவிர்க்கலாம். அறிவார்ந்தவர்களின் வழிகாட்டுதல் கிடைக்கலாம். சரியான திட்டமிடுதல் நிதி பற்றாக்குறையை நீக்கலாம். வேலைகளில் உங்களுக்கு கீழ் பணியாற்றுபவர்களிடம் நம்பிக்கை குறையலாம்.

**கடகம்:** பங்குதாரர்கள் சம்பந்தப்பட்ட தொழிலில் இலாப பங்கீட்டில் பிரச்சினைகள் உண்டாகலாம். பணியிடங்களில் தொழில்நுட்பப் பிரச்சினைகள் ஏற்படலாம். பெற்றோர்களுடன் கருத்து வேறுபாடுகள் மறந்து இருப்பது நன்மை.

**சிம்மம்:** பிரச்சினைகளை தீர்க்கும் முடிவுகளில் நிதானம் தேவைப்படலாம். வேலைகளில் கருவிகளை பயன்படுத்துவதில் கவனம் தேவைப்படலாம். வாழ்க்கைத்துணையுடன் வாக்குவாதம் தவிர்ப்பது நன்மை. அவப்பெயர் தரும் சில விடயங்களில் ஒதுங்கி இருப்பது நல்லது. இறைவணக்கம் தேவை.
**சந்திராஷ்டமம்: மகம் நட்சத்திரத்துக்கு இரவு 7.49 வரை பூரம் நட்சத்திரத்துக்கு இரவு 7.49 - 05.03.2022 இரவு 8.16 வரை உத்தரம் நட்சத்திரம் பாதம் 1க்கு 05.03.2022 இரவு 8.16 - 06.03.2022 அ.கா 2.29**

**கன்னி:** தொழிலில் விரிவாக்கம் உண்டாகலாம். அன்றாட வழக்கங்கள் சீரான ஒழுங்கு பெறும். இல்லத்தில் இனிமையான சூழ்நிலை உண்டாகலாம். பணிகளில் கௌரவம் கிடைக்கப் பெறலாம். நேர்மறை எண்ணங்களுக்கு மதிப்பு உயரலாம்.
**சந்திராஷ்டமம்: உத்தரம் நட்சத்திரம் பாதம் 2/3/4க்கு 06.03.2022 அ.கா 2.29 - இரவு 9.26 வரை அத்தம் நட்சத்திரத்துக்கு 06.03.2022 இரவு 9.26 - 07.03.2022 இரவு 11.20**

**துலாம்:** பேசும் சொற்களில் நிதானம் தேவைப்படலாம். வணிக பயணங்களில் நன்மை கிடைக்கலாம். அரசாங்க சம்பந்தப்பட்ட வேலைகளில் இருந்த சில தடைகள் நீங்கலாம்.

**விருச்சிகம்:** இன்று வணிகத்தில் இலாபங்கள் குறையலாம். அதிக காலம் பயன் தரும் முதலீடுகள் செய்வது நன்மை தரலாம். காலில் சிறிய வலி உண்டாகலாம். புதிய கற்கைகளும் ஏற்படலாம். இன்று இறையருளால் நல்ல நாளாக அமையலாம்.

**தனுசு:** பணியிடங்களில் வேலைகள் தாமதம் அடையலாம். அன்னையின் உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். வணிக ஒப்பந்தங்கள் கவனமின்மையால் நீங்கலாம். குடும்பத்தினருடன் இணக்கப் போக்கும் நல்லது. இறைவணக்கம் தேவை.

**மகரம்:** பணியிடங்களில் ஆதிக்கம் மேம்படுவதுடன், பணிகள் குறைந்த நேரத்தில் நிறைவடையலாம். வருவாய்க்கு புதிய வாய்ப்புகள் உருவாகலாம். வீட்டின் மகிழ்ச்சியான வளங்களில் செலவுகள் ஏற்படலாம். சமூகப்பணி உங்களால் செய்யப்படலாம்.

**கும்பம்:** தம்பதியரிடையே அதிருப்தி ஏற்படாமல் இருக்க கவனம் தேவைப்படலாம். நிதி ஒப்பந்தங்களில் மனதில் குழப்பம் ஏற்பட்டால் நீங்கள் தவிர்க்கலாம். மற்றவர்களால் உங்கள் மீது விமர்சனம் செய்யப்படலாம். மனச் சோர்வு உண்டாகலாம்.

**மீனம்:** ஏற்றுமதி சம்பந்தப்பட்ட வேலைகளில் வருவாய் உண்டாகலாம். பணிகளில் பதவி உயர்வு கிடைக்கலாம். வணிகத்தில் பெரும் நன்மை கிடைக்கலாம். இல்லத்தில் பிரச்சினைகள் நீங்கப் பெறலாம்.

# அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியலமைப்பொன்றை உருவாக்கினால் இலங்கையில் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும்!

## ஐ.நா. ஆணையர் இலங்கை தூதுக்குழுவிடம் தெரிவிப்பு



அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியலமைப்பொன்றை உருவாக்கினால், இலங்கையில் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தூதுக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லே முன்வைத்துள்ள இலங்கை தொடர்பான எழுத்து மூல சமர்ப்பணம் தொடர்பில் இன்றைய (04) அமர்வில் கலந்துரையாடப்படவுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்ட இலங்கை தூதுக்குழுவினர் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் மிச்செல் பச்லேவை, நேற்றுமுன்தினம் சந்தித்தபோதே அவர் இதனை கூறியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே, இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன ஆகியோர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லேவை சந்தித்துள்ளனர்.

இதன்போது, யுத்த குற்றங்கள் இலங்கையில் இடம்பெறவில்லை என்பதனை மனித உரிமை ஆணையாளருக்கு தெளிவுபடுத்தியதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியலமைப்பொன்றை உருவாக்கினால் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தூதுக்குழுவிடம் கூறியதாக நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு இலங்கை எடுத்துள்ள முயற்சி சிறந்தது என்ற போதிலும், மேலும் பல மாற்றங்கள் அவசியம் என மிச்செல் பச்லே கூறியதாக அவர் கூறினார்.

இந்த நிலையில், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிகள் தொடர்பில் தாம் மனித உரிமை ஆணையாளரை தெளிவுபடுத்தியதாகவும் நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி கூறினார்.

இதனிடையே, இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பயன்படுத்துவதற்கு உடனடி தடை விதிக்க வேண்டும் எனவும், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்துக்கு இணங்க, அதனை மீள் பரிசீலனை செய்து திருத்தம் மேற்கொள்ளுமாறும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் வல்லுநர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த சட்டம் மக்களின் உரிமைகள், சுதந்திரத்துக்கு பாரிய ஆபத்தை விளைவித்துள்ளதாகவும் விசேடமாக சிறுபான்மை மக்களுக்கு இதன் ஆபத்து அதிகமாக இருப்பதாகவும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் வரை, பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதற்கு உடனடித் தடை விதிக்க வேண்டும் எனவும் ஐ.நா. மனித உரிமை நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தகம் தொடர்பான உதவிக்கான பேச்சுவார்த்தையின் ஒரு பகுதியாக பயங்கரவாத சட்டத்தை மறுசீரமைக்க இலங்கை அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம் கடந்த மாதம் 10ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம், பிற பொறிமுறைகளால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் உரிய வகையில் அதில் பின்பற்றப்படவில்லை எனவும் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சிறுபான்மை சமூகங்கள், அரசியல் அதிருப்தியாளர்களை இலக்கு வைப்பதற்கும், சித்திரவதைகள் மூலம் பொய்யான வாக்குமூலங்களை பெறுவதற்கும், நீண்டகால தன்னிச்சையான தடுப்புக் காவலில் வைப்பதற்கும், 40 ஆண்டுகளுக்கு மேலாக பயங்கரவாத சட்டம் இலங்கையில் பயன்படுத்தப்பட்டு வருவதாக மனித உரிமை நிபுணர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# இலங்கை அரசாங்கமானது நீண்டகாலமாக ஆழமான தண்டனையின்மை கலாசாரத்தில் ஊறியுள்ளது!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் விசனம்



இலங்கை அரசாங்கமானது, நீண்டகாலமாக ஆழமான தண்டனையின்மை கலாசாரத்தில் ஊறியுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை ஆணையாளரின் இலங்கை அறிக்கை தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அவ்வறிக்கைக்கான இலங்கை அரசின் பதில் அறிக்கையும் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த பின்னணியில் இவ்விடயம் தொடர்பில் சில முக்கிய காரணிகளைக் குறிப்பிடுவது முக்கியமானதாகும். சிறப்பு நிபுணர் குழுவின் அறிக்கையில், குறிப்பாக இறுதி யுத்த கட்டத்தில் நம்பத்தகுந்த சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் மீறல்கள் இடம்பெற்றதாகவும், அவை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு உண்மை உறுதி செய்யப்படவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை ஆணையாளரின் உள்ளக விசாரணையும் இதனையொத்த ஒரு முடிவுக்கு வந்துள்ளது. இலங்கையின் தற்போதுள்ள அரசாங்கமும் முன்னைய அரசாங்கங்களும் இதுவரை எந்தவொரு விசாரணையையும் முன்னெடுக்கவில்லை.

தற்போதைய அரசாங்கமானது முன்னைய அரசாங்கம் முன்மொழிந்த பொறுப்புக்கூறலை உறுதி செய்யும் வகையில் கலப்பு பொறிமுறை அடங்கிய இணை அனுசரணை பிரேரணையிலிருந்து விலகிக் கொண்டது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஒட்டுமொத்த பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை. இலங்கை அரசாங்கமானது சுதந்திரம் அடைந்தது முதல் நீண்டகாலமாக ஆழமான தண்டனையின்மை கலாசாரத்தில் ஊறியுள்ளது.

இது தமது அரசியல் பலத்தைத் தொடர்ந்தும் தக்க வைப்பதற்காக சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு ஆதரவளிக்கும் முகமாக உள்ளக வாக்குறுதிகளை மதிக்காமலும் அதன் விளைவாகக் கொடுத்த வாக்குறுதிகளைச் செயல்படுத்துவதிலும் சரியான முடிவுகளை எடுப்பதிலும் அல்லது வேறெந்த ஒரு விடயத்திலும் தீர்மானம் எடுக்கும் நிலைகளில் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.

எல்லா அரசாங்கங்களும் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்காகப் பேரினவாதத்தினை ஆதரிக்கும் கொள்கைகளை முன்னிறுத்தி வந்துள்ளன. இது இலங்கை நாட்டுக்கு பாரிய பாதகங்களைக் கொண்டுவந்துள்ளதுடன், ஒருமித்த இலங்கை நாட்டின் மக்களையும் இது பாதித்துள்ளது.

உண்மை நிலைமையினை சிங்கள பௌத்த மக்களுக்கு எடுத்துக் கூறினால் அவர்கள் நிலைமையைப் புரிந்து கொள்வார்கள். ஆனால் ஒரு சில சிங்கள தலைவர்களை விட ஏனையவர்களுக்கு இதனை செய்வதற்குத் தைரியம் இல்லை. இலங்கை முகங்கொடுத்துள்ள வரலாறு காணாத பிரச்சினைக்கும் மீண்டெழுந்து வரமுடியாத நிலைமைக்கும் இதுவே பிரதான காரணமாகும்.

இதேவேளை ஆயுதமேந்தாத பாதிப்புக்குள்ளான தமிழ் மக்களின் நிலைமையைக் குறிப்பிடுவது முக்கியமானதாகும். இவர்கள் யுத்தத்தினால் பாதிப்புக்குள்ளானவர்கள், ஏனையோர் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டவர்கள், ஏனையவர்கள் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்தவர்கள்.

மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டுப் பாதிப்படைந்த இந்த மக்கள் மனித உரிமை பேரவையின் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்த வேண்டுகிறார்கள். இவர்கள் பழிவாங்கலை நாடவில்லை. மாறாக பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மீள் நிகழாமை மற்றும் தொடரும் மனித உரிமை மீறல்கள் போன்றவற்றை உறுதி செய்யுமாறே வேண்டுகின்றனர். அவர்கள் உண்மை நிலைநாட்டப்படவேண்டும் எனக் கோருகின்றனர்.

உண்மை உறுதி செய்யப்படாமல் நீதி நிலைநாட்டப்பட முடியாது. இலங்கை ஐக்கிய நாடுகளின் சர்வதேச உடன்படிக்கைகளை ஏற்றுக் கொண்டுள்ளது. அத்தகைய உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவது இலங்கையின் பொறுப்பாகும்.

இதனை செய்யத் தவறுவதானது தற்போது நிலவும் தண்டனையின்மையை உறுதி செய்வதாகவே அமையும். தற்போதைய இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடும், ஐக்கிய நாடுகள் சபையின் பிரேரணை மற்றும் சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகள் போன்றன இலங்கையில் எது நடந்தாலும் அது ஒரு உள்ளக நிகழ்வாகவும், இறையாண்மை தொடர்பான விடயமாகவும் அதில் வெளி தலையீடுகள் இருக்க முடியாது எனவும் எண்ணுவதற்குத் தூண்டுகிறது. இலங்கையின் தண்டனையின்மை கலாசாரமானது சர்வதேச மட்டத்துக்குக் கொண்டுசெல்ல வேண்டிய தருணத்தை எட்டியுள்ளது.

சொந்த மக்களது இறையாண்மை மதிக்கப்பட்டு அவர்கள் சுய மரியாதை மற்றும் கௌரவம், சமத்துவம் மற்றும் நீதி மேலும் மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களிலிருந்து பாதுகாக்கப்படுகின்ற போது தான் ஒரு நாட்டின் இறையாண்மை புனிதத்துவம் பெறுகின்றது என்பதனை குறிப்பிட வேண்டும்.

ஆனால், இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் இத்தகைய நிலைமை இல்லாத நிலையில் அரைவாசிக்கும் மேலதிகமானவர்கள் கடந்த தசாப்தங்களில் பல்வேறு நாடுகளில் குடியேறியுள்ளனர். இந்நிலைமை தொடர்ந்தால், செழுமையான மொழியையும் கலாசாரத்தினையும் நாகரீகத்தினையும் பாரம்பரியத்தினையும் கொண்ட தமிழ் மக்கள் இலங்கையில் இல்லாமல் போய்விடுவார்கள்.

தமிழ் மக்கள் தமது பூர்வீகமான வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் ஒன்றிணைந்த பிரிவுபடாத இலங்கையில், அர்த்தமுள்ள அதிகார பிரயோகத்துடன் தொடர்ந்தும் வாழ விரும்புகிறார்கள். இது உறுதி செய்யப்படவேண்டியது அடிப்படையாகும். தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் இந்த நிலைமைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளே காரணம் எனக் கூறுகின்றனர்.

ஆனால், சுதந்திரத்துக்குப் பின்னர் தமிழ் மக்களுக்கெதிரான கலவரங்கள் இடம்பெறாமல் இருந்திருந்தால், தமிழ் மக்களை இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்புப் படையினர் பாதுகாத்திருந்தால், இலங்கை பிரதமர்களுக்கிடையிலும் தமிழ் தலைவர்களுக்கிடையிலும் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தால், தமிழ் மக்களின் சார்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் தோன்றியிருக்கமாட்டார்கள் என்பதனை குறிப்பிட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபைக்கும் சர்வதேச சமூகத்துக்கும் இது தொடர்பில் ஒரு பொறுப்பு உள்ளது. சமாதானமும், மீளநிகழாமையும் இந்த விடயங்கள் யதார்த்தமாகத் தீர்க்கப்படவேண்டும் என வலியுறுத்துகின்றன. இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# பரசிட்டமோலின் புதிய விலை ரூ.2.30

**நாட்டில் 500 மில்லிகிராம் பரசிட்டமோல் மாத்திரையின் அதிகபட்ச சில்லறை விலை ரூ.2.30 என அறிவிக்கப்பட்டுள்ளது.**

**இதேவேளை, தற்போதைய டொலர் நெருக்கடியை எதிர்நோக்கி மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு டொலர் கிடைக்காததால் அத்தியாவசிய மருந்துகளுக்கு நாட்டில் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக இலங்கை மருந்து இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

# யாழ்ப்பாணத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்றும் அதிக மக்கள் கூட்டம்!





படங்கள்: யாழ்.நிருபர்





உக்ரைன் மீதான படையெடுப்பிற்காக ரஷ்யாவைக் கண்டிக்கும் தீர்மானம் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானத்தில், உடனடியாக உக்ரைனை விட்டு ரஷ்யப் படைகளை வெளியேறுமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

உக்ரைனில் ஏறக்குறைய ஒரு வாரமாகத் தொடரும் வன்முறையை முடிவுக்குக் கொண்டுவருமாறு பெரும்பாலான நாடுகள் ரஷ்யாவைக் கேட்டுக்கொள்வதாக பெரும்பாலான நாடுகளின் பிரதிநிதிகள் உரையாற்றினர்.

பின்னர் நடந்த வாக்கெடுப்பில், தீர்மானத்திற்கு ஆதரவாக 141 நாடுகள் வாக்களித்தன. எதிராக 5 நாடுகள் வாக்களித்தன. 35 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், சீனா உள்ளிட்ட நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

ரஷ்யா, பெலாரஸ், சிரியா, வட கொரியா மற்றும் எரித்திரியா ஆகிய 5 நாடுகள் இதற்கு எதிராக வாக்களித்தன.

ஐ.நா. பொதுச்சபை தீர்மானத்தால் ரஷ்யாவைக் கட்டுப்படுத்த முடியாது என்றாலும், இராஜதந்திர ரீதியில் ரஷ்யாவைத் தனிமைப்படுத்த உதவும். இலங்கையானது இப்போதுள்ள பொருளாதார நெருக்கடியை சமாளிக்க ரஷ்யாவிடம் உதவி கோரியுள்ளது. அதனால் மதில் மேல் பூனையாக இருந்துவிட்டது. இப்போதுள்ள நிலைமையில் ரஷ்யாவையும் சமாளித்து, அமெரிக்காவையும் பகைக்காதிருக்கும் தேவை உலக நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த 20ஆம் நூற்றாண்டில் வியட்நாம், லாவோஸ், கியூபா, லெபனான், லிபியா, பனாமா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் மீது அமெரிக்கா போர் தொடுத்தது. 21ஆம் நூற்றாண்டில் ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் ஆகிய நாடுகளை அமெரிக்க இராணுவம் ஆக்கிரமித்து, ஆட்சிமாற்றங்களை ஏற்படுத்தியது. உலகின் பல்வேறு பகுதிகளில் அமெரிக்கா இதுவரை 102 போர்களை நடத்தியுள்ளது.

அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளால் எந்தவொரு நாட்டிலும் அமைதி நிலைநாட்டப்பட்டதாக தகவல் இல்லை. இதற்கு நேர்மாறாக ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளும், ஆப்கானிஸ்தானில் தலிபான்களும் தலைதூக்கியுள்ளனர்.

கடந்த 1962இல் கியூபாவில் ரஷ்ய ஏவுகணைகள் நிலைநிறுத்தப்பட்டன. அப்போது அமெரிக்கா அலறியது. பல சுற்றுப் பேச்சுவார்த்தைக்குப் பிறகு உலகின் அமைதிக்காக கியூபாவிலிருந்து ரஷ்ய ஏவுகணைகள் அப்புறப்படுத்தப்பட்டன. அதன் பிறகே அமெரிக்கா அமைதியானது.

சோவியத் யூனியன் உடைந்தபோது கடந்த 1991இல் உக்ரைன் தனிநாடாக உதயமானது. ரஷ்யாவுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில்

தமிழன்
THAMILAN தமிலன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, மார்ச் 04 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# உக்ரைன் மக்களை காப்பாற்றுங்கள்!

கடந்த 2008இல் உக்ரைனை நேட்டோவில் இணைக்க அமெரிக்கா திட்டமிட்டது. இதற்கு ரஷ்யா கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. அமெரிக்காவின் பக்கம் சாயாமல் உக்ரைனின் அப்போதைய ஆட்சியாளர்கள் ரஷ்யாவுடன் நட்பு பாராட்டி வந்தனர். இதை முறியடிக்க அமெரிக்கா திரைமறைவு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

ஒரேஞ்சுப் புரட்சி என்ற பெயரில் உக்ரைனில் உள்நாட்டு குழப்பம் ஏற்படுத்தப்பட்டது. கடந்த 2014ஆம் ஆண்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக கலவரம் வெடித்து பொலிஸார் உட்பட 130 பேர் படுகொலை செய்யப்பட்டனர். அதே ஆண்டில் ஆட்சி கலைந்தது. சோவியத் யூனியன் உடைந்து ரஷ்யா வலுவிழந்திருந்தாலும் இராணுவ பலத்தில் அமெரிக்காவுக்கு சரிசமமாக உள்ளது. தற்போது உக்ரைனை மீண்டும் நேட்டோவில் சேர்த்து அந்த நாட்டில் நேட்டோ படைகளை குவிக்க அமெரிக்கா திட்டமிட்டதால் போர் மூண்டிருக்கிறது.

இந்தப் போரில் மேற்கத்திய நாடுகளின் பின்னணி இருப்பதை யாரும் மறுக்க முடியாது. போர் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்கள் மீதான வாக்கெடுப்பில் அண்டை நாடான இந்தியா பங்கேற்காமல் நடுநிலைமை வகித்து வருகிறது. ரஷ்யாவுக்கு எதிராக வாக்களிக்கும்படி அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் வற்புறுத்தியும், இந்தியா தனது நடுநிலை வகித்தது. இலங்கையும் இந்தியாவைப் பின்பற்றுகிறது.

ஆனால், ஒரு விடயத்தை இங்கு நோக்க வேண்டும். அரசியல் கொள்கை ரீதியாக ரஷ்யாவைவிட அமெரிக்காவுடன் இந்தியா நெருக்கமாக உள்ளது. 1971 போரின்போது பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆதரவளித்தது. பங்களாதேஷில் மனித உரிமைகள் மீறப்படுவதற்கு அமெரிக்காவும் முக்கிய காரணமாக இருந்தது. அணுசக்தி சோதனை, காஷ்மீர் விவகாரம், குடியுரிமை சட்டத்திருத்தம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் இந்தியாவுக்கு எதிராகவே அமெரிக்கா செயற்பட்டிருக்கிறது. கொரோனா தடுப்பூசிக்கு தேவையான மூலப்பொருட்களை இந்தியாவுக்கு வழங்குவதற்குகூட தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தடைவிதித்தார். ஆனால், “பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்” என்று புதுடில்லி செயற்படுகிறது.

உக்ரைன் தனிநாடாக மாறிய பிறகு பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளுக்கு ஆயுதங்களை விநியோகம் செய்து வருகிறது. கடந்த ஆண்டுகூட ரி-80 ரக டாங்கிகளை பாகிஸ்தானுக்கு வழங்க உக்ரைன் ஒப்பந்தம் செய்தது. சர்வதேச அமைப்பான எப்.ஏ.டி.எவ்வின் “கிரே” பட்டியலில் பாகிஸ்தான் இருக்கும்போது அந்த நாட்டுக்கு உக்ரைன் ஆயுதங்களை வழங்குவதை எந்தவொரு மேற்கத்திய நாடும் இதுவரை கண்டிக்கவில்லை. ஏனெனில், அந்த நாடுகளுக்கு அதற்கான தார்மீக உரிமை இல்லை.

பலஸ்தீனத்துக்கு எதிரான இஸ்ரேலின் தாக்குதலில் மக்கள் கொல்லப்படும்போது உக்ரைன் வாளாவிருந்தது. ஈராக் தாக்குதலில், சிரியா மீதான ஆக்கிரமிப்பில் மக்கள் பேரழிவை சந்தித்தபோது உக்ரைன் அமைதியாக இருந்தது. இப்போது உக்ரைன் மக்கள் கொல்லப்படும்போது உக்ரைனுக்கு வலியும், வேதனையும் புரிய ஆரம்பித்துள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை அதன் சுற்றுலாத்துறை உக்ரனை நம்பியிருந்தது என்று சொன்னாலும் தப்பில்லை. அந்தளவு அது கொரோனாவுக்குப் பின்னர் உக்ரைனை நம்பியிருந்தது.

இப்போது உக்ரைனின் செல்வாக்கு சரிந்த கையோடு உடனே ரஷ்யாவின் பக்கம் நுட்பமாக சரிந்துவிட்டது கொழும்பு. அதனால்தான் ரஷ்யாவின் தாக்குதல் குறித்து இலங்கை மௌனமாக இருக்கிறது.

உலக நாடுகளை நம்பி மோசம்போய் இப்போது ரஷ்யாவிடம் அடி வாங்கிக்கொண்டிருக்கும் உக்ரைனின் நிலைமை பரிதாபத்திற்குரியது. யார் என்ன சொன்னாலும், அமைதி காத்தாலும் அங்குள்ள மக்களின் உயிர்களைக் காக்கவேண்டியதே இப்போதுள்ள கடமை. உலக நாடுகள் அதற்கான முனைப்பைக் காட்டவேண்டும், தங்களது இராஜதந்திர காய்நகர்த்தல்களை விடுத்து.



# போரில்லா உலகம் வேண்டும்!

போரில்லா உலகம் மானுடத்தின் நெடுங்கனவு. போரிட்டுப் போரிட்டு அழிவில் துயருற்ற மானுடம், போர் வேண்டாம் என்கின்ற குரலைக் காலந்தோறும் உயர்த்தியே வந்திருக்கிறது. ஆனாலும், போர் நிற்கவில்லை. எத்தனை முயற்சிகள் எடுத்தாலும் இதிலிருந்து விடுபட முடிவதில்லை. ரஷ்ய - உக்ரைன் போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், பேச்சுவார்த்தையின் வாயிலாகத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற குரல் உலகம் முழுவதும் தீவிரமாக எழுந்துள்ளது. இந்தப் போர் தொடர்பான விவாதங்களில், அது தோன்றியதற்கான காரணங்களும் முக்கியமானதாக தோன்றுகிறது.

முதல் உலகப்போர் முடிந்த பின்னர், போர்கள் நடைபெறுவதைத் தடுக்க, உலகில் முதன்முறையாக உருவாக்கப்பட்டதுதான் உலக நாடுகள் சங்கம் (League of Nations). ஒரு கட்டத்தில் இந்த அமைப்பு, உலக ஆதிக்கச் சக்திகளால் முடமாக்கப்பட்டது. இந்த அமைப்பை நோக்கி “குருவிகளின் சண்டையைத் தீர்ப்பதற்கு உலக நாடுகளின் சங்கம் பயன்படலாம். தீவிரம் கொண்ட கழுகுகளை இந்த சங்கத்தால் என்ன செய்துவிட முடியும்?” என்று கேள்வி எழுப்பியவர்தான் இரண்டாவது உலகப் பெரும்போருக்குக் காரணமான மூன்று பேரில் ஒருவரான முசோலினி.

இரண்டாம் உலகப் பெரும்போர், உலகைத் தீப்பிடித்து எரிய வைத்தது. ஐந்து கோடிக்கும் அதிகமான மக்கள் இறந்துபோனார்கள். யாருமே நினைத்துப் பார்க்காத தீமை நிறைந்த அணுகுண்டு என்னும் பேரழிவு முதன்முறையாகப் பூமியின் மீது விழுந்தது. இப்படியொரு போர் இனி வேண்டாம் என்று மனித சமுதாயமே கதறியழுதது. முடிவில், நிலையான அமைதியை நிலைநாட்டுவதாக ஐக்கிய நாடுகள் சபையும் பிறப்பெடுத்தது.

உலகப் பெரும்போர் இல்லை என்றாலும் போர் மேகங்கள் சூழ்ந்தே இருந்தன. அது பனிப்போர் அல்லது மறைமுகக் கெடுபிடி யுத்தம் என்று அழைக்கப்பட்டது. இராணுவ வெடிப்பு, பூமியின் வெப்பத்தை அதிகரிக்கச்செய்து, பெரும் அழிவை உருவாக்கும் பருவநிலை மாற்றங்களையும், இயற்கைப் பேரிடர்களையும் நிகழ்த்தின. வழக்கம்போல் ஊர்க்குருவிகளைத்தான் ஐக்கிய நாடுகள் சபையால் கட்டுப்படுத்த முடிந்தது. கழுகுகள் தங்கள் கூரிய நகங்களைக் காட்டி தொடர்ந்து உலகத்தையும், ஐக்கிய நாடுகள் அவையையும் அச்சுறுத்தி வந்தன.

இரண்டாம் உலகப் பெரும்போருக்குப் பிந்தைய யுத்த அபாயங்களை ஆராய்ந்து பார்ப்பது இப்போது மிகவும் அவசியமாகிவிட்டது. ஆனால், இது பற்றிய விவாதங்கள் உள்நோக்கம் கொண்டவையாகவும் சில சமயங்களில் இருக்கின்றன. தற்போது நடக்கும் போருக்கு அடிப்படைக் காரணம், அமெரிக்கத் தலைமையில் இயங்கும் நேட்டோ என்னும் இராணுவக் கூட்டமைப்பு என்பதற்கு உரிய கவனம் கொடுக்கப்படுவதில்லை.

‘‘உக்ரைன் மக்களுக்கும், எங்களுக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை. நேட்டோதான் பிரச்சினை’’ என்கிறது ரஷ்யா. சோவியத் ஒன்றியம் பல கூறுகளாகப் பிரிந்து சென்றபோது, 16 நாடுகள் அதிலிருந்து வெளியேறி, சுயவிருப்பத்தோடு தங்களுக்கான தனி நாடுகளை அமைத்துக்கொண்டன. இதில் சில நாடுகள் பின்னர் நேட்டோ ஆதரவு நாடுகளாக மாறின. அந்த நாடுகளின் மீது ரஷ்யா எந்தப் படையெடுப்பையும் நிகழ்த்தவில்லை. அதனால், தங்கள் பாதுகாப்புக்கு எந்த ஆபத்துமில்லை என்பதை ரஷ்யா இப்போதும் கூறுகிறது. ஆனால், உக்ரைனை அவ்வாறு பார்க்க முடியாது என்பது ரஷ்யாவின் வாதம்.

ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோ, உக்ரைன் தலைநகர் கீவ் ஆகிய இரண்டுக்குமிடையில் உள்ள தொலைவு 700 கி.மீ. ஆகும். உக்ரைன் எல்லையில் அணு ஆயுதம் உள்ளிட்ட இராணுவத் தளத்தை அமைத்தால், அது ரஷ்யாவுக்கு நிரந்தர அச்சுறுத்தலாக அமையும். அதனால்தான், “எங்கள் கழுத்துக்கு அருகில் கத்தி தொங்கிக்கொண்டிருக்கிறது” என்கிறது ரஷ்யா. உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலென்ஸ்கி நேட்டோவின் கைப்பாவையாகிவிட்டார் என்பதுதான் ரஷ்யாவின் குற்றச்சாட்டு. இவர் தொடர்ந்து அரசியலில் செயற்பட்டவர் அல்லர். ஒரு நகைச்சுவை நடிகராகப் புகழ்பெற்றிருந்த இவரை, உள்நாட்டில் ஒரு குழப்பத்தை உருவாக்கி, அமெரிக்க ஆதரவு ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டார்கள். உக்ரைனில் ரஷ்யமொழி பேசும் மக்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்துவருகிறார்கள். இவர்களில், 15 ஆயிரம் பேர் இவரது ஆட்சிக்காலத்தில் கொல்லப்பட்டதாகவும் இவர் மீது ஒரு குற்றசாட்டு வைக்கப்பட்டுள்ளது.

மற்றொன்றையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையில் ரஷ்யாவுக்கு எதிராகக் கண்டனத் தீர்மானம் வந்தபோது சீனா, இந்தியா, ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகள் ஆதரவு தெரிவிக்காமல் நடுநிலை வகித்தன. இதற்கான காரணங்களையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும். காகசஸஸ் மலையும், கருங்கடலும் இணைந்த இந்தப் பிரதேசம், ஆசிய-ஐரோப்பிய நாடுகளில் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகக் கருதப்படுகிறது. நேட்டோவின், அதாவது அமெரிக்காவின் ஆயுதத்தளமாக இது மாறுவது தங்களுக்குப் பெரும் ஆபத்து என்று சீனாவும், ஐக்கிய அரபு இராச்சியமும் நினைக்கின்றன. இந்தியாவுக்கு வேறு காரணங்களும் இருக்கலாம்.

நேட்டோ என்பது என்ன, அதன் இன்றைய தேவைதான் என்ன என்ற கேள்வி ரஷ்ய-உக்ரைன் போர்ப் பின்னணியில் தீவிரமாக எழுந்துள்ளது. ஒரு காலத்தில், சோஷலிச நாடுகளின் கூட்டணியாக வார்சா இருப்பதால் நாங்கள் செயற்படுகிறோம் என்று பதிலளித்தது நேட்டோ. 1990க்குப் பின்னர் வார்சா செயற்படவில்லை. பிறகு, ‘நேட்டோ’ ஏன் இன்னும் தொடர வேண்டும் என்ற கேள்வி எழுந்துள்ளது.


அமெரிக்கா தனது இராணுவ மேலாதிக்கத்தை உலகெங்கும் நிறுவிக்கொள்வதற்கு நேட்டோ ஒவ்வொரு நாட்டிலும் மறைவிடங்களை உருவாக்கித்தருகிறது. இதைப் போலவே, அதன் துணையோடு மிகப் பெரிய அளவில் ஆயுத வியாபாரமும் நடைபெறுகிறது. உலகின் மறுபுறத்தில் பசியாலும், நோயாலும் மக்கள் துயரத்தின் எல்லைக்கே சென்றுகொண்டிருக்கிறார்கள். இந்நிலையிலும், உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையிட்டு, அங்கு அமைதியை ஏற்படுத்துவதாகக் கூறித் தனது இராணுவ அதிகாரத்தை நிறுவ முயலும் எந்தவொரு இராணுவக் கூட்டணியும் இனியும் தொடரக் கூடாது. ஐக்கிய நாடுகள் அவையே போதுமானது. அதை இன்னும் பலப்படுத்தினாலே போதுமானது.

உக்ரைன் மீதான போரை ரஷ்யா உடனடியாக நிறுத்த வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக்கொண்டுள்ளது. உக்ரைனின் இறையாண்மைக்கும் எல்லைப் பாதுகாப்புக்கும் மதிப்பளித்து, இரண்டு நாடுகளும் பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க வேண்டும்.

**- சி.மகேந்திரன்,**
**மூத்த தலைவர்,**
**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி**

## தவக்கால சிந்தனை

### நன்மையை நாடுங்கள்; தீமையைத் தேடாதீர்கள்



அக்காலத்தில் யோவானின் சீடர் இயேசுவிடம் வந்து, நாங்களும் பரிசேயரும் அதிகமாக நோன்பிருக்க, உம்முடைய சீடர்கள் ஏன் நோன்பிருப்பதில்லை என்றனர். அதற்கு இயேசு அவர்களை நோக்கி, மணமகன் தங்களோடு இருக்கும்வரை மணவிருந்தினர்கள் துக்கம் கொண்டாட முடியுமா? மணமகன் அவர்களை விட்டுப் பிரியவேண்டிய காலம் வரும். அப்போது அவர்களும் நோன்பிருப்பார்கள்.

தமது சீடர்கள் நோன்பிருக்காததை நியாயப்படுத்திப் பேசிய இயேசு, கடைசியாக சொன்ன சொற்கள்: “அவர்களும் நோன்பிருப்பார்கள்” என்பதுதான். எனவே, நாமும் நோன்பிருக்க வேண்டும். “எங்கள் ஒறுத்தல் முயற்சியால் மனதை மேலே எழுப்புகின்றீர். ஆணவத்தை அடக்குகின்றீர். நற்பலன்களையும், அதன் பரிசான நல்வாழ்வையும், எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக வழங்குகின்றீர்”. ஆம், நோன்பிருப்பதால், பல நன்மைகள் நிகழ்கின்றன. அவற்றில் மூன்றைச் சொல்லி, நன்றி சொல்கிறது இத்திருப்பலிச் செபம். நோன்பிருப்பதால் நமது ஆணவம் அடங்குகிறது. மனம் இறைவனை நோக்கி எழும்புகிறது. இறைவனும் நமது நோன்பை, இழப்பை ஏற்று, நற்பலனைப் பரிசாகத் தருகின்றார் என்பதுதான் நமது நம்பிக்கை, இறையியல். எனவே, நாமும் நோன்பிருப்போம். நல்வாழ்வில் வளர்வோம்.

## நக்கல் நமசிவாயம்

**வரிசைகளில நிக்கிறதுக்கும் லீவு போடவேண்டியிருக்குது எண்டா பாருங்களன்..!**



# இன்றைய நாளில்...

* 1275 – சீன வானியலாளர்கள் முழுமையான சூரிய கிரகணத்தை அவதானித்தனர்.
* 1493 – கொலம்பஸ், கரீபியன் தீவுகளுக்கான பயணத்தை முடித்துக் கொண்டு லிஸ்பன் திரும்பினார்.
* 1591 – ரொல்ஃப் பிட்ச் என்பவர் இலங்கையில் முதலாவது ஆங்கிலேயராக தரையிறங்கினார்.
* 1790 – பிரான்ஸ் 83 மாவட்டங்களாக பிரிக்கப்பட்டது.
* 1837 – சிக்காகோ நகரம் அமைக்கப்பட்டது.
* 1882 – பிரித்தானியாவின் முதலாவது மின்சார டிராம் வண்டி கிழக்கு லண்டனில் ஓடவிடப்பட்டது.
* 1959 – ஐக்கிய அமெரிக்காவின் பயனியர்-4 உலகின் இரண்டாவது (அமெரிக்காவின் முதலாவது) செயற்கைக் கோள் ஆனது.
* 1986 – சோவியத் வேகா-1 விண்கலம் ஏலியின் வால்வெள்ளியின் கருவின் படிமங்களை முதன்முதலாக புவிக்கு அனுப்பியது.
* 1994 – கொலம்பியா-16 விண்ணோடம் ஏவப்பட்டது.
* 2006 – பயனியர்-10 விண்கலத்துடன் மேற்கொள்ளப்பட்ட கடைசித்தொடர்பு தோல்வியில் முடிந்தது.
* 2009 – அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம், சூடான் அரச தலைவர் உமர் அல்-பஷீர் மீது போர்க்குற்றங்களும், மானுடத்துக்கு எதிரான குற்றங்களும் சுமத்தி பிடியாணை பிறப்பித்தது.

தத்துவம் தங்கராசு



எரிபொருள் நிரப்புவதற்காக வரிசைகளில் நிற்கும் பலர் இரவு சாப்பாட்டை வீடுகளில் இருந்து எடுத்து வந்து உண்ணுகின்றனர். சிலரோ வரிசைகளில் நின்று இடம்பிடித்துக் கொடுப்பதற்காக பணம் அறவிடுகின்றனர். இன்னும் சிலரோ அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி எரிபொருள் பெறுகின்றனர். மேலும் பலரோ குறுக்கு வழியில் அதாவது சற்று விலை அதிகமாக கொடுத்து எரிபொருள் வாங்குகின்றனர்.

எரிபொருள் இல்லாத நிலைமை நாட்டில் மக்களை படாத பாடு படுத்துகிறது. இந்த எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பில் மக்கள் தாமாகவே வந்து ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் தைரியத்தை கொடுத்திருக்கிறது.

இப்படித்தான் நேற்று பிரபல பிக்கு தம்பர அமில தேரர் தனது வாகனத்திற்கு எரிபொருள் நிரப்ப சாரதியுடன் சென்றார். டீசல் நிரப்பிய பின்னர் பெரிய கேன்கள் இரண்டில் அந்த சாரதி டீசலை நிரப்ப முயன்றபோது மக்கள் எதிர்ப்பினை வெளியிட்டதை ஊடகங்களில் காணமுடிந்தது. மக்கள் இருக்கும் கோபத்திற்கு யாராய் இருந்தால் என்ன/இப்படி நடந்துகொண்டால் வாங்கிக்கட்டுவார்கள் தானே...?

# இராமர், இராவணன், முருகன் வாழ்ந்த இடம் இலங்கை;

# அதனால்தான் நான் பயமின்றி வந்துள்ளேன்!

## தென்னிந்திய சினிமா நடன இயக்குனர் கலா மாஸ்டர் வவுனியாவில் தெரிவிப்பு

•வவுனியா நிருபர்

இலங்கை கலைஞர்களிடம் நிறைய திறமை இருக்கிறது. அவர்களையும் இந்திய திரைப்படத் துறைக்குள் உள்வாங்க வேண்டும் - என இந்திய திரைப்பட நடன இயக்குனரும், மான் ஆட மயில் ஆட நிகழ்ச்சி தொகுப்பாளருமான கலா மாஸ்ரர் தெரிவித்துள்ளார்.

வவுனியாவிற்கு வருகை தந்த அவர் வவுனியா, குருமன்காடு பகுதியிலுள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று (03) நடத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்டகாலத்திற்கு பின்னர் நான் ஸ்ரீ லங்கா வந்துள்ளேன். நான் பல தடவைகள் படப்பிடிப்புக்காக கொழும்பு வந்திருக்கின்றேன். படப்பிடிப்புக்கு சென்று அதனை முடித்துவிட்டு மீண்டும் இந்தியா சென்று விடுவோம். முதல் தடவையாக நான் வவுனியா வந்துள்ளேன். என்னுடைய அதிக ரசிகர்கள் இலங்கையை சேர்ந்த தமிழர்கள்தான். நான் கனடா, லண்டன் என பல இடங்களில் நடன வகுப்புகள் எடுக்கின்றேன். அங்கும் ஈழத் தமிழர்களே அதிகம் வருகிறார்கள்.

இலங்கையில் இராமர், இராவணன் இருந்த இடங்கள் உள்ளன. அதனை பார்க்க வேண்டும் என்ற ஆசை. இலங்கைத் தமிழர்களுக்காகவும் எனது வகுப்புகள் இருக்கும். இலங்கைத் தமிழர்களிடம் நல்ல திறமை உள்ளது. லொஸ்லியா எல்லாம் இலங்கையிலிருந்து வந்து இந்தியாவில் பிரபல்யமாக உள்ளார். இதேபோல் கனடாவிலும் எனது மாணவர்கள் உள்ளனர். வயது வேறுபாடின்றி எல்லோரிடமும் ஒரு திறமை இருக்கிறது. சினிமாவைப் பொறுத்தவரை வயது ஒரு பிரச்சினையே கிடையாது. திறமை தான் முக்கியம். இலங்கை கலைஞர்களையும் இந்திய திரைப்படத்துறைக்குள் உள்வாங்க வேண்டும். அதற்கான முயற்சிகளை நான் மேற்கொள்வேன்.

யுத்தம் காரணமாக இலங்கைத் தமிழர்கள் பாதிக்கப்பட்டமை பற்றி எனக்கு நிறைய கதைகள் தெரியும். அவற்றை கேட்டு நான் வேதனையடைந்திருக்கின்றேன். நேரில் பார்க்கும்போது நிறைய கவலையாக இருந்தது. சில இடங்களில் நான் கண்ணீர் விட்டு அழுது கூட இருக்கின்றேன். இந்த உலகத்தில் எல்லோருக்கும் சுதந்திரம் உண்டு. யாரும் யாருக்கும் அடிமை கிடையாது. கனடா, லண்டன் என பல நாடுகளில் தமிழர்கள் கோடீஸ்வரர்களாக இருக்கிறார்கள். அந்த நாடுகள் அதற்கு உரிமை கொடுத்துள்ளன. அப்படியிருக்கும்போது ஏன் இங்கு அப்படி கொடுக்க முடியாது? நான் எப்போதும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக இருப்பேன்.




நான் கொழும்பு போகின்றேன், வவுனியா போகின்றேன் என்று சொன்னபோது எல்லோரும் அங்கு போறியா, பயமில்லையா என்றார்கள். ஆனால், எந்தப் பயமும் கிடையாது. நானும் கணவனும் மட்டுமே தனியாக வந்துள்ளோம். எல்லா இடத்தையும் பார்க்கின்றோம். இது இராமர், முருகன், இராவணன் வாழ்ந்த இடம். இங்கு பயமில்லாமல் வரலாம். எந்த இடத்திற்கும் செல்லலாம். இங்கு வாழும் மக்களை எல்லோரும் வந்து பார்க்க வேண்டும். அது ஒரு பாடம். இந்த மக்களுக்காக நாம் குரல் கொடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# கடனட்டைகளுக்கு நாட்டில் தட்டுப்பாடு

வங்கிகளினால் வழங்கப்படும் கடனட்டைகள் மற்றும் வரவட்டைகள் என்பவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


குறித்த அட்டைகளை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் மைக்ரோ சிப்புக்கு உலகம் முழுவதும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அதனை இறக்குமதிசெய்யும் லேக்ஹவுஸ் டெக்னோலஜிஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி டோனி ஜோன்புள்ளே தெரிவித்துள்ளார்.

அத்துடன், டொலர் தட்டுப்பாடும் அதனை இறக்குமதி செய்வதில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலை காரணமாக புதிய கடனட்டைகள், முற்கொடுப்பனவு அட்டைகள் மற்றும் காலாவதியான அட்டைகளுக்கான புதிய அட்டை என்பவற்றை பெற்றுக்கொள்வதில் மக்கள் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்த ஆண்டு இறுதிவரையில் நாட்டில் 21,71,348 கடனட்டைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், 1,76,96,356 வரவட்டைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

# மார்ச் 8 முதல் 11ஆம் திகதிவரை நாடாளுமன்றக் கூட்டத்தொடர்



நாடாளுமன்றம் மார்ச் மாதம் 08 ஆம் திகதிமுதல் நான்கு நாட்களுக்கு கூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சித் தலைவர்களுக்கிடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மார்ச் மாதம் 8ஆம் திகதிமுதல் 11ஆம் திகதிவரையில் நாடாளுமன்றம் கூடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 03.03.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 032 073 | 038 026 |
| கனேடியன் டொலர் | 044 6257 | 050 5 46 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 20 0212 | 21 2864 |
| யூரோ | 11 02 | 118 3641 |
| ஜப்பான் யென் | 0 6 60 | 0 660 |
| சிங்கப்பூர் டொலர் | 034 7750 | 04 5025 |
| ஸ்ரேலிங் பவுன் | 152 11 | 160 5016 |
| சுவிஸ் பிராங்க் | 103 3701 | 111 560 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 1 1 8881 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 424 3774 |
| குவைட் | குவைட் தினார் | 555 3286 |
| ஓமான் | ஓமான் றியால் | 413 3 22 |
| கட்டார் | கட்டார் றியால் | 44 3401 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 7025 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 43 8563 |

# மேல் நீதிமன்ற நீதிபதிகள் 13 பேர் ஜனாதிபதியினால் நியமனம்









ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பதின்மூன்று புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று (03) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

ஏ.ஜி.அலுத்கே (மாவட்ட நீதிபதி), ஆர்.ஆர்.ஜே.யு.டி.கே.ராஜகருணா (மாவட்ட நீதிபதி), ஆர்.ஏ.டி.யு.என்.ரணதுங்க (நீதவான்), டி.எம்.சீ.எஸ்.குணசேகர (மாவட்ட நீதிபதி), எம்.பிரபாத் ரணசிங்க (மாவட்ட நீதிபதி), ஆர்.எம்.எஸ்.பி.சந்திரசிறி (பிரதான நீதவான்), ஆர்.வெலிவத்த (மாவட்ட நீதிபதி), ஜி.எல்.பிரியந்த (நீதவான்), ஏ.நிஷாந்த பீரிஸ் (மாவட்ட நீதிபதி ), எஸ்.எம்.ஏ.எஸ்.மஞ்சநாயக்க ( மாவட்ட நீதிபதி ), எல். சமத் மதநாயக்க ( மாவட்ட நீதிபதி), வி.எம்.வீரசூரிய (சிரேஷ்ட அரச சட்டத்தரணி), எச்.ஏ.டி.என்.ஹேவாவசம் (சிரேஷ்ட அரச சட்டத்தரணி ) ஆகியோரே புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிரேஷ்ட தொழில் அனுபவத்தின் அடிப்படையில் புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், நாட்டில் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டவும், வழக்கு விசாரணைகளில் தாமதம் ஏற்படுவதைத் தடுக்கவும் தான் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி நீதிபதிகளிடம் தெரிவித்தாரென ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# இந்தியாவில் பட்ட மற்றும் பட்டப்பின் படிப்பிற்கான புலமைப்பரிசில்கள்

கலாசார உறவுகளுக்கான இந்தியக் கவுன்சிலின் (ICCR) 2022-2023 கல்வி அமர்வுகளுக்கான பின்வரும் புலமைப்பரிசில்களுக்கு கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் விண்ணப்பங்களை கோரியுள்ளது.

**நேரு ஞாபகார்த்த புலமைப் பரிசில் திட்டம்:**

பொறியியல், விஞ்ஞானம், வியாபாரம், பொருளியல், வர்த்தகம், மானுடவியல் மற்றும் கலை உட்பட (மருத்துவம்/துணை மருத்துவம், ஆடை வடிவமைப்பு & சட்டத்துறை கற்கை நெறிகள் தவிர்ந்தவை) அனைத்து பட்டப்படிப்பு (Undergraduate) கற்கைநெறிகளை இந்தத் திட்டம் உள்ளடக்குகின்றது.

**மௌலானா ஆசாத் புலமைப் பரிசில் திட்டம்:**

பொறியியல், விஞ்ஞானம், பொருளியல், வர்த்தகம், மானுடவியல் மற்றும் கலை உட்பட (மருத்துவம்/துணை மருத்துவம், ஆடை வடிவமைப்பு & சட்டத்துறை கற்கைநெறிகள் தவிர்ந்தவை) முதுமாணிப் பட்டக் (Masters Degrees) கற்கைகளை உள்ளடக்குகிறது. எவ்வாறாயினும், பொறியியல், விஞ்ஞானம் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**ராஜிவ் காந்தி புலமைப்பரிசில் திட்டம்:**



B.E அல்லது B.Tech பட்டப் படிப்புகளுக்கு வழிசமைக்கும் தகவல் தொழில்நுட்பத் துறைகளிலான பட்டப்படிப்புக் கற்கைநெறிகள்.

இந்தப் புலமைப்பரிசில்களை வழங்குவதற்காக தகுதிவாய்ந்த இலங்கைப் பிரஜைகளை இந்திய அரசாங்கம் தெரிவுசெய்கிறது. இந்தியாவிலுள்ள சிறந்த பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின்படிப்பு பட்டங்களுக்கான கற்கைகளைத் தொடர்வதற்கு தகுதிவாய்ந்தவந்தவர்களை தெரிவுசெய்யும் செயற்பாடுகள் இலங்கை கல்வி அமைச்சுடனான கலந்தாலோசனையில் மேற்கொள்ளப்படும். அனைத்துப் புலமைப் பரிசில்களும் கற்கைநெறிகளின் முழுமையான காலத்திற்கும் கல்விக் கட்டணம், மாதாந்த அடிப்படைச் சலுகைக் கட்டணம் மற்றும் புத்தகங்கள் & காகிதாதிகளுக்கான வருடாந்த கொடுப்பனவு என்பவற்றை உள்ளடக்குகின்றது.

தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பல்கலைக்கழக வளாகத்தினுள் விடுதி வசதிகளும் வழங்கப்படும். மேலும், இந்தியாவிலுள்ள அனைத்து ஐ.சி.சி.ஆர். புலமைப்பரிசில் பெற்றவர்களுக்கும் ஏனைய பல்வேறு அனுகூலங்களுடன் இந்தியாவிலுள்ள அண்மித்த பயணச் சேரிடங்களுக்கான விமானக் கட்டணம் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு கல்விச் சுற்றுலாவுக்கான வருடாந்தக் கொடுப்பனவு என்பனவும் வழங்கப்படும்.

இவ்விடயம் தொடர்பாக தேவையான தகவல்களை கல்வி அமைச்சின் www.mohe.gov.lk எனும் இணையத்தள முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும். இந்த கற்கைநெறிகளுக்கான தகைமை மற்றும் தெரிவுசெய்தல் நடைமுறை தொடர்பாக மேலும் அறிந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் இலங்கை கல்வி அமைச்சு அல்லது கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் ஆகியவற்றை அணுகி தகவல்களைப் பெறமுடியும்.

# அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஜியூன் சங் நிதியமைச்சர் பெசிலுடன் சந்திப்பு



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஜியூன் சங் நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

இலங்கை தற்போது எதிர்கொள்ளும் பொருளாதார ரீதியான சவால்கள் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்கு எவ்வாறு ஒத்துழைக்க முடியும் என்பது குறித்து இதன்போது பேசியதாக அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஜியூன் சங் தெரிவித்துள்ளார்.

செழிப்பான, புதுமையான மற்றும் அண்டை நாடுகளுடன் இணைக்கப்பட்ட இலங்கைப் பொருளாதாரத்தை நாம் அனைவரும் விரும்புகிறோம். இதனை நோக்கமாகக் கொண்டே கொவிட் தொற்று நோய்க்குப் பின்னரான இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு அமெரிக்கா 17.9 மில்லியன் அமெரிக்க டொலர்களை பங்களிப்புச் செய்தது எனவும் அமெரிக்கத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

# சுகாதார தொழிற்சங்கங்களின் போராட்டம் நுவரெலியாவில் நோயாளர்கள் பாதிப்பு





(செ.திவாகரன்)

சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சுகாதார தொழிற்சங்கங்கள் நேற்று இரண்டாவது நாளாகவும் நாடளாவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்தன.

இதன்படி, தாதியர்கள், வைத்திய ஆய்வுகூட நிபுணர்கள், மருந்தாளர்கள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் இவ்வாறு தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்களின் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் நாளாந்த சேவைகள் பாதிக்கப்பட்டன.

நோயாளர்கள் மருந்துகளை பெற்றுக்கொள்ள பாரிய சிரமத்துக்கு முகங்கொடுத்தனர். வைத்தியசாலையில் அவசர சிகிச்சை, மகப்பேறு என்பன வழமைபோல் இயங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், வைத்தியசாலைகளில் மருந்து வழங்கும் நடவடிக்கை இடை நிறுத்தப்பட்டதுடன், நோயாளர்கள் ஏமாற்றத்துடன் சென்றனர்.

மேலும் நோயாளர்கள் பலர் நீண்ட தூரத்தில் இருந்து வந்தும் சிகிச்சை பெற முடியாமல் அவதிப்பட்டனர். இதேவேளை, நோயாளர்களுக்கான அனுமதி மட்டுப்படுத்தப்பட்டதால் நுவரெலியா மாவட்ட பொது வைத்திய சாலைக்கு வருவோரின் எண்ணிக்கை குறைந் துள்ளமையை காணமுடிந்தது.

# மஞ்சள் உற்பத்தியில் நாடு தன்னிறைவடைந்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜானக்க எம்பிலிபிட்டியில் தெரிவிப்பு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)



தாய்நாட்டின் விவசாயிகள் மீது நம்பிக்கை வைக்கும் அரசாங்கம் என்றவகையில் விவசாயிகள் மீது வைத்த நம்பிக்கை வீண் போகவில்லை. அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பல உதவிகளின் பயனாக இன்று நாடு மஞ்சள் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ளது - என ஏற்றுமதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜானக்க வக்கும்புர நேற்று தெரிவித்தார்.

எம்பிலிபிட்டியவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கொவிட்-19 நெருக்கடி காலத்திலும் அதன் பின்பும் ஒரு கிலோ மஞ்சள் தூளின் விலை 8 ஆயிரம் ரூபா வரையில் சந்தையில் விற்கப்பட்டது. இதனால் மக்களும் அரசாங்கமும் கஷ்டமான சூழ்நிலைகளை எதிர்நோக்கவேண்டி ஏற்பட்டது. இந்நிலையில் ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய நாட்டில் மஞ்சள் உற்பத்தியை மேற்கொண்டதுடன் இதில் தன்னிறைவு காணும் வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

இதனால் நாட்டின் மஞ்சள் உற்பத்தி அதிகரித்து குறைந்த விலையில் மஞ்சள் தூளை நாட்டு மக்களுக்கு வழங்க முடியுமாகியுள்ளது. நாடு மஞ்சள் உற்பத்தியில் தன்னிறைவடைந்து உள்ளதால் விவசாயிகளுக்குத் திருப்தியான விலையும் பாவனையாளர்களுக்கு தரமான மஞ்சள் தூள் நியாயமான விலையிலும் இன்று கிடைக்கிறது. இந்த தூய மஞ்சள் தூள் சதொச நிலையங்களில் மாத்திரமன்றி பொதுச் சந்தையிலும் விலைக்கு வாங்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது

(செ.தி. பெருமாள்)

பொகவந்தலாவை, கெசல்கமு ஓயாவில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நேற்றுமுன்தினம் இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடமிருந்து மாணிக்கக்கல் அகழ்வதற்காக பயன்படுத்திய உபகரணங் களும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 07 ஆம் திகதி ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.







பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமாரின் புதல்வரின் ஏற்பாட்டில் மிகவும் பின்தங்கிய பிரதேசமான ஹல்துமுல்லை உடவேரிய மற்றும் லைபன் பகுதியில் வாழ்ந்துவரும் 125 குடும்பங்களுக்கு இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் நாடாளுமன்ற உறுப்பினரின் மக்கள் தொடர்பு அதிகாரி பாபு ஆனந்தராஜா மற்றும் பிரதேச இணைப்பாளர் எம். ஜெயசங்கர் ஆகியோரினால் நேற்று (03) கையளிக்கப்பட்டன. (படங்கள்: பதுளை செய்தியாளர்)

# எட்டியாந்தோட்டையில் இரு நாட்கள் வீதியில் காத்திருந்த சாரதிகள்

(அருண் யுகேஷ்)

எட்டியாந்தோட்டை, அங்குருவெல்ல எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரு நாட் களாக நீண்ட வரிசை காணப்பட்டதுடன் சாரதிகள் கண்விழித்து காத்திருந்தனர்.





அங்கு சுமார் மூன்று கிலோமீற்றர் தூரம் வரை வாகனங்கள் வரிசையில் நிறுத்திவைக்கபட்டிருந்தன.

அநுராதபுரம், புத்தளம் ஆகிய பகுதி களுக்கு மரக்கறிகளை ஏற்றிச்சென்ற லொறிகள் பல மணி நேரமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

மேலும், நீண்ட வரிசையில் வாகனங்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததால் போக்கு வரத்து பாதிக்கப்பட்டிருந்ததுடன், எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது.

# அரசாங்கத்தை கண்டித்து ஹட்டனில் பாரிய போராட்டம் முன்னெடுப்பு





(க.கிஷாந்தன்)

எரிபொருளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, மின்சாரம் துண்டிப்பு மற்றும் வாழ்க்கைச்சுமை அதிகரிப்பு ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அரசாங்கத்தை கண்டித்தும் ஹட்டன், கினிகத்தேனை நகரில் நேற்று (03) போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.



ஜே.வி.பியினர் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போராட்டத்தில் அக்கட்சியின் அமைப்பாளர்கள், ஏற்பாட்டாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றிருந்தனர்.

எரிபொருள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், தடையின்றி மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என போராட்டக்காரர்கள் வலியுறுத்தியதுடன், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு அரசே பொறுப்புக்கூற வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

"ஏழரை மணிநேர மின்சாரம் துண்டிப்பால் சிறு முயற்சியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தொழில் நடவடிக்கைகள் ஸ்தம்பித்துள்ளன. இதற்கிடையில் எரிபொருளும் இல்லை. அதனால் சாரதிகள் உட்பட பல துறையினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே நாட்டில் பல பிரச்சினைகள் உள்ள நிலையில், இப்படியான பிரச்சினைகளால் மக்கள் மீண்டெழ முடியாதுள்ளது" - எனவும் போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

# சப்ரகமுவ சுகாதாரத் திணைக்களத்திற்கு புதிய கணக்காளர் நியமனம்!

(சிவா ஸ்ரீதரராவ)

சப்ரகமுவ மாகாண சுகாதாரத் திணைக்களத்திற்கு புதிய கணக்காளராக பி.ஏ.டி.புஸ்பகுமார நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதம் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவினால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.



சப்ரகமுவ மாகாண அரச சேவைகள் திணைக்களத்தின் மூலம் மேற்படி புதிய கணக்காளர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் சுனில் ஜயலத், மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் பிரபாத் உதாகர, மாகாண பிரதி பிரதான செயலாளர் பிரியன்கா ஜயசுந்தர ஆகியோர் கலந்துகொண்டனர்.








அம்பாறை மாவட்டத்தை பிறப்பிடமாகவும் மாத்தளை நகரை வசிப்பிடமாகக் கொண்டவரும் பொறியியலாளரும் அகமட் லெப்பே பவுட்டேஷனின் ஸ்தாபகத் தலைவருமான ஏ.எல்.எம்.பர்ஷாத்திடம் அம்பாறை மாவட்டத்தின் பரிப்பத்தான் சேனை அஸ்ஸபா வித்தியாலயத்தின் முக்கிய தேவைகளில் ஒன்றான இஸ்லாமிய கலாசார மண்டபமொன்றை நிர்மாணித்து தரும்படி கல்லூரி அதிபர் டீ. எம். சுபைடீன் உட்பட ஆசிரியர் குழாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர் தனது சொந்த நிதிமூலம் மேற்படி கட்டிடத்தை வழங்கிட முன்வந்துள்ளார். அதன்படி இடம்பெற்ற அடிக்கல் நாட்டும் வைபவத்தின்போது கல்லூரி அதிபர் சுபைடீன் உரை நிகழ்த்துவதையும் பொறியியலாளர் பர்ஷாத், நைட்டா அதிகாரி எஸ்.ஏ.எம்.அஸ்ரப் கிராம சேவை அதிகாரி இஸ்மினா ஆகியோர் அடிக்கல் நாட்டி வைப்பதையும் மௌளவி, க்ராம் துவா பிரார்த்தனை நடத்துவதையும் படங்களில் காணலாம். (மாத்தளை செய்தியாளர்)

# விவசாய இயந்திரமயமாக்கல் செயற்பாட்டிற்கு DIMO விவசாய – வணிகம் உடன் சியபத பினான்ஸ் பி.எல்.சி. கைகோர்த்துள்ளது

சம்பத் வங்கி பி.எல்.சியின் முழு உரிமம்கொண்ட துணை நிறுவனமான சியபத பினான்ஸ் பி.எல்.சி, உள்ளூர் விவசாயத்துறையை மேம்படுத்தும் நோக்கத்துடன் DIMO விவசாய இயந்திரப் பாவனையாளர்களுக்கு பிரத்தியேகமான குத்தகை தீர்வுகளை வழங்குவதற்காக அண்மையில், இலங்கையின் முன்னணி கூட்டு நிறுவனங்களில் ஒன்றான DIMOவின் விவசாயப் பிரிவான DIMO விவசாய - வணிகம் (DIMO Agribusinesses) உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டது.

இலங்கைப் பொருளாதாரத்திற்கு விவசாயத்துறையின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்ட சியபத பினான்ஸ், விவசாய தொழில்முனைவோரின் வசதிக்காக இந்த வசதியை அதன் “விவசாய குத்தகைத் திட்டம்” (Agri Lease Program) மூலம் ஆரம்பித்தது. இந்த ஒப்பந்தம் டிராக்டர்கள் மற்றும் ஒருங்கிணைந்த அறுவடை இயந்திரங்கள் உட்பட DIMO விவசாய இயந்திரங்களை கொள்வனவுசெய்ய விரும்பும் வாடிக்கையாளர்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் பிரத்தியேக குத்தகைப் பொதிகளை வழங்குகிறது. சியபத பினான்ஸ் பி.எல்.சியின் “விவசாய குத்தகைத் திட்டம்”(Agri Lease Program) குறைந்த தவணை கொடுப்பனவுகள், மாதாந்த அல்லது பருவகால அடிப்படையில் நெகிழ்வுத்தன்மைமிக்க மீள் செலுத்தும் வசதிகள் மற்றும் குறைந்தபட்ச ஆவணத் தேவைகளுடன் தொல்லையற்ற விரைவான ஒப்புதல்களை வழங்குகிறது. இக் குறைந்த தவணை கொடுப்பனவுகள் மற்றும் நெகிழ்வுத்தன்மைமிக்க மீள் செலுத்தும் வசதிகள் விவசாயிகளின் நிதித் திருப்பிச் செலுத்தும் சுமைகளைக் குறைக்கும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளன.




இந்த தனித்துவமான பரஸ்பர நன்மை பயக்கும் பங்குடைமையினைக் குறிக்கும் முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தம் சியபத பினான்ஸ் பி.எல்.சியின் முகாமைத்துவ பணிப்பாளர் ஆனந்த செனவிரத்ன மற்றும் DIMO இன் முகாமைத்துவப் பணிப்பாளர் ராஜீவ் பண்டிதகே ஆகியோரால் இரு நிறுவனங்களின் சிரேஷ்ட முகாமையாளர் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது.

DIMO Agribusinesses ஆனது சியபத பினான்ஸ் பி.எல்.சி. வாடிக்கை யாளர்களுக்கு பிரத்தியேகமாக பல நன்மைகளை வழங்கத் தயாராக உள்ளது, இலவச பதிவு, விவசாயிகளுக்கான இலவச கிட் மற்றும் மூன்று இலவச வாகன சேவைகளுடன் ஒயில் ஃபில்டர் உட்பட மேலதிகமாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி சாதனங்களுக்கான இலவச GPS உள்ளடங்கலாக எல்லைகளற்ற சிறப்பு தள்ளுபடிகள் இதில் உள்ளடங்கும். இந்தப் பிரத்தியேக நன்மைகள் நாட்டில் விவசாய இயந்திரமயமாக்கலை விரைவுபடுத்துவதற்கும் விவசாய இயந்திரங்களை எளிதாக அணுகவும் உதவிடும்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பங்கேற்பாளர்கள் மத்தியில் உரையாற்றிய சியபத பினான்ஸ் பி.எல்.சியின் முகாமைத்துவப் பணிப்பாளர்ஆனந்த செனவிரத்ன, “எமது வாடிக்கையாளர்களுக்கு எப்பொழுதும் முன்னுரிமை வழங்கப்படுவதுடன், விவசாயத் தொழிற்றுறைக்கு வசதியான நிதித் தீர்வுகளை மேம்படுத்துவதற்கு எங்களால் இயன்றளவு நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். நம் நாடு விவசாயத் துறையை பெரிதும் நம்பியுள்ளது, மேலும் பல விவசாயிகள் அவர்கள் செயல்பாட்டில் எதிர்கொள்ளும் பல சிரமங்கள் காரணமாக தங்கள் இயந்திரங்களை அணுகுவது, முதலீடு செய்வது மற்றும் மேம்படுத்துவது கடினமாக உள்ளது, ஏனெனில். DIMO விவசாய - வணிகம் உடன் கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம், விவசாயிகள் தங்கள் செயற்பாடுகளைத் தொடரவும் மேம்படுத்தவும் ஊக்குவிக்கிறோம். இது ஒரு சிறந்த மூலோபாய கூட்டாண்மையாகும், இது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த வாய்ப்புகள் மற்றும் தெரிவுகளை வழங்குகிறது. சியபத பினான்ஸ் பி.எல்.சியின் தனிப் பயனாக்கப்பட்ட குத்தகைத் திட்டங்களும், DIMO அக்ரி பிஸ்னஸின் (விவசாய நிதி) இணையற்ற நம்பகத்தன்மையும், வாடிக்கையாளர்களுக்கு வசதியான, தனிப் பயனாக்கப்பட்ட மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய தீர்வை உறுதிசெய்கிறது” - எனக் கூறினார்.

DIMO இன் தலைமைச் செயற்பாட்டு அதிகாரி ராஜீவ் பண்டிதகே கூறுகையில், “நாட்டிலுள்ள விவசாய சமூகத்தின் கனவுகள் மற்றும் அபிலாஷைகளுக்கு வலுவூட்டும் அதேவேளை, உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நவீன தொழில்நுட்பத்துடன் உள்ளூர் விவசாயத் துறையை பலப்படுத்துவதற்கும் இவ்வா றான கூட்டாண்மை எங்களுக்கு உதவும். இலங்கையில் மஹிந்திரா டிராக்டர்கள் மற்றும் CLAAS அறுவடை இயந்திரங்கள் போன்ற உலகப் புகழ்பெற்ற விவசாய இயந்திரங்களின் வியாபாரக் குறிகளின் ஒரே விநியோகஸ்தர் என்ற வகையில், எங்கள் வாடிக்கையாளர்களுக்கு உகந்த அனுபவத்தை வழங்குதல் போன்ற சேவைகளுடன் எங்களின் பல்வகை சேவைகளை முழுமையாக்க விரும்புகின்றோம்” எனக் குறிப்பிட்டார்.

சியபத பினான்ஸ் பி.எல்.சியின் இந்த குத்தகைத் திட்டத்தை விவசாயத்துறையில் உள்ளவர்களுக்கு மிகவும் நம்பிக்கைக்குரிய திட்டங்களில் ஒன்றாக மாற்றுவதற்கும், சியபத பினான்ஸ் பி.எல்.சி. மற்றும் DIMO விவசாய - வணிகம (அக்றிபிஸ்னஸ்சஸ்) ஆகிய இரண்டின் பங்குதாரர்களுக்கும் பயனளிக்கும் வகையில் பிரத்தியேக நன்மைகளை வழங்கும் என இப் பங்குடைமை உத்தரவாதம் அளிக்கின்றது.

COMMERCIAL BANK

# கொமர்ஷல் வங்கியின் தலைவராக முன்னணி கல்விமான் தெரிவு

வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் வங்கியின் புதிய தலைவராக முன்னணி கல்விமான் பேராசிரியர் ஏ.கே.டபிள்யூ.ஜயவர்தனவும். மேலும் நிபுணத்துவம் மிக்க சர்வதேச முதலீட்டாளரும் வங்கியாளருமான ஷர்ஹான் முஹ்ஸீன் பிரதித் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். 2022 மார்ச் 1 முதல் இந்த நியமனங்கள் அமுலுக்கு வருகின்றன.

பேராசிரியர் ஜயவர்தன முன்னர் வங்கியின் பிரதித் தலைவராக இருந்தவர். முன்னாள் பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவனின் பதவிக்காலத்தையடுத்து அவர் தலைவராகத் தெரிவாகியுள்ளார். பேராசிரியர் ஜயவர்தனவின் பதவி உயர்வையடுத்து காலியான அவரது பிரதித் தலைவர் பதவிக்கு முஹ்ஸீன் தெரிவாகியுள்ளார். இந்தப் புதிய நியமனங்கள் பற்றி இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கி அறிவித்துள்ளது.

பேராசிரியர் ஜயவர்தன 2015 ஏப்ரல் முதல் ஒரு நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராகப் பணியாற்றி உள்ளார். 2020 டிசம்பர் 29 முதல் அவர் பிரதித் தலைவராகவும் பணிபுரிந்துள்ளார். இவர் பொறியியல் துறையில் இலங்கையில் மிகவும் கீர்த்திமிக்க ஒரு கல்விமானாவார். அத்தோடு அவர் ஒரு கல்வித்துறை நிர்வாகியுமாவார். தற்போது அவர் கொமர்ஷல் வங்கியின் கிளை நிறுவனங்களில் ஒன்றான CBC Tech Solutions நிறுவனத்தின் தலைவராகவும், பணிப்பாளர் சபை தொழில்நுட்பக் குழுவின் தலைவராகவும் பணியாற்றுகின்றார்.




கொமர்ஷல் வங்கியின் புதிய தலைவர் பேராசிரியர் ஏ.கே.டபிள்யூ.ஜயவர்தன (இடது) பிரதித் தலைவர் ஷர்ஹான் முஹ்ஸீன் ஆகியோர்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முக்கிய உறுப்பினராகவும், சிவில் பொறியியல் துறையில் சிரேஷ்ட பேராசிரியராகவும் காணப்படும் பேராசிரியர் ஜயவர்தன மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் உப வேந்தராக ஆறு வருடங்களும், அதே பல்கலைக்கழகத்தில் மேலும் ஆறு வருடங்கள் பொறியியல்துறை பீடாதிபதியாகவும் பணியாற்றியுள்ளார். மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் தொழில்முயற்சியாண்மை பிரிவில் ஒரு வருட காலம் மிகவும் புகழ்பூத்த பேராசிரியராகவும் மேலும் இரு வருடங்கள் தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் பணியாற்றிய அனுபவம் மிக்கவர்.

ஷர்ஹான் முஹ்ஸீன் ஒரு சிரேஷ்ட முதலீட்டு வங்கியாளராவார். வர்த்தகங்களின் இணைப்பு மற்றும் சுவீகரித்தல், கூட்டாண்மை நிதி மற்றும் மூலதன சந்தை ஆகியவற்றில் விரிவான அனுபவம் மிக்கவர். ஆசியா முழுவதும் பல நாடுகளில் அவர் கூட்டாண்மை சபைகளில் சிரேஷ்ட பதவி நிலைகளில் இருந்துள்ளதோடு நிதி நிறுவனங்களின் சிரேஷ்ட தலைமைத்துவக் குழுக்களிலும் பணியாற்றியுள்ளார். இந்த நிறுவனங்களின் மூலோபாய நிகழ்ச்சி நிரல்களையும் அவற்றுக்கான சரியான பாதைகளை வகுப்பதிலும் அவர் பெரும் பங்காற்றியுள்ளார். பூகோள ரீதியான முதலீட்டு வங்கிகள், கிரடிட் சுவிஸ் வங்கி, பேங்க் ஒவ் அமெரிக்கா மெரில் லின்ச், ஜேபி மோர்கன் ஆகிய முக்கிய நிறுவனங்களில் பிராந்திய ரீதியான தலைமைப் பொறுப்புகளையும் அவர் வகித்துள்ளார். அவர் Deloitte இன் ஒரு இணை பணிப்பாளருமாவார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் முதுமாணி பட்டம் பெற்றுள்ள இவர், வெஸ்டர்ன் மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் வர்த்தக நிர்வாகத் துறையில் விசேட பட்டம் பெற்றுள்ளார். நியூயோர்க்கில் ஜே.பி.மோர்கன் நிறுவனத்தில் கூட்டாண்மை நிதித்துறை பயிற்சியையும் அவர் பூர்த்திசெய்துள்ளார்.

இலங்கையின் முதல் 100% கார்பன் பாவனையினை குறைத்த வங்கி, உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளில் தொடர்ந்தும் 11 வருடங்களாக பட்டியலிடப்பட்ட ஒரேயொரு இலங்கை வங்கி, கொமர்ஷல் வங்கியாகும். கொமர்ஷல் வங்கி வலையமைப்பினைக்கொண்ட 268 கிளைகள் மற்றும் 938 தானியங்கி இயந்திரங்களைக்கொண்டு இயங்குகின்றது. கொமர்ஷல் வங்கி இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகத்துறைக்கு பாரிய கடனுதவி வழங்குவதோடு, நாட்டின் வங்கித்துறையில் டிஜிட்டல் புத்தாக்கங்களில் முன்னணியில் உள்ளது. வங்கியின் வெளிநாட்டு செயற்பாடுகள் பங்களாதேஷை உள்ளடக்கியது, அங்கு வங்கி 19 கிளைகளை இயக்குகின்றது: மியன்மார் நய் பியி தாவில் நுண்நிதி நிறுவனத்தினை கொண்டுள்ளது: மற்றும் மாலைதீவில் வங்கி பெரும்பான்மையான பங்குகளைக்கொண்ட முழு அளவிலான வங்கியாக காணப்படுகின்றது.

திகதி 02.03.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் :4694
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 11,573,630.00
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 4 4 4 0 2 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 51,846,841.20

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2989
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,738,740.00
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 02 08 65 67
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,848,514.00

Mega POWER மெகா பவர் கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1042
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,885,480.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 238,832,442.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து Q
சுப்பர் இலக்கம் 06
வெற்றி இலக்கங்கள் 14 25 26 72

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 724
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,710,100.00
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 17 50 74 82
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 100,212,228.40

NLB ஹந்தஹஸ ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0035
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 1,961,440.00
இலக்கினம் மகரம்
வெற்றி இலக்கங்கள் 06 36 47 55
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,624,715.52

ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1218
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,260,940.00
வெற்றி இலக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 3 6 3 5 4 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,298,052.80

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# சிறந்த கைத்தொழிலுக்கான வெள்ளிப் பதக்க விருதை வென்ற சுஜித் ஓட்டோ இலக்ட்ரிக்கல்ஸ்

இரண்டு தசாப்த கால பெருமைமிக்க வரலாற்றைக் கொண்டுள்ள சுஜித் ஓட்டோ இலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB) ஏற்பாடுசெய்த சிறந்த கைத்தொழில்களுக்கான விருது வழங்கும் விழாவில் மோட்டார் வாகன மற்றும் மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் உற்பத்திப் பிரிவில் வெள்ளிப் பதக்க விருதை வென்றுள்ளது. மேற்படி விருது விழா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் கைத்தொழில்துறை அமைச்சர் விமல் வீரவங்ச ஆகியோரின் தலைமையில் வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் வெகு விமரிசையாக நடைபெற்றது.



“எப்பொழுதும் வாடிக்கையாளர்களுக்கு ஆகச் சிறந்த சேவையினை வழங்குவதை இலக்காகக்கொண்டு இத்தொழில்துறையை முன்னெடுப்பதே எமது வெற்றியின் இரகசியமாகும். விருது வழங்கும் வைபவத்தில் பங்கெடுத்த ஜனாதிபதிக்கும் கைத்தொழில் அமைச்சருக்கும் கைத்தொழில் அமைச்சின் செயலாளருக்கும் IDB மாத்தறை கிளையின் சகல ஊழியர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். அத்தோடு எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் நாடுபூராவுமுள்ள விற்பனை முகவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்” என நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் தேசபந்து, தேசமான்ய, மனிதநேயவாதி சுஜித் சேனாதீர தெரிவித்தார்.

சுஜித் ஓட்டோ இலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனம் (www.sujithauto.com <http://www.sujithauto.com/>) வாகனங்கள். மீன்பிடிப் படகுகள், விவசாய இயந்திரங்கள். ஜெனரேட்டர்கள் மற்றும் பிற இயந்திரங்களில் ஏற்படக்கூடிய மின்சாரம் சார்ந்த பிரச்சினைகளுக்கு ஆக்கப்பூர்வமான தீர்வுகளை வழங்கி கெட்டபிலர், நிசான், சுசுக்கி, டொயோட்டா, டாட்டா, பியாஜியோ, லேலண்ட், ஹொண்டா, மாருதி, மஹிந்திரா உட்பட அனைத்து வாகனங்களுக்கும் High AMP Alternators மற்றும் Gear Type Starter Motors களை உற்பத்தி செய்கின்றது. A/C Controllers, Heat Timers,IC Regulators, Rotor Coils, 24V to 12V Converters, Starter Coils, Turbo Controllers, Starter Motors Armatures, Wipers, Inner Sets போன்ற உற்பத்திகளை SAE வர்த்தக நாமத்தில் கொள்வனவுசெய்ய முடியும். உங்கள் வாகனத்திற்கு ஏற்றவாறு மேற்படி உதிரிப்பாகங்களை சொல்லி செய்வித்துக்கொள்ளவும் முடியும். Hybrid மற்றும் Common Rail உள்ளிட்ட சகல வாகனங்களுக்கும் Auto Electrical, Auto Mechanical, Auto A/C பழுது நீக்குதல், Accident Repair, Tinkering, Painting போன்ற பல்வேறு சேவைகளை சுஜித் ஓட்டோ இலக்ட்ரிக்கல்ஸ் வழங்குகிறது.

அவர்களின் தலைமை அலுவலகம் (0777328336) மாத்தறையிலும் கிளைகள் நாவின்ன, மஹரகம, திருகோணமலை, திக்வெல்ல மற்றும் காலி ஆகிய நகரங்களிலும் அமைந்துள்ளன. நாவின்ன புதிய கிளைக்கு இந்நாட்களில் ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஜெனீவா மனித உரிமைகள் பேரவை இம்முறையாவது தீர்வு வழங்குமா?

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினால் கவனயீர்ப்புப் போராட்டம்








(வவுனியா நிருபர்)

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் இம்முறை அமர்விலாவது எமக்கான நீதி கிடைப்பதற்கு வழிபிறக்க வேண்டும் - என்று வவுனியா மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினால் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக நேற்று (03) குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள், குடும்பங்களாக சரணடைந்தபோது அவர்களுடன் சேர்ந்து சரணடைந்த 29இற்கும் மேற்பட்ட குழந்தைகள் எங்கே? யுத்த காலத்தில் மரணித்த இராணுவ உடல்களை பொறுப்பெடுக்க மறுத்த சிங்கள அரசு அவர்களை காணாமலாக்கப்பட்டோர் என அவர்களது குடும்பங்களையும் ஏமாற்றுகிறது, ராஜபக்ஷ குடும்பம் பேரப்பிள்ளைகளை கொஞ்சி மகிழும்போது நாங்கள் பேரக்குழந்தைகளை தேடி வீதியில் அழுது நிற்கின்றோம், கையில் ஒப்படைத்தவர்களை போரில் இறந்துவிட்டார்கள் என்று கூறுவது எங்களையும் சர்வதேசத்தையும் முட்டாளாக்கும் செயல். கொலையாளி ஜனாதிபதியாக உள்ள நாட்டில் எமக்கு எவ்வாறு நீதி கிடைக்கும், மிருசுவிலில் 08 பேரை கொலைசெய்த படுகொலையாளியை விடுதலை செய்ததன் மூலம் கொலையாளிகளை ஊக்கப்படுத்தாதே என எழுதப்பட்ட சுலோக அட்டைகளையும் ஏந்தியிருந்ததுடன், கோஷங்களையும் எழுப்பினர்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள், எமது உறவுகள் காணாமலாக்கப்பட்டு பத்து வருடங்கள் கடக்கின்ற நிலையில் எமக்கான நீதி தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருகின்றது. தொலைத்த எமது பிள்ளைகளை காணாமல் சாட்சிகளான பல தாய்மார்கள் மரணித்து விட்டனர்.

வயது முதிர்ந்த நிலையில் அடுத்த போராட்டத்துக்கு வருவோமா என்ற நம்பிக்கை அற்ற நிலையில் இந்தப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

இலங்கையில் இனப்படுகொலை தொடர்ச்சியாக இடம்பெறாமல் தடுக்கப்பட வேண்டுமானால், ராஜபக்ஷ குடும்பமும் இனப்படுகொலைகளுக்கு பொறுப்பாக இருந்த படைத் தளபதிகளும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தப்பட வேண்டும்.

யுத்த காலத்தில் மரணித்த இராணுவ உடல்களை பொறுப்பெடுக்க மறுத்த சிங்கள அரசு அவர்களை காணாமலாக்கப்பட்டோர் என தெரிவித்து அவர்களின் குடும்பங்களை ஏமாற்றுகின்றது. எனவே, சர்வதேச சமூகம் எமக்கான நீதியை விரைவில் வழங்க வேண்டும். இம்முறை இடம்பெற்றுவரும் ஜெனீவா மனித உரிமைகள் பேரவை அமர்விலாவது உறுதியான தீர்மானங்கள் எடுக்கப்பட்டு எமக்கான நீதி நிலைநாட்டப்பட வேண்டும். அதற்கு உறுப்புநாடுகள் அனைத்தும் ஒத்துழைக்க வேண்டும். எமக்கான நீதி கிடைக்கும் வரையில் நாம் எமது போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருவோம் - என்றனர்.

## மாந்தை மேற்கில் மணல் அகழ்வு செய்யப்படும் இடங்களுக்கு கள விஜயம் மேற்கொண்ட விசேட குழு




(மன்னார் நகர் நிருபர்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் மணல் அகழ்வு செய்யப்படும் இடங்களை நேற்று முன்தினம் புதன்கிழமை (02) காலை திணைக்களத் தலைவர்கள், அரச அதிகாரிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் உள்ளடக்கிய விசேட குழுவினர் நேரடியாக கள விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

பொது அமைப்புகளின் ஒன்றியம் மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைவாக குறித்த கள விஜயம் இடம்பெற்றுள்ளது.

மணல் அகழ்வுடன் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், பிரதேச செயலாளர், அரசாங்க அதிபர், ஏனைய சிவில் அமைப்புகள், புவிச்சரிதவியல் திணைக்களம், நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் மற்றும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கமைவாக, மணல் அகழ்வு இடம்பெற்றுவரும் இடங்களைப் பார்வையிட்டு தொடர்ச்சியாக மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது.

குறித்த தீர்மானத்துக்கமைவாக, நேற்று முன்தினம் புதன்கிழமை காலைமுதல் மாலைவரை மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மணல் அகழ்வு செய்யப்படும் இடங்களில் நேரடியாக கள விஜயம் மேற்கொள்ளப்பட்டு மணல் அகழ்வு இடம்பெறும் இடங்களின் தற்போதைய நிலை குறித்து ஆராயப்பட்டது.

குறித்த முதலாவது கள விஜயத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரின் பிரதிநிதிகள், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர், வனவளத் திணைக்கள அதிகாரி, புவிச்சரிதவியல் திணைக்கள அதிகாரி, பொலிஸார், மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர், வி.எஸ்.சிவகரன், பொது அமைப்புகளின் ஒன்றிய பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இலுப்பைக்கடவை, கூறாய் போன்ற பகுதிகளுக்கு கள விஜயம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன்போது குறித்த பகுதிகளிலுள்ள ஆறுகளின் தற்போதைய நிலை தொடர்பாகவும், அப்பகுதியின் தற்போதைய நிலை குறித்தும் பார்வையிட்டனர்.

மேலும் இப்பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு இடம்பெறுகின்றமை குறித்தும், பழைமை வாய்ந்த மரங்கள் அழிவடையும் நிலையில் காணப்படுகின்றமை குறித்தும் நேரடியாக அவதானிக்கப்பட்டது. அப்பகுதிகளில் வழங்கப்பட்ட அனுமதியை மீறி பாரிய குழிகள் தோண்டப்பட்டு மண் அகழ்வு செய்யப்பட்டுள்ளமைக்கான அடையாளங்களும் அப்பகுதியில் குறித்த குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் மன்னார் மாவட்டத்தின் ஏனைய பிரதேச செயலாளர் பிரிவுகளில் மணல் அகழ்வு இடம்பெறுகின்ற இடங்களுக்கு நேரடியாக கள விஜயம் செய்து நிலைமையை அவதானித்ததன் பின்னர், மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் எந்தெந்த இடங்களில் மணல் அகழ்வதற்கான அனுமதி வழங்குவதென்பது குறித்து தீர்மானிக்கப்படும் - என தெரிய வருகிறது.

## எதிர்வரும் நாட்களில் வடக்கில் கனமழைக்கு வாய்ப்பு

(யாழ். நிருபர்)

வடக்கில் எதிர்வரும் நாட்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதால், மீனவர்கள் கடலுக்கு செல்வதில் அவதானமாக இருக்குமாறும் வெங்காயம் மற்றும் சிறு தானிய செய்கையாளர்கள் விதைத்தல் மற்றும் அறுவடை செயற்பாடுகளை தவிர்த்துக்கொள்வது சிறந்தது எனவும் யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல்துறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென்கிழக்கே உருவான காற்றழுத்த தாழ்வு நிலை தற்போது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக மாற்றமடைந்துள்ளது. இது மேற்கு வடமேற்கு திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் பரவலாக மிதமான மற்றும் கன மழை கிடைக்க வாய்ப்புள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் பரவலாக கனமழை கிடைக்க வாய்ப்புள்ளது.

தற்போதைய நிலைமைகளின்படி இதன் மிகச் சரியான நகர்வுப் பாதையை கணிக்க முடியாதுள்ளது. எனினும், சில மாதிரிகள் இந்த தாழமுக்கம் வடக்கு மாகாணத்தின் கரையோரத்தை அணமித்தே நகரும் என காட்டுகின்றன.

அவ்வாறாயின், வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளும் வேகமான காற்று மற்றும் இடி மின்னலுடன் கூடிய கனமழையைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டம் வடக்கு மாகாணத்தின் ஏனைய பகுதிகளை விட சற்று கூடுதலான அளவு மழையைப் பெற வாய்ப்புள்ளது.

இலங்கையின் தென்கிழக்கு, கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களின் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலைமையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்கு செல்வதில் மிகுந்த அவதானமாக இருப்பது அவசியமாகும்.

விவசாயிகள், குறிப்பாக வெங்காயம் மற்றும் சிறுதானிய செய்கையாளர்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை அறுவடை மற்றும் விதைத்தல் செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்வது சிறந்தது என தெரிவித்தார்.




வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

## நடுக்குடா காட்டுப்பகுதியிலிருந்து ஒரு தொகுதி மாத்திரைகள் இராணுவத்தினரால் மீட்பு



(மன்னார் நகர் நிருபர்)

தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நடுக்குடா காட்டுப் பகுதியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி மாத்திரைகளை இராணுவத்தினர் நேற்று வியாழக்கிழமை (03) அதிகாலை மீட்டுள்ளனர்.

மன்னார் இராணுவ புலனாய்வாளர்களுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், நடுக்குடா இராணுவத்தினரின் உதவியுடன் நேற்று அதிகாலை நடுக்குடா காட்டுப்பகுதியில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில், இரண்டு பெட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டு சோதனைக்குட்படுத்தப்பட்டது. இதன்போது ஒரு தொகுதி மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

சோதனையின்போது குறித்த மாத்திரைகள் உடல் வலியை குறைப்பதற்கு பயன்படுத்தப்படும் மாத்திரைகள் என தெரியவந்துள்ளதோடு, குறித்த இரு பெட்டிகளிலிருந்தும் 60 ஆயிரம் மாத்திரைகள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

குறித்த மாத்திரைகள் இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக கொண்டுவரப்பட்டிருக்கலாம் என தெரிய வருகிறது. எனினும் சந்தேக நபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை.

மீட்கப்பட்ட மாத்திரைகளை மேலதிக நடவடிக்கைகளுக்காக இராணுவத்தினர் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

தலைமன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வவுனியா பல்கலைக்கழகம் - பட்டய பணியாளர் மேலாண்மை நிறுவனம் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து



(வவுனியா நிருபர்)

வவுனியா பல்கலைக்கழகத்தின் வணிக கற்கைகள் பீடத்தின் மனிதவள முகாமைத்துவத் துறை மற்றும் பட்டய பணியாளர் மேலாண்மை நிறுவனம் என்பவற்றுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்நிகழ்வானது, வவுனியா பல்கலைக்கழக வணிக கற்கைகள் பீடத்தில் இடம்பெற்றிருந்த நிலையில் வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி த.மங்களேஸ்வரன், வணிக கற்கைகள் பீடாதிபதி கலாநிதி வை. நந்தகோபன், மனிதவள முகாமைத்துவத்துறையின் தலைவர் எஸ்.ஹரிகரன் ஆகியோர் வவுனியா பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் ஜயந்த அபேரத்ன, சமன் ஜயவிக்ரம, வீரதுங்க ஆகியோர் பட்டய பணியாளர் மேலாண்மை நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

## யாழ். பல்கலைக்கழகத்தின் 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா









(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி நேற்று பல்கலைக்கழகத்தின் உள்ளக விளையாட்டரங்கில் யாழ். பல்கலைக்கழக வேந்தர் தகைசார் பேராசிரியர் எஸ்.பத்மநாதன் தலைமையில் ஆரம்பமாகியது.

# வேட்புமனுவில் இளைஞர்களுக்கான 25 வீத ஒதுக்கீட்டிற்கான சட்ட ஏற்பாடுகளை செய்க!

## நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தின் கோரிக்கை சட்ட மா அதிபருக்கு அனுப்பிவைப்பு



வேட்புமனுவில் இளைஞர்களுக்கான 25 வீத ஒதுக்கீட்டிற்கான சட்ட ஏற்பாடுகளை செய்யுமாறு நாடாளுமன்ற செயலாளர் நாயகம் சட்ட மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்காரால் தனிநபர் சட்டமூலமாக குறித்த சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு, அடுத்தகட்ட முன்னேற்ற நடவடிக்கைகாக நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தால் குறித்த திருத்த சட்டமூலத்திற்கான சட்ட ஏற்பாடுகளை கோரி சட்ட மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம், 1946ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 28 ( 8 ) (ஆ) பிரிவு, 1981ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 15 ( 8 ) (இ ) பிரிவு மற்றும் 1988ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 13 ( 8 ) ( இ ) பிரிவுகள் என்பனவற்றை திருத்தி புதிய ஏற்பாடுகளை உள்ளீர்ப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை கோரி சட்ட மா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

புதிய சட்ட ஏற்பாடுகளுக்கமைய,மேற் கூறிய சகல தேர்தல்களின்போதும் நியமனப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கும்போது தேர்தல் மாவட்டத்துக்கு பெயர் குறித்து நியமிக்கப்படும் வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கையில் நான்கில் ஒரு பகுதியினருக்குக் குறையாமல் இளைஞர் வேட்பாளர்களாக இருப்பதை ஒவ்வோர் அரசியல் கட்சியும் அல்லது சுயேட்சைக் குழுவும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

தேர்தல்கள் ஆணையாளரால் வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் பெயர் நியமனங்களைக் கோரும் அதேவேளை, ஒவ்வொரு நிர்வாக மாவட்டம் தொடர்பாகவும் பெயர் குறித்து நியமிக்கப்படவேண்டிய இளைஞர் வேட்பாளர்களின் எண்ணிக்கையைக் குறித்துரைக்கப்பட வேண்டும். ஓர் இளைஞர் என்பவர் தேர்தல்கள் ஆணையாளரினால் தேர்தல்கள் கோரப்படும் தினத்தில் 35 அல்லது அதற்குக் குறைவான வயதான ஒரு ஆண் அல்லது பெண் என வரையறுக்கப்படுதல் வேண்டும். மற்றும்

தேவையான நிபந்தனைகளை ஒரு அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக் குழு நிறைவேற்றுவதற்குத் தவறும் சந்தர்ப்பத்தில், அத்தகைய நியமனப்பத்திரம் வெற்றும் வறிதுமானதாகக் கருதப்பட்டு தெரிவத்தாட்சி அலுவலரால் நிராகரிக்கப்பட வேண்டும் என்றவாறு அமையப்பெறும்.



இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், சிவில் சமூகத் தலைவர்களை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

# வங்கிகள் கடனுக்கான கடிதம் விநியோகிக்காதமையினால் எரிவாயு அடங்கிய கப்பல்கள் தரையிறங்க முடியாத நிலை

## சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்படலாமென எச்சரிக்கை

(யோ.தர்மராஜ்)

நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக வங்கிகள் கடனுக்கான கடிதம் விநியோகிக்காதமையினால் லிட்ரோ நிறுவனம் இறக்குமதிசெய்யப்பட்ட எரிவாயு அடங்கிய மூன்று கப்பல்கள் தரையிறக்குவதற்கு முடியாதுள்ளதாக நிறுவன வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

அத்தோடு, லாவ் எரிவாயு விநியோகமும் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாக அதன் தலைவர் டபிள்யூ.கே.எச்.வேகப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

எரிவாயு கலவையில் மாற்றம் ஏற்பட்டமை யினால் கடந்த வருடத்தில் எரிவாயுவிற்கு பெரும் தட்டுப்பாடு நிலவிய நிலையில் தற்போது, ஏற்பட்டுள்ள டொலர் பிரச்சினையால் நாட்டில் மீண்டும் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. லிட்ரோ எரிவாயு நிறுவனம் இறக்குமதிசெய்யப்பட்டுள்ள எரிவாயு அடங்கிய மூன்று கப்பல்கள் துறைமுகத்தை அண்மித்துள்ளபோதிலும், கடனுக்கான கடிதம் விநியோகிக்காதமையினால் குறித்த எரிவாயு தொகையினை தரையிறக்க முடியாதுள்ளதாக குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், லிட்ரோ எரிவாயு விநியோகமானது தொழிற்சாலைகள் மற்றும் தகன நிலையங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், நாட்டின் ஏனைய இடங்களுக்கு எரிவாயு விநியோகம் தடைப்பட்டுள்ளதால் மீண்டும் எரிவாயு தட்டுப்பாட்டை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இதேவேளை, லாவ் எரிவாயு நிறுவனத்தின் விநியோகமும் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாக அதன் தலைவர் டபிள்யூ.கே.எச்.வேகப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, நாட்டிலுள்ள டொலர் பிரச்சினையால் தங்கள் நிறுவனத்திற்கான எரிவாயுவை இறக்குமதி செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால், சந்தையில் தற்போது லாவ் எரிவாயு இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மத்திய கலாசார நிதியத்தின் வரைவு விதிகள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிப்பு



1980ஆம் ஆண்டு 57ஆம் இலக்க மத்திய கலாசார நிதியச் சட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்படவுள்ள வரைவு விதிகள் குழுவின் தலைவர் ஜி.எல்.டபிள்யூ.சமரசிங்க உள்ளிட்ட குழு உறுப்பினர்களினால் நேற்றுமுன்தினம் (02) அலரிமாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரையின்பேரில் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தனவினால் 2020 செப்டெம்பர் 16ஆம் திகதி குறித்த குழு நியமிக்கப்பட்டது.

கடந்த அரசாங்கத்தின்போது குறித்த விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் பாரியளவில் நிதி துஷ்பிரயோகம் இடம்பெற்றமை போன்ற நிதி மோசடிகள் மேலும் இடம்பெறுவதனை தடுப்பதற்கு இந்த விதிகளை அறிமுகப்படுத்துவது மிகவும் அவசியமானது - என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் விருப்பத்திற்கேற்ப பணம் செலவழிப்பதை மட்டுப்படுத்துவதற்கான முறைமையொன்றை உருவாக்குவது நாட்டுக்கு நன்மை பயக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

பிரதமரின் ஆலோசகர் (பொது உறவுகள்) ஜி.எல்.டபிள்யூ.சமரசிங்க இக்குழுவின் தலைவராக விளங்குவதுடன், புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் விஜித நந்தகுமார, சட்டத்தரணி கணேஷ் தர்மவர்தன மற்றும் மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் மனித அபிவிருத்தி) டபிள்யூ. தர்மதாச ஆகியோர் இக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக காணப்படுகின்றனர்.

மத்திய கலாசார நிதியம் ஸ்தாபிக்கப்பட்டது முதல் இந்த சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட விதம் மற்றும் அதன் கீழ் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் அதற்கு இணையாக செயல்படும் தொல்பொருள் திணைக்களத்தின் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் விதிகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு இந்த வரைவு விதிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

தொல்பொருள் ஆணையாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்க, தொல்பொருள் திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளர் நாயகம் பேராசிரியர் செனரத் திஸாநாயக்க, உலக பாரம்பரிய சர்வதேச ஆலோசகர் கலாநிதி காமினி விஜேசூரிய, முன்னாள் தொல்பொருள் ஆணையாளர் கலாநிதி நிமல் பெரேரா மற்றும் வீடமைப்பு அமைச்சின் ஓய்வுபெற்ற சிரேஷ்ட உதவிச் செயலாளர் நந்தனி பெர்னாண்டோ ஆகியோர் இதற்கு விசேட ஒத்துழைப்பு நல்கியுள்ளனர்.

நிதி மற்றும் பிற விடயங்கள் குறித்து செயற்படும்போது அதன் பணிப்பாளர் நாயகம் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரிக்கு உதவியாக பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரையின்பேரில் தலைமை நிர்வாக அதிகாரியினால் ஒரு நிபுணர் குழு நியமிக்கப்படும். அது அவ்வப்போது பரிசீலனை செய்யப்பட்டு, திருத்தங்கள் தேவைப்பட்டால் அவ்வாறு செய்வதற்கான தலைமை நிர்வாக அதிகாரிக்கான அதிகாரம் உள்ளிட்ட 16 முக்கிய விதிகள் இந்த வரைவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

குறித்த சந்தர்ப்பத்தில் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, குழுத் தலைவர் பிரதமரின் ஆலோசகர் (பொது உறவுகள்) ஜி.எல்.டபிள்யூ.சமரசிங்க உள்ளிட்ட குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# பாகிஸ்தான் கடற்படைப் போர்க் கல்லூரி இளங்கலைப் பட்டதாரிகள் இராணுவத் தலைமையகத்திற்கு வருகை







இலங்கை கடற்படையின் அழைப்பையேற்று இலங்கைக்கான ஐந்து நாள் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள பாகிஸ்தான் கடற்படை போர்க் கல்லூரியில் பயிலும் இளங்கலை பட்டதாரிகளின் குழுவினர் தங்களது நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக நேற்று முன்தினம் (2) இலங்கை இராணுவத் தலைமையகத்திற்கு வருகை தந்திருந்தனர்.

கொமடோர் சையத் அஹமட் ஓவைஸ் ஹைதர் ஜைதி எஸ்ஜ (எம்) தலைமையிலான 21 பேர் கொண்ட மேற்படி குழுவினருக்கு வரவேற்பளித்த பயிற்சி பணிப்பகத்தின் பணிப்பாளர் பிரிகேடியர் கபில டோலகே இராணுவ பதவிநிலை பிரதானி அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார்.

இதன்போது, பாதுகாப்பு பதவிநிலை பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா சார்பாக இராணுவத் தலைமையகத்தின் பதவிநிலை பிரதானி மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே, கொமடோர் சையத் அஹமட் ஓவைஸ் ஹைதர் ஜைதி எஸ்ஜ (எம்) பிரதிநிதிகள் குழுவை அவரது அலுவலகத்திற்கு வரவேற்றார்.

கலந்துரையாடலின்போது மேஜர் ஜெனரல் விக்கும் லியனகே, இலங்கை மற்றும் பாகிஸ்தான் ஆயுதப்படைகளுக்கு இடையில் பல வருடங்களாக நிலவும் ஒத்துழைப்பைப் பாராட்டியதுடன், நிலவும் நட்புறவுகளையும் நல்லெண்ண தொடர்புகளையும் நினைவு கூர்ந்தார். மேலும் மேஜர் ஜெனரல் விகும் லியனகே, இலங்கை ஆயுதப் படைகளுக்கு பாகிஸ்தான் ஆயுதப் படைகளால் வழங்கப்பட்ட பயிற்சி ஒத்துழைப்பு, பரிமாற்ற நிகழ்ச்சிகளுக்கு வழங்கி பங்களிப்புக்கும் நன்றி தெரிவித்தார்.

சிறிதுநேரத்திற்குப் பிறகு, பயிற்சிப் பணிப்பகத்தின் பணிப்பாளர் பிரிகேடியர் கபில டோலகேவினால் இலங்கை இராணுவத்தின் வரலாறு, அதன் சாதனைகள், தற்போதைய வகிபாகம் மற்றும் பணிகள் விளக்க காட்சிகளுடன் கூடிய விரிவுரையொன்று நிகழ்த்தப்பட்டது.

பாகிஸ்தான் கடற்படைப் போர்க் கல்லூரியில் 51ஆவது கடற்படைப் பணியாளர் பாடநெறியைத் தொடர்ந்து வரும் 21 முப்படைகளையும் சேர்ந்த மேற்படி குழுவில் பாகிஸ்தான், இந்தோனேசியா மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அடங்குவர்.

மேற்படி பாகிஸ்தான் கடற்படைப் போர்க் கல்லூரியின் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் நாளை வரை இலங்கையில் தங்கியிருப்பார்கள். அவர்கள் இலங்கை கடற்படை தலைமையகம், இலங்கை விமானப்படை தலைமையகம், பாதுகாப்பு கட்டளைகள் மற்றும் பதவி நிலை கல்லூரி, கப்பல்துறை, கடற்படை அருங்காட்சியகம் மற்றும் கடற்படை கடல்சார் கல்வியற் கல்லூரி ஆகிய இடங்களை பார்வையிடுவதற்கான சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

# அனைத்து பல்கலைக்கழகங்களையும் முழுமையாக ஆரம்பிப்பது சாத்தியமில்லை

தற்போது நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களையும் முழுமையாக ஆரம்பிப்பது சாத்தியமில்லை - என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களில் பெரும்பாலானோர் விடுதிகளில் தங்கி கல்வி கற்பதனால் அவர்களிடையே கொவிட் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, தற்போது நடைமுறையில் உள்ளவாறு பல்கலைக்கழக கட்டமைப்பு தொடர்ந்து செயல்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

விடுதிகளிலுள்ள அனைத்து வசதிகளையும் பொதுவாகப் பயன்படுத்துவதனால் மாணவர் களிடையே கொவிட் பரவுவதைத் தடுக்க முடியாது. இவ்வாறானதொரு நிலைமையினால் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூன்று பீடங்களும் வவுனியா பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியும் மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோத மின்சாரம் பெற்ற 126 பேர் கைது

கிராண்ட்பாஸ் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மின்சாரத்தைப் பெற்றுக்கொண்ட 126 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் மற்றும் இலங்கை மின்சார சபை இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இந்த கைது இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.







புத்தளம் - சிலாபம் பிரதான வீதியில் புளிச்சாக்குளம் எரிபொருள் நிலையத்தில் கடந்த மூன்று நாட்களாக மக்கள் தமது வாகனங்களோடு நீண்ட வரிசையில் காத்திருந்து நிற்பதைக் காணக்கூடியதாக உள்ளது. டீசல் தட்டுப்பாடு காரணமாக பல கனரக வாகனங்களும், பஸ்களும், லொறிகளும் மற்றும் சில வாகனங்களும் வரிசையில் காத்திருக்கின்றன. ஒரு வாகனத்துக்கு 3 ஆயிரம் ரூபாவுக்கு மாத்திரம் டீசல் வழங்கப்படுகின்றது. அத்துடன், ஆயிரம் ரூபாவுக்கு சிறிய கேன் ஒன்றில் வழங்கப்பட்டு வருகின்றது. இங்கு குறிப்பிட்ட அளவே டீசல் காணப்படுவதாக மக்கள் கூறுகின்றனர். -உடப்பு நிருபர்-

# மனித உரிமைகள் பேரவையின் பக்க அம்சமாக பீரிஸ் ஜெனீவாவில் பல சந்திப்புகளில் பங்கேற்பு





வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸின் தலைமையிலான மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது அமர்வில் கலந்துகொண்ட இலங்கையின் உயர்மட்ட தூதுக்குழு, பாகிஸ்தான், பலஸ்தீனம், தென்னாபிரிக்கா, சவூதி அரேபியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளை 2022 மார்ச் முதலாம் திகதி சந்தித்தது.

பலஸ்தீன வெளிநாட்டு அமைச்சர் ரிசாத் அல்-மாலிகியுடனான சந்திப்பின்போது, இலங்கையின் வெளியுறவுக் கொள்கையின் தூண்களில் பலஸ்தீனத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளும் ஒன்றாகும் என்பதை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

பலஸ்தீனம் இலங்கையின் நம்பகமான நட்பு நாடாகும் எனக் குறிப்பிட்ட அவர், இரு நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய மற்றும் சுமுகமான உறவுகளுக்காக பாராட்டுகளைத் தெரிவித்தார். சர்வதேச அரங்கில் இலங்கையின் நீண்டகால நட்புறவு மற்றும் ஆதரவு குறித்து பலஸ்தீனத்தின் வெளிநாட்டு அமைச்சர் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார். மனித உரிமைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலான இருதரப்பு ஒத்துழைப்பு குறித்தும் இரு அமைச்சர்களும் மேலும் கலந்துரையாடினர்.

பாகிஸ்தானின் மனித உரிமைகளுக்கான மத்திய அமைச்சர் ஷிரீன் எம். மஸாரியுடனான சந்திப்பின்போது, இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான கல்வி, கலாசாரம் மற்றும் வர்த்தகத்தை உள்ளடக்கிய நீண்டகால மற்றும் உறுதியான நட்புறவு மற்றும் பன்முக உறவுகள் குறித்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ் பாராட்டுகளைத் தெரிவித்தார். ஐ.நா. மனித உரிமைகள் பேரவை யுடனான இலங்கையின் ஈடுபாடு குறித்தும் கலந்துரையாடிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், பாகிஸ்தானின் நிலையான ஆதரவிற்காக இலங்கையின் உண்மையான பாராட்டுகளைத் தெரிவித்தார். மனித உரிமைகளின் பின்னணியில், உள்நாட்டு செயன்முறையின் அடிப்படையிலான இலங்கையின் சாதனைகளை பாகிஸ்தான் மத்திய அமைச்சர் பாராட்டினார். சுற்றுலாத் துறையில் இலங்கையின் முன்முயற்சிகளையும் அவர் பாராட்டினார்.

இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் தூதுக்குழுவினர் தென்னாபிரிக்காவின் சர்வதேச உறவுகள் அமைச்சர் கலாநிதி நலேடி பாண்டோருடன் ஈடுபட்ட ஆக்கபூர்வமான சந்திப்பின்போது, இலங்கையின் நல்லிணக்கம், ஐக்கியம் மற்றும் உண்மையைத் தேடுதல் மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைகள் சார்ந்த தென்னாபிரிக்காவின் வளமான அனுபவத்தில் இருந்து கற்றுக்கொள்வது தொடர்பான முயற்சிகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. இலங்கையின் அபிவிருத்திகளைப் பாராட்டிய தென்னாபிரிக்காவின் சர்வதேச உறவுகள் அமைச்சர், நல்லிணக்கத்திற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பதற்கான தென்னாபிரிக்காவின் தயார்நிலையையும் தெரிவித்தார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ், எகிப்தின் வெளிநாட்டு அலுவல்கள், மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் காலிட் எல் பக்ரியுடன் கலந்துரையாடியதுடன், அதன்போது மனித உரிமைகள் பேரவையின் உயர்மட்ட அமர்வில் அன்றைய தினம் பேராசிரியர் பீரிஸ் மேற்கொண்ட அறிக்கையில் அவர் வெளிப்படுத்திய நிலைப்பாட்டைப் புரிந்துகொண்டதாக எகிப்திய பிரதி அமைச்சர் வெளிப்படுத்தினார்.

# உக்ரைன் மற்றும் பெலாரஸிலுள்ள இலங்கையர்களை வெளியேற்ற வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ஏற்பாடு

அங்காரா மற்றும் வோர்சாவிலுள்ள இலங்கைத் தூதரகங்களுடன் தொடர்ந்தும் நெருக்கமாகத் தொடர்புகளைப் பேணி வருகின்ற வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, உக்ரேனிலுள்ள புலம்பெயர் இலங்கையர்கள் / மாணவர்கள் பாதுகாப்பான பாதையில் செல்வதற்கும், அவர்களை வெளியேற்றுவதற்கும் வசதிகளை வழங்கி வருகின்றது. பதினேழு (17) இலங்கைப் பிரஜைகள் போர் தொடங்குவதற்கு முன்னரே உக்ரேனிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளதுடன், அதன்பின்னர் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அங்காரா மற்றும் வோர்சாவிலுள்ள அதன் வெளிநாட்டுத் தூதரகங்களுடன் இணைந்து, உக்ரேனிலிருந்து மேலும் 32 இலங்கையர்களை போலந்து எல்லை வழியாக வெளியேற்றுவதற்கு வசதிகளை ஏற்படுத்தியுள்ளது.

போலந்து வழியாகத் திரும்புவதற்காக போலந்து எல்லைக்குச் செல்லும் உக்ரேனில் எஞ்சியிருக்கும் இலங்கைப் பிரஜைகள், வோர்சா அல்லது அங்காராவிலுள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகளை பின்வரும் தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்:

**தொலைபேசி: (வோர்சோ) +48 795 031 376, +48 536 229 694;**

**(அங்காரா) +90 534 456 94 98, +90 312 427 10 32**

கோமல் அரச மருத்துவப் பல்கலைக்கழகம் மற்றும் பெலாரஸிலுள்ள க்ரோட்னோ அரச மருத்துவ பல்கலைக்கழகத்திலுள்ள இலங்கை மாணவர்கள் தாமாக முன்வந்து நாடு திரும்புவதற்கு வசதியாக மொஸ்கோவிலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தொடர்புகளைப் பேணி வருகின்றது. மேற்குறிப்பிட்ட இரண்டு பல்கலைக்கழகங்களிலிருந்தும் தற்காலிகமாகத் திரும்ப விரும்பும் மாணவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக மொஸ்கோவிலுள்ள இலங்கைத் தூதரகத்தைத் தொடர்புகொண்டு தகவல் மற்றும் உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம்:

**தொலைபேசி: +79 80 144 5726**

எல்லை நாடுகளின் எல்லைக்குள் நுழையும் புலம்பெயர் இலங்கையர்கள் / மாணவர்கள் பின்வருவனவற்றை தம்முடன் எடுத்துச்செல்லுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்:

**- செல்லுபடியாகும் கடவுச்சீட்டுகள்/ பயண ஆவணங்கள்;**

**- தற்காலிக பயண ஆவணம் (கடவுச்சீட்டு) தேவைப்பட்டால், பிறப்புச் சான்றிதழ்கள், கடவுச்சீட்டின் பிரதிகள் போன்ற அடையாள ஆவணங்கள்;**

**- எல்லையில் நீண்ட நேரம் காத்திருப்பதால் போதுமான அளவு உணவு, தண்ணீர் மற்றும் மருந்துகள்**

வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களின் குடும்பங்கள் / மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் / பிள்ளைகளின் நாட்டை விட்டு வெளியேறும் நிலை குறித்த புதிய தகவல்களை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தொடர்ந்தும் வழங்கும்.

மேலதிக விசாரணைகளுக்கு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் விவகாரப் பிரிவை பின்வரும் வகையில் தொடர்புகொள்ளலாம்:

**தொலைபேசி: +94 11 233 8837, +94 11 233 5942**

**மின்னஞ்சல்:** dgcons@mfa.gov.lk

# கொழும்பின் சில பகுதிகளில் 14 மணிநேர நீர்வெட்டு

கொழும்பின் சில பகுதிகளில் நாளை (05) 14 மணித்தியாலங்களுக்கு நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.


நாளை (05) சனிக்கிழமை இரவு 8 மணி முதல் ஞாயிற்றுக்கிழமை (06) முற்பகல் 10 மணி வரை நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை (NWS&DB) தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில், கொழும்பு 07, 08, 10, 12, 13, 14 மற்றும் கொழும்பு 15 ஆகிய பகுதிகளில் நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்த காலப்பகுதியில் கொழும்பு 02, 03 மற்றும் 11 ஆகிய பகுதிகளில் குறைந்த அழுத்தத்துடன் நீர் விநியோகிக்கப்படவுள்ளது.

அவசர திருத்தப்பணிகள் காரணமாக நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை கூறியுள்ளது.

# 24 மணிநேரம் வரிசையில் நின்று எரிபொருள் பெற்ற மக்கள்






நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக கடந்த நாட்களாக எரிபொருள் வரிசைகள் பாரியளவில் அதிகரித்து வருகின்றன.

எரிபொருளைப் பெறுவதற்கு 24 மணித்தியாலங்களுக்கும் அதிகமான நேரம் வரிசையில் காத்திருக்கவேண்டியுள்ளதாகவும் சாரதிகள் தெரிவித்தனர்.

தம்புள்ளையிலுள்ள ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் நீண்ட வரிசைகள் காணப்படுகின்றன, கார் உரிமையாளர்கள் மற்றும் விவசாயிகள் பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்படும் இயந்திரங்களுடன் வரிசையில் நிற்கின்றனர்.

கேன்களில் எரிபொருள் வழங்காததால் விவசாயிகள் இவ்வாறு செய்யவேண்டியுள்ளதென தெரியவந்துள்ளது.

விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் பல இயந்திரங்களுடன் விவசாயிகள் வரிசையில் காத்திருந்தமை பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது.

# படையினரால் மனிதநேய திட்டங்கள் முன்னெடுப்பு





யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் 523ஆவது பிரிகேடின் கீழ் சாவகச்சேரியை தளமாகக்கொண்டமைந்துள்ள 4ஆவது விஜயபாகு காலாட்படையணியின் படையினரால் “இதயமுள்ள இராணுவம்” திட்டத்தின்கீழ் பெப்ரவரி 26 அன்று பல்வேறு சமூகப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அதற்கமைய, படையணி வளாகத்திற்கு அழைப்பிக்கப்பட்டிருந்த சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த 20 கர்ப்பிணித் தாய்மாருக்கு குழந்தைகளுக்கான அத்தியாவசியப் பொருட்கள், மரக்கறி வகைகள் மற்றும் நிவாரணப் பொருட்கள் அடங்கிய 7000 ரூபா பெறுமதியான பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

அதேநேரம், மட்டுவில் சந்திரமலேஷா பாடசாலையில் கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர் ஒருவருக்கு ஜப்பானில் வசிக்கும் ருவன் ரத்நாயக்கவின் நிதி உதவியை கொண்டு 50,000 ரூபா பெறுமதியான புலமைப்பரிசில் வழங்கி வைக்கப்பட்டது.

# இலங்கையில் யுத்த வெற்றியின் பின்னர் சிறுபான்மையினர் மீது தீவிர இனவாதம்

## நியூசிலாந்து உயர்ஸ்தானிகரிடம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு




யுத்த வெற்றியின் பின்னர், 2009ஆம் ஆண்டுக்குப் பிறகு இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும், அதனூடாக நாட்டை கட்டியெழுப்புவதற்கும் பதிலாக அரசியல் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பொதுவாக சிறுபான்மை மக்களை குறிப்பாக, முஸ்லிம்களை இலக்குவைத்து இனவாதத்தைத் தூண்டும் நடவடிக்கைகள் அதிகளவில் இடம்பெற்றுவருவதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கல் அப்லெடன் தம்மைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது சுட்டிக்காட்டினார்

இலங்கைக்கும் மாலைதீவிற்குமான நியூசிலாந்தின் உயர்ஸ்தானிகர் மைக்கல் அப்லிடன், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமை கட்சியின் “தாருஸ்ஸலாம்” தலைமையகத்தில் புதன்கிழமை (2) சந்தித்து கலந்துரையாடினார். தற்போதைய நெருக்கடியாக அரசியல் கள நிலைவரத்தை மையப்படுத்தியதாக உரையாடல் இடம்பெற்றது.

நியூசிலாந்தில் இடம்பெற்ற கோரமான கிரைஸ்ச்சேர்ச் பள்ளிவாசல் படுகொலைச் சம்பவத்தைத் தொடர்ந்து அந்நாட்டின் பிரதமர் ஜசிந்தா ஆர்டர்ன் மிகவும் சிறப்பான விதத்தில் மனிதாபிமானத்துடன் நடந்துகொண்டார் என ஆரம்பத்திலேயே அவர் உயர்ஸ்தானிகரிடத்தில் நன்றி தெரிவித்தார்.

பிரஸ்தாப சந்திப்பின்போது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது,

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முறைகேடாகப் பயன்படுத்தி சிறுபான்மை சமூகத்தினர் அநேகர் போதிய சாட்சியங்களின்றி கைது செய்யப்பட்டு, வருடக்கணக்காக சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அந்தச் சட்டம் முற்றாக ஒழிக்கப்பட்டு அதற்குப் பகரமாக வேறு சட்டம் கொண்டுவரப்படலாம். ஆனால், உள்நாட்டு மற்றும் சர்வதேச அழுத்தங்களையும் மீறி, அதில் அரசாங்கத்துக்கு தேவையான விதத்தில் சில திருத்தங்களை மட்டும் செய்வதற்கு முயற்சிக்கின்றனர்.

நான் முன்னர் நீதி அமைச்சராகவும் பதவி வகித்துள்ளேன். உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் பற்றி விசாரணை செய்த நாடாளுமன்ற தெரிவுக் குழுவிலும் இடம்பெற்றிருந்தேன்.

அந்த தாக்குதல் தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும். ஆனால், அனைத்தும் மர்மமாக இருக்கின்றன.

அரசாங்கத்திற்கு வாக்களித்த மக்களுக்கு அதன்மீது இப்போது வெறுப்பு அதிகரித்துள்ளது. அரசாங்கம் சரிவர பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்யாததன் விளைவாக நாடு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் தஞ்சமடைந்திருக்க வேண்டிய காலகட்டம் தாமதமாகிவிட்டது. ஆனால், இன்னும் முடியும். எதற்கெடுத்தாலும் கொவிட் -19 தொற்றைக் காரணம் காட்டி சமாளித்துக்கொண்டு போகின்றனர்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் பலவிதமான தொல்லைகளுக்கு உட்படுத்தப் படுகின்றனர். முஸ்லிம் எங்களது சமய, கலாசார ஆடைகள் அணிவதற்கு பெரும்பாலும் அனுமதி அளிக்கப்படுவதில்லை.

எங்களது நிலபுலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன பலங்கொடை, தப்தர் ஜைலானி போன்ற முஸ்லிம்களின் பாரம்பரிய புராதன இடங்கள் கூட பறிக்கப்படுகின்றன.

முஸ்லிம்களின் விவாக, விவாகரத்து சட்டத்திலும் பிரச்சினைகளைக் கிளப்பியுள்ளனர்

தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தாமல் தாமதமாக்கிக்கொண்டே போகின்றனர் - என்றார்.

இலங்கை மக்களின் நலனில் நியூசிலாந்து அரசாங்கம் கரிசனையுடனிருப்பதாக உயர் ஸ்தானிகர் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தான் எழுதிய இலங்கை முஸ்லிம்கள் பற்றிய ஆய்வு நூலின் பிரதியொன்றையும் உயர்ஸ்தானிகரிடம் கையளித்தார்.

உயர்ஸ்தானிகராலயத்தின் ஆலோசகர் செல்வி சுமது ஜயசிங்ஹமற்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் இணைப்புச் செயலாளரும் கல்முனை மாநகர பிரதி மேயருமான ரஹ்மத் மன்சூர் ஆகியோரும் இதன்போது உடனிருந்தனர்.

# ரயில் முன் பாய்ந்து பெண் தற்கொலை

(ரஸீன் ரஸ்மின்)

மாதம்பை 43ஆம் மைல் கட்டை பகுதிக்கு அருகில் சிலாபத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணம் செய்த ரயில் முன் பாய்ந்து பெண்ணொருவர் தற்கொலை செய்துகொண்டார்.

நேற்றுமுன்தினம் (02) மாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக மாதம்பை பொலிஸார் தெரிவித்தனர்.

45 மற்றும் 50 வயதுடையவர் என சந்தேகிக்கப்படும் குறித்த பெண் பூக்கள் பொறிக்கப்பட்ட சட்டையும், பாவாடையும் அணிந்திருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்காக சிலாபம் ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மாதம்பை பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புத்தளம் பொதுச் சந்தையில் வாகனத் தரிப்பிடம் திறப்பு



(ரஸீன் ரஸ்மின்)

மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் விவகார இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் புத்தளம் பொதுச் சந்தையில் (இல 2) இணைப்பூட்டு கற்கள் பதிக்கப்பட்ட வாகன தரிப்பிடம் நேற்றுமுன்தினம் (02) வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பெரேரா பிரதம அதிதியாக கலந்துகொண்டு குறித்த வாகன தரிப்பிடத்தை திறந்துவைத்தார்.

புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் மற்றும் உப நகர பிதா உட்பட நகரசபை உறுப்பினர்களின் வேண்டுகோளின்பேரில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் விவகார இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்திருந்தார்.

இதன்போது, பொது சந்தை வளாகத்தைப் பார்வையிட்ட இராஜாங்க அமைச்சர், அங்கு காணப்படும் குறைபாடுகள் பற்றியும் புத்தளம் நகர பிதாவிடம் கேட்டறிந்துகொண்டார்.

அத்துடன், குறித்த சந்தைக்கு தேவையான கழிவறைத் தொகுதியை தனது அமைச்சினூடாக பெற்றுத் தருவதாகவும், ஏனைய குறைபாடுகள் பற்றி அதற்குப் பொறுப்பான அமைச்சர்களோடு கலந்துரையாடி கட்டம் கட்டமாக நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, புத்தளத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் அல்பா வர்த்தக கேந்திர மையத்தையும் கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பெரேரா பார்வையிட்டார்.

இதன்போது, மறைந்த முன்னாள் புத்தளம் நகர சபையின் தலைவர் மர்ஹூம் கே.ஏ.பாயிஸின் சிந்தனையில் உருவான அல்பா வர்த்தக மத்திய நிலையத் திட்டத்தின் தற்போதைய நிலவரங்களை பற்றி புத்தளம் நகர பிதா எம்.எஸ்.எம்.ரபீக், இராஜாங்க அமைச்சருக்கு விபரித்தார்.

புத்தளத்தில் இவ்வாறானதொரு வர்த்தக மையத் தொகுதி அமையப்பெறுவது மாவட்ட மக்களுக்கு மிகப்பெரும் வரப்பிரசாதம் என இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த பெரேரா சுட்டிக்காட்டினார்.

அத்துடன், இத்திட்டத்தை சிறப்பாக முன்னெடுத்துவரும் தற்போதைய நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் மற்றும் உறுப்பினர்களுக்கும் தனது பாராட்டுகளையும் தெரிவித்ததுடன், தன்னால் முடியுமான உதவிகளைச் செய்வதாகவும் வாக்குறுதி அளித்தார்.

இதன்போது, புத்தளம் நகரசபை உறுப்பினர்கள் ரனீஸ் பதூர்தீன், ஜெளபர் மரிக்கார், மொஹான் துமிந்த, பேர்னாட் ராஜபக்ஸ, நகுலேஸ்வரன் மற்றும் புத்தளம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிரதம பொறியியலாளர் அருள்தாஸன், தொழில்நுட்ப உதியோகத்தர் உட்பட நகரசபை உயரதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# 300 லீற்றர் பெற்றோலுடன் தீப்பிடித்து எரிந்த தனியார் நிறுவனமொன்றின் களஞ்சியசாலை

## பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் தீயில் கருகி நாசம்







(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை, உப்புவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆண்டாங்குளம் பிரதேசத்தில் தனியார் நிறுவனமொன்றின் களஞ்சியசாலையாக பயன்படுத்தப்பட்ட வீடொன்று தீப்பிடித்ததில் பல இலட்சம் பெறுமதியான பல பொருட்கள் தீயில் கருகி நாசமடைந்துள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தீப்பரவல் நேற்று (03) நண்பகல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தீப்பற்றிய வீட்டில் 3 மோட்டார் சைக்கிள்களும் ஒரு குளிர்சாதனப் பெட்டியும் 300 லீற்றருக்கும் அதிகமாக சேமித்து வைக்கப்பட்ட பெற்றோல் கொள்கலன் உட்பட வீட்டின் ஒருபகுதி முற்றாக எரிந்து நாசமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு தீப்பற்றிய வீடு, தனியார் நிறுவனமொன்றின் களஞ்சியசாலையாக பயன்படுத்தப்பட்ட வீடு எனவும் தீப்பற்றிய மைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், திருகோணமலை நகராட்சி மன்ற தீயணைப்புப் படையினரின் முயற்சியில் தீப்பரவல் முற்றாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

தீப்பரவல் தொடர்பாக மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவை மட்டும் நம்பியுள்ள அரசால் டொலர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைப் பெறமுடியாது

## நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவிப்பு!



(சம்மாந்துறை நிருபர்)

சீனாவை மட்டும் நம்பியுள்ள அரசால் டொலர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைப் பெற முடியாது - என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

திருகோணமலை கிண்ணியாவிலுள்ள மாகத் நகர் ஹமீதியா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

இந்த நாட்டில் எரிவாயு இல்லை, மின்சாரம் இல்லை, வாகன இறக்குமதி இல்லை. இவை அனைத்துக்கும் மூல காரணம் நாட்டில் டொலர் இல்லை. டொலர் இல்லாமல் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படும் என்பதை நாம் 2020ஆம் ஆண்டே நாடாளுமன்றத்தில் தெரிவித்தோம்.

அப்போதே மாற்றுவழிகளை தேடியிருந்தால் இந்தப் பிரச்சினைகளை கட்டுப்படுத்தி இருக்கலாம். ஆனால், சீனாவை மட்டும் நம்பி சர்வதேசத்தை பகைத்துக்கொண்டிருக்கும் இந்த ஆட்சியாளர்களால் இதற்கான நிரந்தர தீர்வைப் பெறமுடியாது. இதற்குரிய முடிவை வருகின்ற தேர்தலில் மக்கள் வழங்குவார்கள்.

இந்த அரசை விரட்டி அடித்து மக்கள் விரும்பும் ஆட்சியை முன்னெடுக்க ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியைக் கொண்டுவருவார்கள் - என்றார்.

# 46 பயனாளிகளுக்கு 32 இலட்சம் ரூபா பெறுமதியான கைத்தொழில் உபகரணங்கள் மண்முனையில் கையளிப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்திற்கமைவாக பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் ஒரு கிராம சேவகர் பிரிவுக்கு ஒரு கைத்தொழிலாளரை உருவாக்கும் செயற்திட்டம் 2021இற்கு அமைய கைத்தொழிலாளர்களுக்குரிய உபகரணம் வழங்கும் நிகழ்வு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வ.வாசுதேவன் தலைமையில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்று (03) இடம்பெற்றது.

இங்கு தெரிவுசெய்யப்பட்ட 46 பயனாளிகளுக்கு 32 இலட்சம் ரூபா பெறுமதியான கைத்தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.சந்திரகாந்தன் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வுக்கு மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சுதர்சன் மற்றும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் செயலாளர் பூ.பிரசாந்தனும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பயனாளிகள் எனப் பலர் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி கலந்துகொண்டனர்.

இங்கு கலந்துகொண்ட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.சந்திரகாந்தன் கருத்து தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கமானது ஒவ்வொரு துறைக்கும் அமைச்சர்களை நியமித்து அதற்கான அபிவிருத்தியை விரிவுபடுத்திவருகிறது. அவ்வாறு அபிவிருத்திக்கான சூழல் வருகின்றபோது நாடு ஓர் இக்கட்டான சூழலில் மாட்டிக்கொண்டுள்ளது. அரசாங்கத்தின் நோக்கம் மிகத் தெளிவானது. கிராமத்திலுள்ள முயற்சியாளர்களை தூக்கி நிறுத்தவேண்டும் என்பது திட்டங்களைப் பெற்று திட்டங்களை செயற்படுத்தல் மாத்திரம் வெற்றியல்ல. அதனைப் பயன்படுத்தி நன்மைகளைப் பெறுவதே உண்மையான வெற்றியாகும். திட்டத்தின் சிறப்பம்சங்களை உணராமல் போனால் திட்டம் வெற்றிபெறாது.

கிராமிய பொருளாதாரத்தை முன்னேற்றி, அனைவரும் சொந்தக்காலில் நின்று முன்னேறவேண்டும். அரசாங்கத்தின் பிரதிநிதிகள் என்ற வகையில் மக்களின் அபிவிருத்திக்காக பாடுபடுவோம் - என்றார்.



கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண காரியாலயத்தை இடமாற்ற முஸ்தீபு

## இளைஞர் பிரதிநிதிகள் நீதிகோரி பிரதேச செயலரிடம் மகஜர் கையளிப்பு



**அம்பாறை நகரிலுள்ள அரச ஒசுசலவில் மருந்துகளுக்கான தட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளதையடுத்து வயோதிபர்கள் நேற்று (03) அங்கு வரிசையில் காத்துநிற்பதைக் காணலாம்.**
**(படம் - மாவடிப்பள்ளி நிருபர்)**

(மாளிகைக்காடு, கல்முனை நிருபர்கள்)

இளைஞர் அபிவிருத்திப் பணிகளில் இன மற்றும் பிரதேசவாதங்கள் எதுவுமின்றி நேர்மையான முறையில் தேசிய நலன்களைக் கவனத்திற்கொண்டு செயற்பட்டுவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண அலுவலகம் சாய்ந்தமருதிலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கிவருகிறது. அதனை அம்பாறை நகரத்திற்கு கொண்டு செல்லவேண்டி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், அதனை தடுத்து நிறுத்தி, அவ்விடத்திலேயே தொடர்ந்தும் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை முன்வைத்து முன்னோடி இளைஞர்கள் சிலர் அரச மேல்மட்டத்திற்கு அனுப்பவேண்டி சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக்கிடம் மகஜரொன்றை நேற்று (03) மாலை கையளித்தனர்.



இளைஞர் நாடாளுமன்ற கப்பல் துறைமுகங்கள் பிரதியமைச்சர் எஸ்.எம்.றிஹான் தலைமையிலான தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கூட்டுறவு (நிஸ்கோ) முன்னாள் பணிப்பாளர் யு.எல்.என்.ஹுதா உமர், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற நிஸ்கோ மாவட்ட கிளையின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஹிஸாம் ஏ பாவா அடங்கிய இளைஞர்கள் மகஜரை கையளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தனர்.

இதன்போது, 2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தில் எவ்வித தடைகளுமின்றி முறையாக இயங்கிவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண அலுவலகத்தின் நடவடிக்கைகளை சீர்குலைக்கும் வகையில் சிலர் ஈடுபட்டு வருவதையிட்டு, மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.

ஓரிரு உத்தியோகத்தர்களுக்காக எவ்வித குறைபாடுகளும் இல்லாமல் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் தமிழ்பேசும் இளைஞர்கள் பயன்பெறும் குறித்த அலுவலகம், ஏன் மாற்றப்பட வேண்டும்? நாட்டில் இனங்களுக்கிடையிலான நல்லுணர்வு பற்றியும் இளைஞர்களின் அபிவிருத்தி பற்றியும் மக்களும் அரசாங்கமும் கருத்து கூறிவரும் இச்சூழ்நிலையில் அதனைச் சிதைக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் இவ்வாறான நடவடிக்கைகளை உடனடியாக கிள்ளி எறியவேண்டும் என்பதே எமது குறிக்கோளாகும்.

எனவே, சாய்ந்தமருதில் இயங்கிவரும் கிழக்கு மாகாண அலுவலகத்தின் செயற்பாடுகளை தொடர்ந்தும் அதே இடத்தில் மேற்கொள்ளும் வகையில் அதற்கான உத்தரவுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பிறப்பிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் ஜனாதிபதி, பிரதமர், இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தவிசாளர் ஆகியோர் தலையிட்டு இந்த அநீதிக்கு எதிராக நீதியை பெற்றுத்தர வேண்டும் - என்றனர்.

# பல்லின மக்களும் கலந்துகொண்ட இறக்காமம் பிரதேச கலை இலக்கிய விழா









(மாளிகைக்காடு நிருபர்)

2021 ஆம் ஆண்டுக்கான இறக்காமம் பிரதேச இலக்கிய விழா, கலாசார அதிகாரசபையின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளரும் இறக்காமம் கலாசார அதிகாரசபையின் தலைவருமான எம்.எஸ்.எம்.ரஷ்ஷான் (நளீமி) தலைமையில் பிரதேச செயலகக் கூட்ட மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

பிரதேச மட்டத்தில் இடம்பெற்ற கலை இலக்கியப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்கள் மற்றும் திறந்த பிரிவில் வெற்றியீட்டிய கலைஞர்களுக்கான சான்றிதழ்களும் பரிசுப்பொருட்களும் இதன்போது வழங்கப்பட்டன. மேலும் இறக்காமம் கலாசார அதிகாரசபைக்கு பங்காற்றிய கலாசார அதிகாரசபையின் உப தலைவர் எஸ்.எல்.நிஸார் (பிரதி கல்விப் பணிப்பாளர்), பொருளாளர் யூ.எல்.ஜிப்ரி (ஆசிரியர்) ஆகியோருக்கு விசேட கௌரவமும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு கலை நிகழ்ச்சிகளை வழங்கிய மூத்த கலைஞர் கலாபூஷணம் பி.டி.யாசீன்பாவா, ஐ.ஹுசைன் றிஸ்வி, ஏ.எல்.ஹாறூன், ஜனாபா பர்சானா றியாஸ் ஆகியோரும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

2021ஆம் ஆண்டுக்கான இறக்காமம் பிரதேச இலக்கிய விழா நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக, சது அமீரலிபுர வித்தியாலய மாணவர்களின் பொல்லடிக் குழுவின் கிராமிய கோலாட்டம் இடம்பெற்றது. மேலும் மாணிக்கமடு கலை மன்றத்தின் தமிழ் பாரம்பரிய நடனமும், எச்.நதீகா குமாரியின் பயிற்றுவிப்பில் சிங்கள நடனக் குழுவினர், தங்கள் பாரம்பரிய கலாசார கண்டி நடனம் மற்றும் கலை நிகழ்ச்சிகளை அரங்கேற்றினர்.

இவ்விலக்கிய விழா கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.நௌபீஸா, கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் (கிழக்கு மாகாணம்) வசந்தா ரஞ்சனி, முஸ்லிம் சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல்.இப்றா லெப்பை ஆகியோரின் நெறியாள்கையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நஸீல், கணக்காளர் றிம்ஸியா அர்ஷாட், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஹம்சார், கிராம நிலைதாரிகளின் நிர்வாக உத்தியோகத்தர் எச்.பி.இந்திரசிறி யசரட்ன, மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் டீ.எம்.றிம்ஷான் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும், இறக்காமம் கலாசார அதிகாரசபையின் உப தலைவர் எஸ்.எல்.நிஸார் (பிரதி கல்விப் பணிப்பாளர்), பொருளாளர் யூ.எல்.ஜிப்ரி (ஆசிரியர்), சது-அமீர் அலிபுர வித்தியாலய அதிபர் எஸ்.எம்.லாஹிர், சது-ரோயல் கனிஷ்ட கல்லூரி அதிபர் எம்.ஏ.'பஜீர் ஆகியோர் உட்பட கலைஞர்கள், இலக்கியவாதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

# கிராமங்களில் முறையாக பராமரிக்கப்படாமல் இரவு, பகலாக ஒளிரும் மின் விளக்குகளை அகற்றுவதற்கு நடவடிக்கை

## மூதூர் பிரதேச சபை உப தவிசாளர் துரைநாயகம் தெரிவிப்பு

(கந்தளாய் நிருபர்)

மின்சாரத்தை சேமிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும் முகமாக கிராமங்களில் முறையாக பராமரிக்கப்படாமல் இரவு, பகலாக ஒளிரும் மின் விளக்குகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் - என மூதூர் பிரதேச சபை உப தவிசாளர் சி.துரைநாயகம் தெரிவித்துள்ளார்.

இன்றைய நிலையில் எமது நாடு பாரிய மின்சார பற்றாக்குறைக்கு முகங்கொடுத்து வருகின்றது. இதனால் மின்சாரத்தை வீண் விரயம் செய்யாமல் அதனை சரியாக பயன்படுத்தவேண்டிய பொறுப்பு மக்களுக்கும் இருக்கின்றது. எமது சபையினால் கிராம மக்களின் நலனை கருத்திற்கொண்டு பல மின் விளக்குகள் கிராமங்கள்தோறும் பொருத்தப்பட்டிருக்கின்றன. எனினும், இவை இரவு, பகலாக தொடர்ந்து ஒளிர்ந்து மின்சாரம் வீண்விரயமாக்கப்படும் செயற்பாட்டை



அனுமதிக்க முடியாது.

கிராமங்கதோறும் இருக்கின்ற மின் விளக்குகளை சபை பராமரிப்பதென்பது சிரமமான காரியம் என்பதால் இந்த மின் விளக்குகளை அருகில் உள்ளவர்கள் அல்லது இதன் மூலம் பயனடைபவர்கள் அல்லது கிராமத்தின் சங்கங்கள் இவற்றை முறையாக பராமரிக்க முன்வர வேண்டும். இது தொடர்பான அறிவித்தல்கள் பிரதேச சபையின் வட்டார உறுப்பினர்களின் ஊடாக கிராம மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இந்த விடயம் தொடர்பாக சபையில் அடிக்கடி தவிசாளரினால் பேசப்பட்டும் வருகின்றது. இது தொடர்பாக கடந்த சபை அமர்வின்போது இறுக்கமான தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே, கிராமங்களில் பொருத்தப்பட்டிருக்கின்ற வீதி மின் விளக்குகளை முறையாக பராமரிக்க அக் கிராம மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் முறையாக பராமரிக்கப்படாத வீதி மின் விளக்குகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# "சீரழிந்த தாயகத்தைக் கட்டியெழுப்பும் தீர்வு" நிகழ்ச்சி; சாய்ந்தமருதில் உரையாற்றுகிறார் அநுரகுமார எம்.பி.

(நூருல் ஹுதா உமர்)

தேசிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியவற்றின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க இன்று வெள்ளிக்கிழமை (04) கல்முனை பிராந்தியத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

சாய்ந்தமருது லீ மெரீடியன் வரவேற்பு மண்டபத்தில் மாலை 5 மணிக்கு நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "சீரழிந்த தாயகத்தைக் கட்டியெழுப்பும் தீர்வு" எனும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு இவர் உரையாற்றவுள்ளார்.




நாட்டின் பல பகுதிகளிலும் நடைபெற்று வரும் நிகழ்வின் ஒரு பகுதியாக நடைபெறவுள்ள இந்நிகழ்வில், தேசிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியற்றின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளதாக தேசிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியவற்றின் ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# கிண்ணியா மாகத் நகர் மைதானத்திற்கு இம்ரான் மகரூப் எம்.பி. கள விஜயம்



(சம்மாந்துறை நிருபர்)

திருகோணமலை மாவட்ட கிண்ணியா பிரதேசத்திலுள்ள மாகத் நகர் ஹமீதியா விளையாட்டுக் கழக மைதானத்துக்கு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கள விஜயம் ஒன்றினை நேற்று (03) மேற்கொண்டிருந்தார்.

மைதான அபிவிருத்திகள், விளையாட்டு வீரர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இளைஞர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

இவ்விஜயத்தில் கிண்ணியா பிரதேச சபை தவிசாளர் நசீர், கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர், இளைஞர்கள் எனப் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# போக்குவரத்துக்கு பெரும் ஆபத்தான வீதியாக மாறிவரும் அல் - அமீன் வீதி

## பாதையை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை



(காத்தான்குடி நிருபர்)

புதிய காத்தான்குடி 06, 167 டீ கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட அல்-அமீன் வீதியின் நிலையே இதுவாகும். நீண்டகாலமாக அபிவிருத்தி செய்யப்படாமல் இருக்கும் இவ்வீதி மக்கள் போக்குவரத்துக்கு ஆபத்தான நிலையில் காணப்படுகிறது.

பிரதான பாடசாலைகளாகிய மத்திய கல்லூரி, அல்-அமீன் வித்தியாலயம் ஆகிய இரு தேசிய பாடசாலை மாணவர்களினதும் பிரதான வீதியாக பயன்படுத்தப்படுவதுடன் மழை காலங்களில் குன்றும் குழிகளில் சேற்று நீர்த்தேங்கி காணப்படுவதால் பெரும் ஆபத்துக்கும் அசௌகரியங்களுக்கும் முகம்கொடுக்க வேண்டியநிலை காணப்படுவதாக மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியை சரிசெய்து மக்கள் பாவனைக்கு உகந்ததாக சரிசெய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

காத்தான்குடி நகர சபை மூன்றாம் வட்டார உறுப்பினர் மற்றும் காத்தான்குடி நகரசபை உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

# 'படைப்பாக்க ஆளுமைகள்' நூல் வெளியீடு

(கிண்ணியா நிருபர்)

நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் பல்துறைப் படைப்பாளி பா.மோகனதாஸ் எழுதிய, 'படைப்பாக்க ஆளுமைகள் (நேர்காணல்கள்)' எனும் நூல் வெளியீடு திருகோணமலை சர்வோதய மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கவிஞர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் தலைமையிலான இந்நிகழ்வில், தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி முதன்மை அதிதியாகவும் பட்டணமும் சூழலும் பிரதேச சபை உபதவிசாளர் ஜனாப் முகமட் நௌபர் சிறப்பு அதிதியாகவும் சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் வீ.கோணேஸ்வரன் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் அ.அச்சுதன் வரவேற்புரையினையும் திருகோணமலை பத்திரகாளியம்பாள் ஆலய தேவஸ்தான குரு வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ சோ.ரவிச்சந்திரக் குருக்கள் ஆசியுரையையும் வழங்குவதுடன், முதற் பிரதியையும் பெறவுள்ளார்.

கவிஞர் க.யோகானந்தன் மற்றும் கவிஞரும் ஆசிரியருமான செ.சந்திரகலா ஆகியோர் நூல் நயத்தினையும் ஏற்புரையினை நூலாசிரியரும் நன்றியுரையினை இளம் ஊடகவியலாளர் ஆர்.சமிராவும் ஆற்றவுள்ளார்.

இந்நூல், ஈழத்து இலக்கிய வரலாற்றில் அதிக ஆளுமையாளர்களின் (73) அனுபவங்களை பேசும் முதல் நேர்காணல் நூலாகவும் அவசியமானதொரு புது வரவாகவும் விளங்குகின்றதென்பதும் குறிப்பிடத்தக்கது.

## நற்பிட்டிமுனை சமுர்த்தி வங்கி

# புதிய முகாமையாளராக பைசால் கடமைகளைப் பொறுப்பேற்பு



(கல்முனை நிருபர்)

நற்பிட்டிமுனை சமுர்த்தி வங்கியின் முகாமையாளராக எம்.ஏ.எம்.பைசால் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி முன்னிலையில் நேற்று முன்தினம் (02) நற்பிட்டிமுனை சமுர்த்தி வங்கியின் கடமைகளை பதில் முகாமையாளராக இதுவரை கடமையாற்றிய ஏ.ஆர்.எம்.சாலிஹிடமிருந்து பொறுப்பேற்றுக்கொண்டார்.

கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ் உட்பட சமுர்த்தி அதிகாரிகள் எனப் பலரும் இதன்போது கலந்துகொண்டனர்.

# சௌபாக்கியா திட்டத்தின்கீழ் கோழிக்குஞ்சு உற்பத்திசெய்யும் இயந்திரங்கள் கையளிப்பு



(பெரியநீலாவணை நிருபர்)

சௌபாக்கியா உற்பத்திக் கிராமம் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சு உற்பத்திசெய்யும் இயந்திரங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (03) நிந்தவூர் அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

நிந்தவூர் பிரதேச செயலகத்தின் அட்டப்பள்ளம் கிராமத்தில் சௌபாக்கியா உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் கோழி வளர்ப்பு வேலைத்திட்டம் தெரிவுசெய்யப்பட்டு பயனாளிகளுக்கு பல்வேறு உதவித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு கட்டமாக தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு சங்கங்கள் ஊடாக இந்த கோழிக்குஞ்சு உற்பத்தி செய்யும் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லத்தீப் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பயனாளிகளுக்கு உதவித்திட்ட உபகரணங்களை வழங்கினார்.

நிகழ்வின்போது உளவளத்துணை தொடர்பாக பொதுமக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்கள் மற்றும் அதிலிருந்து விடுபடுவது தொடர்பாக உளவள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஆர்.தஹ்லான் விளக்கமளித்தார்.

இந்த நிகழ்வில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.சுல்பிகா, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட சௌபாக்கியா உற்பத்தி கிராம பயனாளிகளும் கலந்துகொண்டனர்.

# திருகோணமலையில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு!




(கிண்ணியா நிருபர்)

சுவிற்சர்லாந்து பேர்ன் மாவட்டம் மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி சமூகநலம் பண்பாடு அறப்பணி மையத்தினால் திருகோணமலையில் வறிய பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்று (03) இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வு அறப்பணி மையத்தின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஆசிரியர் சக்தி திருச்செந்தூரன் தலைமையில் இடம்பெற்றது.

திருகோணமலை அன்புவழிபுரம் கலைமகள் வித்தியாலயம், விபுலானந்தா கல்லூரி உள்ளிட்ட திருகோணமலை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் 50 வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இக்கற்றல் உபகரணங்கள் மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடத்தின் நாயகர் அருட்திரு பங்காரு அடிகளாரின் 82ஆவது அவதாரத்திருநாளை முன்னிட்டு அறப்பணி மையத்தின் நிறுவுனர் சக்தி சுவிஸ் சுரேஷ் சகோதரரின் ஏற்பாட்டில் லண்டன் மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் சமூகநலம் பண்பாடு ஈஸ்ராம் வார வழிபாட்டு மன்றத்தின் நிதி அனுசரணையில் வழங்கிவைக்கப்பட்டன.

இதன்போது, சுமார் ஐம்பதாயிரம் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டிருந்தன. இந்நிகழ்வில், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், அறப்பணி மையத்தின் அறப்பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிராக வாழைச்சேனையிலும் கையெழுத்து சேகரிப்பு






(கல்குடா நிருபர்)

இலங்கைத் தமிழரசுக் கட்சி வாலிபர் முன்னணியின் ஒழுங்கமைப்பில் நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிரான கையெழுத்துப் போராட்டத்தின் அடுத்த நகர்வு வாழைச்சேனைப் பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி வாலிபர் முன்னணியின் தலைவரும், வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினருமாகிய கி.சேயோன் ஒழுங்கமைப்பில் வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் க.நல்லரெட்ணம் தலைமையில் வாழைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தின் முன்பாக இடம்பெற்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், ஞா.சிறிநேசன், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரமுகர்கள், வாலிபர் முன்னணி உறுப்பினர்கள் கலந்துகொண்டு பொதுமக்களிடம் கையெழுத்து சேகரிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது கோறளைப்பற்று பிரதேசத்திலுள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் பலர் கலந்து கொண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிரான கையெழுத்துப் போராட்டத்தில் ஈடுபட்டு கையொப்பம் இட்டதுடன், மக்களுக்கு விழிப்புணர்வு துண்டுப்பிரசுரமும் வழங்கப்பட்டது.

# வெருகல் பிரதேச சபையின் புதிய தவிசாளராக விஜயரகுவரன் நியமனம்



(கந்தளாய் நிருபர்)

வெருகல் பிரதேச சபையின் புதிய தலைவராகத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த தேவராசா விஜயரகுவரன் நேற்று (03) பதவியேற்றார்.

இந்தப் பதவியேற்பு நிகழ்ச்சியில் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட தலைவர் சண்முகம் குகதாசன், துணைத்தலைவர் வி.விஜயகுமார், முன்னாள் பிரதேச சபைத் தலைவர் க.சுந்தரலிங்கம், பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபை செயலாளர், பிரதேச சபை ஊழியர்கள் முதலியோர் கலந்துகொண்டனர்.

பதவியேற்பு விழாவில் உரையாற்றிய புதிய பிரதேச சபைத் தலைவர் விஜயரகுவரன், தன்னை வெருகல் பிரதேச சபைத் தலைவராக நியமித்த தமிழரசுக் கட்சிக்கும் சிறப்பாகத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கத்துக்கும், மாவட்ட கிளைத் தலைவர் ச.குகதாசனுக்கும் பிரதேச சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் தனது உளமார்ந்த நன்றியினை முதலில் தெரிவித்துக்கொண்டார்.

தனது தவிசாளர் பதவிக்காலம் மிகக் குறுகிய காலமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுவதாகவும் உறுப்பினர் அனைவருடைய முன்மொழிவுகளையும் உள்வாங்கி ஒரு வரவு- செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவது தனது முதலாவது கடமையாக இருக்கும் - என்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சமுர்த்தி உதவிபெறும் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு



(நிந்தவூர் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் சமுர்த்தி உதவிபெறும் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அவர்களின் எதிர்காலத்தை சுபீட்சமாக்கும் நோக்கில் சுயதொழில் புரிவதற்கான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் அம்பாறை மாவட்டத்தின் மகாஓயா பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சமுர்த்தி உதவிபெறும் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் மகாஓயா பிரதேச செயலக கட்டிடத் தொகுதியில் இடம்பெற்றபோது திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வனஜீவராசிகள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான விமலவீர திசாநாயக்க பிரதம அதிதியாக கலந்துகொண்டு சுயதொழில் உபகரணங்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோத்தர்கள், சமுர்த்தி பயனாளிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# புத்த பகவானின் ஆசீர்வாதத்தை இலங்கை ஆட்சியாளர்கள் எவரும் பெறவில்லை

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீநேசன்

(வீரமுனை நிருபர்)

புத்த பகவானின் அரசாட்சி பற்றிய தத்துவங்கள் புனிதமானவை. அக்கொள்கை களின் அடிப்படையில் இந்நாடு 1948இலிருந்து இன்றுவரை ஆளப்பட்டிருந்தால் ஜப்பான்போல் அபிவிருத்தி அடைந்திருக்கும். தேசிய ஐக்கியம், ஆட்புல ஒருமைப்பாடு, இறைமை, மனித உரிமைகள், சட்டவாட்சி போன்றவை பாதுகாக்கப்பட்டிருக்கும். ஆனால், அந்த நேர்கணிய விடயங்கள் இந்நாட்டில் இடம்பெறவில்லை - என கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறீநேசன் தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் கூறுகையில்,

சிங்கள - பௌத்த அடிப்படை பிற்போக்கு வாதம் கூர்மையடைந்து, தமிழ்பேசும் மக்களை விரோதி வில்லர்களாக்கி சுயலாப அரசியல் செய்துவருகின்றது. இன, மதக் குரோதங்களை உருவாக்கி வளர்த்து தேர்தல் வெற்றிகளையும் ஆட்சியதிகாரங்களையும் குறிவைத்து நம் நாட்டு ஆட்சியாளர்கள் செயற்பட்டு வருகிறார்கள். ஆட்சியாளர்கள் மகாசங்கத்தவர்களைச் சந்தித்து ஆசீர்வாதம் பெறுகிறார்கள். ஆனால், அந்த ஆசிர்வாதம் பௌத்த தர்மப்பண்புகளை அரசியல்வாதிகளிடம் ஏற்படுத்தவில்லை.

இனக்கலவரம், இனப்போர், மனித உரிமைப் பேரவலம், மனிதர்கள் காணாமலாக்கப்படுதல், சித்திரவதைகள் போன்றவை ஏற்பட்டிருக்காது. சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் என்ற பிரிவினை இல்லாமல் இலங்கையர் என்ற பொதுத் தேசியத்தின் கீழ் சகோதர வாஞ்சையோடு நாம் வாழ்ந்திருக்கலாம். புத்திஜீவிகள் நாட்டைவிட்டு வெளியேறாமல் தமது ஆற்றலை நாட்டின் அபிவிருத்திக்கு வழங்கியிருப்பார்கள். 15



இலட்சம் தமிழர்கள் அயல்நாடுகளில் வாழும் நிர்க்கதி நிலையும் தமிழ் மக்கள் அகதிகளாக உலக நாடுகளில் அலையவேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருக்காது. ஊழல் மோசடிகள், கையூட்டுகள், கறுப்புப் பண வியாபாரம், போதைக் கலாசாரம் போன்றவை நிகழ்ந்திருக்காது. புத்த பகவான் பஞ்சசீலக் கொள்கை, ஆட்சித்தன்மைகள், ஜீவகாருண்ணியம், சகிப்புத்தன்மை, ஆசையைத் துறத்தல் பற்றியெல்லாம் அருள்மொழி ஆலோசனைகள் கூறியுள்ளார். அவற்றை ஆட்சியாளர்கள் அறிந்திருந்தும் செயற்படுத்தவில்லை. பிழைப்புவாத சுயநல அதிகார நாட்டல் பிற்போக்குவாத அரசியல் வியாபாரம், நாட்டையும் மக்களையும் அழிவுப்பாதைக்கே கொண்டுசென்றுள்ளது.

ஆசியாவில் பௌத்த மதப் பண்பாடுடைய பல நாடுகள் முன்னேறியுள்ளன. ஆனால், எமது நாடு 1948இலிருந்து இன்றுவரை சமூக பொருளாதார அரசியல் துறைகளில் முற்போக்கான வளர்ச்சியைக் காணவில்லை என்பதே உண்மையாகும். முற்போக்கானவர்கள் நாட்டை ஆளவேண்டும். அவ்வாறு நடந்தால் மக்களும் நிம்மதியாக வாழ முடியும். நமது தீர்க்கப்பட வேண்டிய உள்நாட்டுப் பிரச்சினையை தீர்க்கமுடியாத பிரச்சினையாக மாற்றி சர்வதேச மயப்படுத்தியது ஆட்சியாளர்களின் சாதனையாகும்.

குரங்கின் கைப்பூமாலையாக ஆட்சி அதிகாரங்கள் மாறினால், பூமாலை போன்று ஜனநாயகம் சின்னாபின்னமாகிச் சிதறிவிடும். அரச அதிகாரங்கள், பயங்கரச் சட்டங்கள் திட்டங்களாக மாறி மக்களை வதைத்துவிடும். எமது நாட்டின் பயங்கரவாதத் தடைச் சட்டம், தனிச் சிங்களச் சட்டம், சிங்கள பௌத்த நாடு, இன அழிப்புகள், பண்பாட்டு அழிப்புகள், திணிப்புகள், சித்திரவதைகள், காணாமலாக்குதல், அப்பாவிகளைக் குற்றவாளிகளாக்குதல், குற்றவாளிகளைப் பாதுகாத்தல் என்ற வகையில் ஜனநாயகத்தை நிர்மூலமாக்கும் விடயங்களாகவுள்ளன.

யுத்த வெறியோடு பல நாடுகளை வாள்முனையில் வெற்றிகொண்ட இந்தியாவின் அசோகச் சக்கரவர்த்தி கலிங்கப்போரின் பின்னர் உபகுப்தர் எனும் பிக்குவின் போதனையால் கவரப்பட்டு உண்மையான பௌத்தனானான். போர்வாளை உடைத்தெறிந்த பின்னர் நேர்நெறியில் வாழ்ந்து நல்லாட்சி புரிந்தான் என்பது வரலாறு. அவனுடைய மகன் மகிந்த தேரராகவும் மகள் சங்கமித்தை பிக்குனியாகவும் மன, மதமாற்றம் பெற்றனர். அவர்கள் இலங்கைக்கு வந்து மன்னன் தேவநம்பியதீசனைச் சந்தித்து பௌத்த போதனைகள் செய்து அவரையும் பௌத்தனாக்கினர். அரசனின் வழியே நாட்டு மக்களும் பௌத்தர்களாகினர். அப்படியான போர்வெறி தவிர்த்து நேர்நெறி வளர்த்த பௌத்த தருமத்தை இலங்கை ஆட்சியாளர்கள் பின்பற்றவில்லை. அந்தவகையில் புத்த பகவானின் புனித ஆசீர்வாதத்தை இலங்கை ஆட்சியாளர்கள் பெறவில்லை - என்றார்.

# நிந்தவூர் அல் - ஹிக்மா பாலர் பாடசாலையின் வித்தியாரம்ப விழா







(மாளிகைக்காடு நிருபர்)

நிந்தவூர் பிரதேச சபையின் பராமரிப்பின் கீழுள்ள அல்-ஹிக்மா பாலர் பாடசாலையின் 2022ஆம் ஆண்டிற்கான கல்விசார் நடவடிக்கைகளை ஆரம்பித்துவைக்கும் வகையில் வித்தியாரம்ப விழா நேற்று முன்தினம் (02) நடைபெற்றது.


நிந்தவூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.எம்.அஸ்ரப் தாஹிர், விசேட அதிதிகளாக கல்முனை கல்வி வலய முன்பள்ளி கல்வி கள உத்தியோகத்தர் ஐ.எல்.முஹம்மது அனீஸ், நிந்தவூர் பிரதேச செயலகத்தின் ஆரம்ப குழந்தைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல்.முஹம்மது ஹப்ரத், நிந்தவூர் பிரதேச சபையின் செயலாளர், உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

சுமார் 25இற்கும் மேற்பட்ட புதிய மாணவர்களை மாலை அணிவித்து வரவேற்றதுடன், அவர்களுக்கான பாடசாலை உபகரணங்களும் நிந்தவூர் பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் கலந்துகொண்ட பிரமுகர்களினால் வழங்கப்பட்டன.

குறித்த பாலர் பாடசாலைக்கான நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் உள்ளூராட்சி மன்றங்களின் உள்ளூர் மேம்பாட்டு (Local Development Support Project- LDSP) திட்டத்தினூடாக நிர்மாணிக்கப்பட்டு கடந்த 22.02.2022 அன்று கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணனினால் திறந்து வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் இரவு நேரங்களில் பெற்றோல் விநியோகம்

## சாரதிகள் விசனம்







(திருகோணமலை நிருபர்)

திருகோணமலையில் டீசல் மற்றும் பெற்றோலுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதால் சாரதிகள் நீண்டநேரம் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் காத்திருந்து கொள்வனவு செய்வதினால் பொதுமக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இருந்தபோதிலும் திருகோணமலை நகரில் ஒருசில எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் பெற்றோல் விநியோகம் செய்யப்படுவதுடன், அவ்வாறு விநியோகிக்கப்படும் எரிபொருள் நிலையங்களில் கட்டுப்பாடுகளுடன் குறிப்பிட்ட ரூபாவுக்கு மேல் பெற்றோல் விநியோகிக்கப்படுவதில்லை எனவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் ஏற்பட்ட கொரோனா சூழ்நிலை காரணமாக அத்தியாவசியப் பொருட்கள் உட்பட பல பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணம் உள்ள நிலையில், அன்றாட தேவைகளுக்குக்கூட பயணிப்பதற்கு எரிபொருள் இல்லாமல் பெரும் அவதியுறுவதாக பொதுமக்கள் கவலை அடைவதாக தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், திருகோணமலை நகர், நிலாவெளி, சீனக்குடா மற்றும் கந்தளாய் போன்ற பிரதேசங்களில் பெருமளவு டீசலுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதுடன், தனியார் மற்றும் வரையறுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனங்கள் நீண்ட தூரம் வரை வரிசையில் காத்திருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

அத்துடன், சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இரவுவேளைகளில் மாத்திரம் டீசல் விநியோகம் செய்யப்படுவதனையும் அவதானிக்க முடிகின்றது.

மேலும், அவ்வாறு காத்திருந்து வாகனம் ஒன்றிற்கு 2000 ரூபா முதல் 3500 ரூபா வரை மாத்திரம் சில எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் வழங்கப்படுவதாகவும் இவ்வாறு வழங்கப்படும் எரிபொருள் குறிப்பிட்ட தூரம் மாத்திரமே பயணிக்கபோதுமாக இருப்பதாகவும் இது தமக்கு பாரிய தலையிடியை கொடுப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இன்னும் சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மிக நீண்ட வரிசையில் காத்து நிற்கின்றபோதிலும், சில மணித்தியாலங்களில் எரிபொருள் முடிவடைந்துவிட்டதாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் தெரிவிப்பதாகவும் வாகன உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு காத்திருந்து எரிபொருள் இல்லை எனத் திரும்பி செல்வதினால் தமது அன்றாட தொழில் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளைக்கூட பூர்த்திசெய்துகொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக பொதுமக்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

# மட்டக்களப்பில் தொடர்ந்தும் மழை; குளங்களில் நீர்மட்டம் உயர்வு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பில் கடந்த மூன்று நாட்களாக பெய்துவரும் மழை காரணமாக தாழ்நிலப் பகுதிகளில் மழைநீர் தேங்கி நிற்பதனால் மக்கள் பலத்த அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கின்றனர்.



இந்நிலையில், மாவட்டத்திலுள்ள பிரதான குளங்களின் நீர்மட்டங்களும் உயர்ந்துள்ளதாக அக்குளங்களுக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் தெரிவித் துள்ளனர்.

அந்தவகையில் நேற்று (03) காலை 6.00 மணிவரையில் உன்னிச்சைக் குளத்தின் நீர்மட்டம் 33 அடியாகவும், உறுகாமம் குளத்தின் நீர்மட்டம் 15 அடி 6 அங்குலமாகவும், வாகனேரிக் குளத்தின் நீர்மட்டம் 19 அடி 1 அங்குலமாகவும் உயர்ந்துள்ளன.

இந்நிலையில் நேற்றுக் காலை 8.30 மணி வரையில் கடந்த 24 மணித்தியாலங்களில் மட்டக்களப்பில் 42.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வானிலை அவதான நிலையத்தின் மட்டக்களப்பு நிலையப் பொறுப்பதிகாரி சுப்பிரமணியம் ரமேஸ் தெரிவித்தார்.

# சம்மாந்துறை இஸ்லாமிய கற்கை பீடத்தில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள்

(நூறுல் ஹுதா உமர், நியாஸ் இஸ்மாயில்)

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (06.03.2022) காலை 9.30 மணியளவில் சம்மாந்துறை இஸ்லாமிய கற்கை பீடத்தில் நடைபெறவுள்ளது.

முன்னணியின் மாவட்ட தலைவி ஜீ.றிபா முஸ்தபா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தேசிய கொள்கைகள், பொருளாதார விவகார இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் எம்.ஐ.எம்.அமீர் பிரதம அதிதியாகவும், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளத்தின் பிரதம ஆலோசகரும், ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளருமான எஸ்.எல்.ஆதம்பாவா கௌரவ அதிதியாகவும், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் முன்னாள் தேசிய தலைவர் எம்.ஐ.உதுமாலெப்பை, முன்னணியின் மாகாண பணிப்பாளர் ஏ.எல்.எம்.இஸ்மாயில், மாவட்ட தலைவர் அதிபர் முகம்மட் நியாஸ், மாவட்ட ஆலோசகர் சபையின் தவிசாளர் எம்.எம்.அஜ்வத் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு துறை சார்ந்த பெண்கள், சமூக சேவையாளர்கள், முன்னணியின் மாவட்ட சம்மேளனத்தின் குடும்பத்திலிருந்து பல்கலைக்கழகம் தெரிவுசெய்யப்பட்ட மாணவிகள் இதன்போது பாராட்டி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதுடன், மரணித்த மகளிர்களுக்காக விசேட துஆப் பிரார்த்தனையும் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மாவட்ட மகளிர் அமைப்பின் செயலாளர் எம்.ஏ.நஸீரா உட்பட முன்னணியின் மாவட்ட சம்மேளத்தின் பதவி வழி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொள்வர்.

# வாழைச்சேனை கும்புறுமூலை முனீஸ்வரர் சிவாலயத்தில் மகா சிவராத்திரி விழா

(மட்டக்களப்பு நிருபர்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கோறளைப்பற்று பிரதேச இந்து அறநெறிப் பாடசாலைகள் ஒன்றியம் நடத்திய கோறளைப்பற்று பிரதேச மகா சிவராத்திரி விழா வாழைச்சேனை, கும்புறுமூலை அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரர் ஆலய முன்றலில் கடந்த செவ்வாய்க்கிழமை (01) இரவு 9.30 மணிக்கு கோறளைப்பற்று பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி அமலினி கார்த்தீபன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கோறளைப்பற்று பிரதேசத்திலுள்ள இந்து அறநெறி பாடசாலைகளை சேர்ந்த மாணவர்களின் கலைநிகழ்வுகளான நடனம், பரதநாட்டியம், கோலாட்டம், வில்லுப்பாட்டு, நாடகங்கள், பேச்சாற்றலை வெளிப்படுத்தும் போட்டி நிகழ்வுகள், சைவசமய பொதுஅறிவு வினாவிடைப் போட்டிகள் மற்றும் தமிழர் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் கலை நிகழ்வுகளும் சிறப்பாக மேடையை அலங்கரித்தன.









இந்நிகழ்வில் சிறப்பு சொற்பொழிவாளராக 108 சிவலிங்க சிவபூமி செந்தமிழாகம தலைமை அருட்சுணைஞரும், சித்த ஆயுர்வேத வைத்தியருமான கேணியூர் கவிஞர் தவத்திரு. இரமேசுகுமார் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பு சொற்பொழிவாற்றினார்.

இந்நிகழ்வில் கோறளைப்பற்று பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தரும், கோறளைப்பற்று பிரதேச இந்து அறநெறிப் பாடசாலைகள் ஒன்றியத்தின் தலைவருமான நே.பிருந்தாபன், கலாசார உத்தியோகத்தர் கே.எஸ்.ஆர்.சிவகுமார், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி டுகேந்தினி சிறிஸ்கந்தராஜா, கும்புறுமூலை கிராம உத்தியோகத்தர் லோபனராஜ் மற்றும் அறநெறி ஒன்றியத்தின் நிர்வாகிகள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், ஆலய நிர்வாகத்தினர் மற்றும் மட்டக்களப்பின் பல இடங்களிலுமிருந்து இவ்வாலயத்திற்கு வருகை தந்த பக்த அடியார்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்நிகழ்வின் இறுதியில் கலைநிகழ்வுகள் மற்றும் போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

வாழைச்சேனை - கும்புறுமூலை அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரர் சிவன் ஆலயத்தில் வருடாவருடம் கலை நிகழ்வுகளும், நான்குசாம விசேட கிரியைகளும், அபிஷேகங்களும் விசேட பூசைகளும் சிறப்பாக முறையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். பூசை நிகழ்வுகளை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ.பொன்னுத்துரை சுரேஸ்குமார் சர்மா நிகழ்த்தினார்.

# கருங்கடலில் முகாமிட்டுள்ள ரஷ்ய போர்க் கப்பல்கள்



உக்ரைன் எல்லையையொட்டி கருங்கடல் பகுதியில் ரஷ்ய போர்க் கப்பல்கள் முகாமிட்டுள்ளன.

உக்ரைன் தலைநகர் கீவ், கார்கிவ், செர்னிகிவ் உள்ளிட்ட நகரங்களில் இன்று 9ஆவது நாளாக ரஷ்யப் படைகள் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. குறிப்பாக, வான்வழித் தாக்குதல்கள் அதிகளவில் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தச் சூழலில் உக்ரைன் எல்லையை ஒட்டி அமைந்துள்ள கருங்கடல் பகுதியில் பியோட்டர் மார்க்னோவ், புரோஜெக்ட்-1171, புரோஜெக்ட்-775 ஆகிய போர்க் கப்பல்களை ரஷ்யா நிறுத்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த போர்க் கப்பல்கள் ஆழம் குறைவான கடற்பகுதிகளிலும் இயக்க வல்லவையாகும். ஒவ்வொரு போர்க் கப்பலிலும், தலா 500 வீரர்கள், 4 தாக்குதல் ஹெலிகொப்டர்களை ஏற்றிச்செல்ல முடியும்.

துருக்கியின் கட்டுப்பாட்டில் போஸ்பரஸ் மற்றும் டார்டெனல்ஸ் நீரிணைகள் உள்ளன. கடந்த 1936ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட மாண்ட்ரெக்ஸ் உடன்படிக்கையின்படி, போர்க் காலத்தில் அல்லது அச்சுறுத்தப்பட்டால் போர்க் கப்பல்கள் கடந்து செல்வதைக் கட்டுப்படுத்த முடியும்.

இந்நிலையில், உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்ததற்கு துருக்கி ஆட்சேபனை தெரிவித்தது. இதையடுத்து துருக்கி கடல் வழியாக கருங்கடலுக்கு தனது கப்பல்கள் செல்லும் முயற்சியை ரஷ்யா நிறுத்திவைத்துள்ளது.

# உக்ரைனிலிருந்து ரஷ்யப் படைகள் உடனடியாக வெளியேற வேண்டும்

## ஐ.நாவில் தீர்மானம் நிறைவேற்றம்

### 141 நாடுகள் ஆதரவு; 5 நாடுகள் எதிர்ப்பு: இந்தியா உட்பட 35 நாடுகள் புறக்கணிப்பு

''உக்ரைனிலிருந்து ரஷ்யப் படைகள் உடனடியாக வெளியேற வேண்டும்'' என்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா நடத்திவரும் தாக்குதலுக்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன. ரஷ்யாவிற்கு எதிராக பல்வேறு தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், உக்ரைன் விவகாரம் தொடர்பாக ஐ.நா. சபையில் அவசர கூட்டம் நடைபெற்றது.

இந்த சிறப்புக் கூட்டத்தில் உக்ரைனிலிருந்து ரஷ்யப் படைகள் உடனடியாக வெளியேற வேண்டும் என தீர்மானம் கொண்டு வரப்பட்டது. ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையேயான மோதலுக்கு அரசியல் ரீதியான பேச்சுவார்த்தை மூலம் உடனே தீர்வுகாண வேண்டும் என்றும் அந்தத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டது.

193 நாடுகளை உறுப்பினர்களாகக்கொண்ட ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானத்துக்கு ஆதரவாக 141 நாடுகளும் எதிராக 5 நாடுகளும் வாக்களித்தன. இந்தியா உள்ளிட்ட 35 நாடுகள் வாக்களிப்பை புறக்கணித்தன. இதையடுத்து பெரும்பான்மை ஆதரவுடன் தீர்மானம் நிறைவேறியது.



# ரஷ்யா - பெலாரஸுடனான உறவை துண்டித்த உலக வங்கி

ரஷ்யா மற்றும் பெலாரஸுடன் ஒப்பந்தம் செய்த அனைத்து திட்டங்களையும் இரத்து செய்வதாக உலக வங்கி அறிவித்துள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையை கண்டித்து இரு நாடுகளுடன் இருந்த உறவை முறித்துக்கொள்வதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

எரிசக்தி, கல்வி மேம்பாடு, கொரோனா நிதி உள்ளிட்ட பெலாரஸுடன் ஒப்பந்தம் செய்திருந்த 120 கோடி டொலர் மதிப்பிலான 11 திட்டங்களை இரத்துசெய்வதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா நடத்திவரும் அனைத்து அக்கிரமங்களையும் உடனடியாக நிறுத்த வேண்டும் என உலக வங்கி தெரிவித்துள்ளது. அதேபோல் ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்திருந்த 370 மில்லியன் டொலர் மதிப்பிலான 4 திட்டங்களையும் இரத்துசெய்வதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

**ரஷ்யாவில் கார் உற்பத்தியை நிறுத்தியது டொயோட்டா**

ரஷ்யா மீது உலக நாடுகளும், பெரு நிறுவனங்களும் பல்வேறு தடைகளை விதித்து வருகின்றன.

இந்நிலையில், உலகின் முன்னணி கார் நிறுவனமான ஜப்பானின் டொயோட்டா நிறுவனம், ரஷ்யாவில் கார் உற்பத்தி செய்வதையும், ரஷ்யாவிற்கு கார்களை ஏற்றுமதி செய்வதையும் நிறுத்தப்போவதாக அறிவித்துள்ளது.

ரஷ்யாவின் புனித பீட்டர்ஸ்பெர்க் நகரிலுள்ள டொயோட்டா தொழிற்சாலையில் ஆண்டுக்கு 80,000 கார்கள் உற்பத்தி செய்யப்பட்டுவந்த நிலையில், தற்போது உற்பத்தி நிறுத்தப்படுவதால் அங்கு பணியாற்றும் 2,600 ஊழியர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாயுள்ளது.



# ரஷ்ய பூனைகளுக்கு வந்த சோதனை

ரஷ்யா பூனைக் குட்டிகளை இறக்குமதி செய்ய தடை விதித்து பூனைகளுக்கான சர்வதேச கூட்டமைப்பு உத்தரவிட்டுள்ளது.

உக்கிரத் தாக்குதல்களின் மூலம் உக்ரைனின் முக்கிய நகரங்கள் ஒவ்வொன்றாக தம்வசப்படுத்த தொடங்கிவிட்டன ரஷ்யப் படைகள். உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யாவுக்கு பல்வேறு அமைப்புகள் கண்டனம் தெரிவித்து வரும் நிலையில், அந்நாட்டிலிருந்து பூனைக்குட்டிகளை இறக்குமதிசெய்ய பூனை வளர்ப்பு கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

அத்தோடு பூனைகளுக்கான சர்வதேச கண்காட்சிகளில் ரஷ்ய பூனைகளை அனுமதிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மார்ச் முதலாம் திகதியிலிருந்து மே 31ஆம் திகதிவரை ரஷ்ய பூனைகளுக்கான இறக்குமதி தடை நீடிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெலாரஸ் மீது பாயும் பொருளாதாரத் தடைகள்

உக்ரைனுடனான போரில் ரஷ்யாவுடன் கைகோர்த்து வரும் பெலாரஸ் மீது உலக நாடுகள் அடுத்தடுத்து பொருளாதாரத் தடை விதித்து வருகின்றன.

ரஷ்யாவின் படைகளை பெலாரஸில் குவிக்க உதவியது மட்டுமன்றி, உக்ரைனுக்குள் தங்கள் நாட்டு படைகளை நேரடியாக களமிறக்கியதால், பெலாரஸுக்கு உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன், ரஷ்யாவுடன் சேர்த்து பெலாரஸ் மீதும் பொருளாதாரத் தடைகளை உலக நாடுகள் விதித்து வருகின்றன.

இந்நிலையில், ரஷ்யா மற்றும் பெலாரஸின் இராணுவத்துக்கு தேவையான தொழில்நுட்ப ஏற்றுமதியை குறிவைத்து புதிய தடைகளை அமெரிக்கா அறிவித்துள்ளது. ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றியம் பெலாரஸின் விவசாயத்துறையை குறிவைத்து பல்வேறு தடையை அறிவித்திருந்தது.

அந்த வகையில் ஜப்பானும் பெலாரஸ் மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பது தொடர்பாக ஆலோசித்து வருகிறது.

# அதிபயங்கர ஆயுதங்களை பயன்படுத்த ரஷ்யா திட்டம்



உக்ரைனுடனான போரில் க்ளஸ்டர் குண்டுகள், தெர்மோபெரிக் ஆயுதங்கள் என தன்னிடமுள்ள அதிநவீன மிக மோசமான நாசகர விளைவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களை பயன்படுத்த ரஷ்யா திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உக்ரைன் மீதான ரஷ்யத் தாக்குதல் 9 நாட்களை எட்டியுள்ள நிலையில், எதிர்த் தரப்பிலிருந்து பின்வாங்கும் அறிகுறி தென்படாததால் சமாதானப் பேச்சுக்குப் பின்னர் அடுத்தகட்ட தாக்குதலுக்கு ரஷ்யா தயாராக இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், க்ளஸ்டர் குண்டுகள், தெர்மோபெரிக் ஆயுதங்கள் என தன்னிடம் உள்ள அதிநவீன மிக மோசமான நாசகர விளைவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்களையும் பயன்படுத்த ரஷ்யா திட்டமிட்டுள்ளது.

அதன்படி, உக்ரைன் மீது தாக்குதல் நடத்த தெர்மோபெரிக் ரொக்கெட் லோஞ்சர்களை ரஷ்யா தயார் நிலையில் வைத்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

தெர்மோபெரிக் ஆயுதங்கள் வளிமண்டலத்தை சூடாக்கி அங்குள்ள காற்றை கொதிநிலைக்குக் கொண்டுசெல்லும். இதனால் தெர்மோபேரிக் ஆயுதத்தின் இலக்கின் கீழுள்ள அனைத்தும் எரிந்துவிடும். இந்த வகை ஆயுதம் துல்லியமாக நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் பேரழிவை ஏற்படுத்தக்கூடியது. இதன் தாக்கம் இலக்கைச் சுற்றி 5 முதல் 6 கி.மீ. எல்லைக்குள் இருக்கும். அந்த எல்லைக்குள் பதுங்கு குழிகள், சுரங்கங்களில் இருப்போரைக் கூட இந்த குண்டு விட்டுவைக்காதாம்.

இது தவிர, ரஷ்யப் படைகள் BM 30 Smerch, கனரக MRL லோஞ்சர்கள் (அதாவது தொலைதூரம் பாய்ந்து அதிக சேதத்தை ஏற்படுத்தும் ரொக்கெட்டுகளை ஏவும் லோஞ்சர்கள்) தவிர, கார்கிவ் நகரின் குடியிருப்புப் பகுதிகளில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட க்ளஸ்டர் குண்டுகள் எனப்படும் கொத்து குண்டுகள் ஆகியனவற்றையும் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இந்த வகை கொத்துக் குண்டுகள் 100இற்கும் மேற்பட்ட நாடுகளில் தடைசெய்யப்பட்டுள்ளன.

போர் விமானத்திலிருந்து வீசப்படும் க்ளஸ்டர் குண்டுகள் இலக்கில் சிறு சிறு குண்டுகளாகப் பிரிந்து விழுந்து வெடித்துச் சிதறும். இது மிகுந்த நாசத்தை ஏற்படுத்தும். இதனால் உயிர்ப்பலி அதிகரிக்கும்.

ரஷ்யா, உக்ரைன் நகரங்களில் மிக மோசமான தாக்குதலை நடத்தி வருகிறது. பொதுமக்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்படாது என்றுதான் ஆரம்பத்தில் ரஷ்யா கூறியது. ஆனால், இதுவரை 2000இற்கும் மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். உக்ரைன் தாக்குதலுக்கு முன்னதாக அதன் எல்லையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ரஷ்யப் படைகளில் 80% தற்போது உக்ரைனுக்குள் இருக்கின்றன. ரஷ்யா மட்டும் அதன் முழு இராணுவ பலத்தை உக்ரைன் மீது பிரயோகப் படுத்தினால் உக்ரைனில் மிகவும் மோசமான விளைவுகள் ஏற்படும். பொதுமக்கள் பலி எண்ணிக்கை நினைத்துப் பார்க்கமுடியாத அளவுக்கு உயரும்.

***மீண்டும் 94ஐ நிகழ்த்தும் ரஷ்யா***

1994இல் செச்சன்ய தலைநகர் க்ரோஸ்னியில் ரஷ்யா என்ன மாதிரியான தாக்குதல் வியூகத்தைப் பயன்படுத்தியதோ அதைத்தான் இப்போதும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. ரஷ்யாவின் தாக்குதலில் க்ராஸ்னி நகரம் முழுவதுமே முற்றிலுமாக பேரழிவை சந்தித்தது.

தற்போது ரஷ்யா வகுத்திருக்கும் தாக்குதல் வியூகம் உக்ரைனில் மிகப்பெரிய பேரழிவை ஏற்படுத்தும். அதற்குள் பேச்சுவார்த்தையில் நல்ல தீர்வு எட்டப்பட வேண்டும் என்று சர்வதேச போர் வியூக நிபுணர்கள் தெரிவிகின்றனர்.

மேலும், ரஷ்யா பயன்படுத்தும் வியூகத்தை அமெரிக்கா ஈராக்கிலும், 90களில் யூகோஸ்லேவியா மீது அமெரிக்க, நேட்டோ படைகளும் பயன்படுத்தியுள்ளன என்று வரலாறு கூறுகிறது.

# அபூர்வ இறால்

பிரித்தானியாவின் கட்டுப்பாட்டிலுள்ள சேனல் தீவின் ஜெர்சி பகுதியைச் சேர்ந்த மோர்கன் பிசெக் என்ற மீனவரொருவரின் வலையில் அரியவகை நீலநிற இறாலொன்று பிடிபட்டுள்ளது.

நீல நிற இறால் பிடிபடுவதும் மிகவும் அபூர்வமான நிகழ்வாகும். சராசரியாக 20 இலட்சம் இறால் பிடிபட்டால் அதில் ஒரே ஒரு இறால் மட்டுமே நீல நிறத்தில் பிடிபட வாய்ப்புள்ளது என ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.






# சர்வதேச நீதிமன்றக் கூண்டில் ரஷ்யா

## மார்ச் 7இல் போர்க்குற்ற விசாரணை



### கீவ்வுக்குள் ஊடுருவிய ரஷ்யப் படை



ரஷ்யப் படையெடுப்புக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் உக்ரைன் தொடர்ந்த வழக்கு எதிர்வரும் மார்ச் 7 மற்றும் 8ஆம் திகதிகளில் விசாரணைக்கு வரவுள்ளது.

நேட்டோ படைகளுடன் உக்ரைன் இணையும் திட்டத்தை எதிர்த்து வந்த ரஷ்யா, உக்ரைன் மீது கடந்த 24ஆம் திகதி போர் தொடுத்தது. போர் தொடுக்கப்பட்டு இன்றுடன் 9 நாட்கள் ஆகியுள்ள நிலையில், மும்முனை தாக்குதல்களின் மூலம் உக்ரைனின் பெரும்பாலான தொழில்நகரமான கெர்சன் உட்பட முக்கிய நகரங்கள் ரஷ்யப் படைகள் வசம் வந்துவிட்டன. ரஷ்யாவின் அடுத்த இலக்கு தலைநகர் கீவ். கீவ்வை கைப்பற்றும் நோக்குடன் ரஷ்யப் படைகள் ஏவுகணைகள் கொண்டு தீவிர தாக்குதல்களை நடத்திவருகின்றன.

ரஷ்யாவை எதிர்த்து உக்ரைன் படையினரும் எதிர்த்தாக்குதல் நடத்திவருகின்றனர். இந்த மோதலில் குழந்தைகள் உட்பட அப்பாவி மக்கள் பலர் உயிரிழந்துள்ளனர். உக்ரைனின் பல நகரங்கள் உருக்குலைந்துள்ளன. இவை போரின் கோரமுகத்தின் சாட்டியமாக இருக்கின்றன. இதேவேளை, இரு தரப்பு படையினரும் கொல்லப்பட்டுள்ளனர்.

பல்தரப்பு எதிர்ப்புக்கு மத்தியில் உக்ரைன் மீதான ரஷ்ய தாக்குதல் உலக நாடுகளுக்கிடையே பெரும் பதற்றத்தை தோற்றுவித்துள்ளது. அதேவேளை, இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு நடைபெறும் மிகப் பெரிய தாக்குதலாக உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு கருதப்படுகிறது.

இதனிடையே அண்மையில் பெலாரஸில் இடம்பெற்ற உக்ரைன் - ரஷ்யாவுக்கிடையிலான சமாதான பேச்சுவார்த்தை எவ்விதத் தீர்வுகளும் எட்டப்படாமல் முடிவடைந்த நிலையில், பேச்சுவார்த்தை புதன்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், இருதரப்பு இழுத்தடிப்புகளால் பேச்சுவார்த்தை அன்று இடம்பெறவில்லை. இந்நிலையில், இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை இன்று (நேற்று) நடைபெறும் என்று ரஷ்ய தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

புட்டின் தலைமையிலான ரஷ்யாவுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிக்க உலக நாடுகளை அமெரிக்கா ஒருங்கிணைத்துவருகிறது. ரஷ்யாவை தனிமைப்படுத்தக் கோரிவரும் அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல உலக நாடுகள் உக்ரைனுக்கு உதவியளித்து வருகின்றன. இதேபோல், ரஷ்ய நிறுவனங்களின் மீது ஜப்பான் தடை விதித்துள்ளது. உக்ரைனிலிருந்து வெளியேறும் மக்களை ஏற்றுக்கொள்ள தயார் என்றும் அந்நாடு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ரஷ்யாவின் போர் நடவடிக்கையை கண்டித்து உக்ரைன் சர்வதேச நீதிமன்றத்தை நாடியுள்ளது. உக்ரைன் தரப்பில் தொடரப்பட்டுள்ள மனுவில், ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தும் வகையில் உக்ரைனில் இனப்படுகொலை செய்வதற்கு ரஷ்யா பொறுப்பேற்கவேண்டும். ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைகளை உடனே நிறுத்த அவசர உத்தர பிறப்பிக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது. இந்த வழக்கு மார்ச் 7 மற்றும் 8 ஆகிய திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று சர்வதேச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

**போர்க்குற்றமிழைத்துள்ளார் புட்டின்**

ரஷ்ய ஜனாதிபதி புட்டின் ஏற்கனவே போர்க் குற்றங்களைச் செய்துள்ளதாகவும், எனவே அவர் மீது வழக்குத் தொடர வேண்டும் என்றும் பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

ஸ்காட்டிஷ் தேசிய கட்சியின் விழாவில் பங்கேற்ற பொரிஸ் ஜோன்சன், உக்ரைனில் கண்மூடித்தனமான தாக்குதலை ரஷ்யா நடத்தி வருவதாகவும், ஒவ்வொரு மணிநேரத்திலும், உக்ரைனில் போரின் பயங்கரத்தை உலகம் கண்டுவருகிறது என்றும் தெரிவித்தார்.

**ரஷ்யாவில் போராட்டக்காரர்கள் 7000 பேர் கைது**

உக்ரைன் மீதான தாக்குதலைக் கண்டித்து ரஷ்யாவில் போராட்டத்தில் ஈடுபட்ட ஏழாயிரத்துக்கு மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

புட்டினுக்கு போரை நிறுத்த அழுத்தம் தரும் வகையில் போராட்டத்தைத் தொடர வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சி நவல்னி வேண்டுகோள் விடுத்தார். போருக்கு எதிராக தலைநகர் மொஸ்கோ மற்றும் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் உள்ளிட்ட நகரங்களில் ரஷ்யர்கள் போராட்டம் நடத்தினர்.

போராட்டத்தில் ஈடுபட்ட ஏழாயிரத்துக்கு மேற்பட்டோரை தடுப்புக்காவலில் பிடித்து வைத்துள்ளதாக தன்னார்வ அமைப்பு தெரிவித்துள்ளது.

**கீவ் மெட்ரோ ரயில் நிலையத்தில் அடுத்தடுத்து குண்டுவீச்சு**


உக்ரைன் தலைநகர் கீவ்வில் மெட்ரோ ரயில் நிலையம் அருகில் அடுத்தடுத்து 4 குண்டுகள் வீசப்பட்டன. இந்நிலையில், மக்கள் அருகிலுள்ள பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அரசு அறிவுறுத்தியுள்ளது.

Druzhby Narodiv மெட்ரோ ரயில் நிலையம் அருகில் அடுத்தடுத்து 4 குண்டுகள் வீசப்பட்டதையடுத்து கீவ், லிவிவ், கீவ் ஓபிளாஸ்ட் உள்ளிட்ட பகுதிகளுக்கு விமானத் தாக்குதல் குறித்த எச்சரிக்கைகள் விடப்பட்டுள்ளன.

இதனிடையே கெர்சன் பகுதியை ரஷ்யப் படைகள் கைப்பற்றியுள்ளதாக உக்ரைன் தரப்பில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு நகரைச் சுற்றி ரஷ்யப் படைகள் குவிக்கப்பட்டிருப்பதாகவும், தொடர்ந்து குண்டு மழை பொழிந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.









**10 இலட்சம் பேர் வாழ்வாதாரத்தை இழக்கும் அபாயம்**

உக்ரைன் - ரஷ்யா இடையிலான போரால் 10 இலட்சம் பேர் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரத்தை இழந்து அடையாளமற்ற அகதிகளாக மாறும் நிலை ஏற்பட்டுள்ளதாக அகதிகளுக்கான ஐ.நாவின் முகமை எச்சரித்துள்ளது.

ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையால் உக்ரைனிலிருந்து ஏறத்தாழ 9 இலட்சம் பேர் வெளியேறி அண்டை நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

போரை உடனடியாக நிறுத்தாவிட்டால் உலகளவில் பெரும் நெருக்கடி ஏற்படக்கூடும் என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

**8.36 இலட்சம் பேர் அகதிகளாக வெளியேற்றம்**

ரஷ்யப் படைகளின் தாக்குதலுக்கு மத்தியில் உக்ரைனிலிருந்து இதுவரை 8,36,000 பேர் அகதிகளாக வெளியேறியுள்ளனர் என ஐ.நா. அறிவித்துள்ளது.

தொடரும் போரால் உக்ரைனுக்கு அருகிலுள்ள நாடுகளில் தஞ்சமடைவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. குழந்தைகள் மற்றும் பெண்களே அதிகளவில் அடைக்கலம் தேடி அண்டைநாடுகளுக்கு சென்றிருப்பதாகவும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

**அப்பாவி மக்களைக் கொன்று வருகிறோம்**

தாங்கள் போருக்கு அனுப்பப்படுவது தங்களுக்கே தெரியாது என்றும் அப்பாவி பொதுமக்களை கொன்று வருவதாகவும் உக்ரைனிய படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட ரஷ்ய இராணுவ வீரர்கள் வாக்குமூலமளித்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில், ''அமைதியாக வாழும் மக்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது. எங்கள் பீரங்கிகளுக்கு அவர்கள் தீவனமாக மாறிவிட்டனர். ரஷ்ய இராணுவத்தினர் எங்களின் சக வீரர்களின் சடலங்களைக்கூட எடுப்பதில்லை. இறுதிச்சடங்கு செய்வது கூட இல்லை'' என அவர்கள் கண்ணீர் மல்கத் தெரிவித்துள்ளனர்.

**15 குழந்தைகள் உட்பட 230 பேர் உயிரிழப்பு**

ரஷ்யத் தாக்குதலில் உக்ரைனில் இதுவரை 15 குழந்தைகள் உட்பட 230 பேர் உயிரிழந்துள்ளனர். எனினும், உண்மையான இறப்புகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது.

உலக செய்திகள்

இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், கனரக பீரங்கித் தாக்குதல்கள், வான்வழித் தாக்குதல்கள் மற்றும் வெடிபொருட்கள் ஆகியவற்றின் விளைவாக பெரும்பாலான உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

**9,000 ரஷ்ய இராணுவ வீரர்கள் பலி**

போர் தொடங்கியதுமுதல் தற்போதுவரை உக்ரைன் படைகள் நடத்திய தாக்குதலில் ரஷ்யப் படைகளைச் சேர்ந்த 9 ஆயிரம் பேர் உயிரிழந்திருப்பதாக உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.

மேலும் ரஷ்யப் படைக்குச் சொந்தமான 30 விமானங்கள், 31 ஹெலிகொப்டர்கள், 217 டாங்கிகள், 90 சிறிய ரக பீரங்கிகள், 900 இராணுவ வீரர்களை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் அழிக்கப்பட்டுள்ளன. மேலும் ஒரேநேரத்தில் பல ஏவுகணைகளை செலுத்தும் 42 இராணுவ வாகனங்கள், 374 கார்கள், 60 எரிபொருள் டாங்குகள், 3 ட்ரோன்கள், 11 ஏவுகணை தடுப்பு அமைப்புகள் உள்ளிட்டவற்றை ரஷ்யா இழந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

**படையில் இணைந்த 3 விளையாட்டு வீரர்கள் பலி**

உக்ரைன் இராணுவத்தில் பணியாற்றிய விளையாட்டு வீரர்கள் மூவர் ரஷ்யப் படையினருக்கு எதிரான போரில் உயிரிழந்துள்ளனர்.

உக்ரைன் இராணுவத்தில் டாங்க் கொமாண்டராகப் பணியாற்றிய விட்டலி சபிலோ, கால்பந்தாட்ட அணியில் கோல் கீப்பராவார். இவர் கடந்த வெள்ளியன்று தலைநகரைக் காக்கும் போரில் உயிரிழந்தார்.

மற்றொரு அணியில் விளையாடிய திமித்ரோ மார்ட்டினென்கோவும் இராணுவத்தில் பணியாற்றியவர். அடுக்குமாடிக் குடியிருப்பில் ரஷ்ய இராணுவம் குண்டு வீசித் தாக்கியதில் மார்ட்டினென்கோவும் அவர் தாயும் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தவிர, பனிச்சறுக்கு வீரரான மாலிசேவும் ரஷ்யாவுக்கு எதிரான போரில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

---

## போரை கைவிட்டு திரும்பவில்லையென்றால் ரஷ்யப் படைகள் முற்றிலும் அழிக்கப்படும்

### உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி எச்சரிக்கை!

ரஷ்யப் படைகள் தாக்குதலை தீவிரப்படுத்தி உக்ரைனின் பெரு நகரங்களை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர முயன்றுவரும் நிலையில், ''போரை கைவிட்டு திரும்பவில்லையென்றால் ரஷ்யப் படைகள் முற்றிலும் அழிக்கப்படும்'' என்று உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு வாரத்தில் 9,000 ரஷ்ய வீரர்களை கொன்றதன் மூலம் ரஷ்யப் படைகளுக்கு பாடம் புகட்டப்பட்டுள்ளது. அவர்கள் எங்கே சென்றாலும் அழிக்கப்படுவார்கள். அவர்களுக்கு இங்கே அமைதி கிடைக்காது. உணவு இருக்காது. ஆக்கிரமிப்பாளர்கள் உக்ரேனியர்களிடமிருந்து கடும் எதிர்த் தாக்குதலை மட்டுமே பெறுவார்கள்.

நாங்கள் எதையும் விட்டுக்கொடுக்க மாட்டோம். தேசபக்திக்கான போர் என்றால் என்ன என்று அவர்கள் உணரும் நேரம் இது.

ஆம், உக்ரேனியர்களுக்கு இது ஒரு தேசபக்தி போர். தேசபக்தி போர் எப்படி தொடங்கும் என்பதை நாங்கள் அறிவோம். படையெடுப்பாளர்களுக்கு எதிராக அதை எப்படி தொடங்குவது என்பது எங்களுக்கு நன்றாகவே தெரியும்.''

- இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீது 8ஆவது நாளாக ரஷ்யப் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. ரஷ்யத் தாக்குதலுக்கு உக்ரைன் படைகளும் தக்க பதிலடி கொடுத்து வருகின்றன. மோதல் தீவிரமடைந்து வருவதால் உக்ரைனிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறி வருவது குறிப்பிடத்தக்கது.

# T20 தொடர் தோல்விக்கு பதிலடி கொடுக்குமா இலங்கை ?

# 14 ஆண்டுகளாக டெஸ்ட் தொடரை கைப்பற்றாத சோகம்!




இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் இறுதியாக நடைபெற்ற டெஸ்ட் தொடரை இந்திய அணி கைப்பற்றியது போது...

✍ ஏ.அகீல் சிஹாப்

திமுத் கருணாரத்ன தலைமையிலான சுற்றுலா இலங்கை அணிக்கும், ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணிக்கும் இடையிலான இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி இன்று காலை 9.30 மணிக்கு மொஹாலியில் ஆரம்பமாகிறது.

இலங்கை கிரிக்கெட் அணியானது 03 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடர் மற்றும் இரு போட்டிகள் கொண்ட ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. முதல் தொடரான இருபதுக்கு 20 சர்வதேச தொடரை இந்திய அணி 3-0 என்ற அடிப்படையில் கைப்பற்றிய நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான அடுத்த தொடரான 3 போட்டிகள் கொண்ட ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் முதல் போட்டி இன்று ஆரம்பமாகிறது.

### ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்

சர்வதேச கிரிக்கெட் பேரவையானது டெஸ்ட் போட்டிகளுக்கும் ஒரு சம்பியனை தீர்மானிக்க வேண்டும் என்கின்ற அடிப்படையில் 'ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்' என்ற பெயரில் டெஸ்ட் தொடரானது கடந்த 2019ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. குறித்த ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரானது, இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெற்று வருகிறது.

இரண்டு வருடங்களில் நடைபெறுகின்ற டெஸ்ட் போட்டிகளின் அடிப்படையில் புள்ளிப்பட்டியலில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு தெரிவாகி, அந்த இரு அணிகளுக்கிடையில் நடைபெறும் இறுதிப்போட்டியில் வெற்றி பெறும் அணி டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டத்தை சுவீகரிக்கும். முதல் டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டத்தை கேன் வில்லியம்சன் தலைமையிலான நியூசிலாந்து அணி சுவீகரித்தது.

ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் ஓர் அங்கமாக நடைபெறுகின்ற குறித்த டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் புள்ளிப்பட்டியலில் இலங்கை அணி இரண்டு போட்டிகளில் விளையாடி இரண்டிலும் வெற்றி பெற்று 100 சதவீத வெற்றி வீதத்துடன் முதலிடத்தில் காணப்படுகிறது. 10 போட்டிகளில் விளையாடியுள்ள இந்திய அணி 4 வெற்றிகளுடன் 49.07 வெற்றி வீதத்துடன் ஐந்தாமிடத்தில் காணப்படுகிறது.

### இலங்கை எதிர் இந்தியா

2021 - 2023 ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் இன்றைய தினம் இலங்கை அணி, இந்திய அணியை எதிர்கொள்கின்ற நிலையில் இரு அணிகளுக்குமிடையில் இதுவரையில் நடைபெற்றுள்ள டெஸ்ட் போட்டிகள் தொடரில் அவதானம் செலுத்தலாம்.





### இதுவரையில் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகள்

கடந்த 1982ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் வரலாற்று சிறப்புமிக்க முதல் டெஸ்ட் போட்டி சென்னையில் நடைபெற்றது. இந்தப் போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலையில் நிறைவுக்கு வந்தது. அன்றிலிருந்து இன்று வரையில் இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் 44 டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றுள்ளன.

இதில் இந்திய அணி 20 டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்று ஆதிக்கம் செலுத்துகிறது. 07 போட்டிகளில் மாத்திரம் இலங்கை அணி வெற்றி பெற்றிருக்கும் நிலையில் 17 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி சமநிலையில் நிறைவடைந்துள்ளன. இலங்கை அணி இறுதியாக கடந்த நவம்பரில் சொந்த மண்ணில் மேற்கிந்திய தீவுகளுடன் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி 2-0 என்ற அடிப்படையில் தொடரை கைப்பற்றியது.

### இறுதி ஐந்து போட்டிகள்

இரு அணிகளுக்கும் இடையில் இறுதியாக நடைபெற்ற 05 டெஸ்ட் போட்டிகள் தொடர்பில் அவதானம் செலுத்துகின்றபோது, இந்திய அணி 03 போட்டிகளில் வெற்றி பெற்றிருக்கும் நிலையில், இரு




போட்டிகள் வெற்றி தோல்வியின்றி சமநிலையில் நிறைவடைந்துள்ளன. இலங்கை அணி இறுதியாக கடந்த 2015 ஆகஸ்ட் மாதம் காலியில் வைத்து இந்திய அணியுடன் பெற்ற டெஸ்ட் வெற்றியின் பின்னர் இன்றுவரையில் இந்திய அணியுடன் டெஸ்ட் வெற்றியை சுவைக்கவில்லை.

### 04 வருடங்களின் பின்னர் மோதல்

இலங்கை அணி கடந்த 2017 நவம்பரில் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 03 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடிய நிலையில், கிட்டத்தட்ட 04 வருடங்களுக்கும் பின்னர் இந்திய அணியை டெஸ்ட் போட்டியில் இன்று சந்திக்கிறது.

### இருதரப்பு டெஸ்ட் தொடர்கள்

கடந்த 1982ஆம் ஆண்டிலிருந்து 2017ஆம் ஆண்டு வரையில் 16 தொடர்கள் நடைபெற்றுள்ளன. இதில் இந்திய அணி 09 தொடர்களை வென்றுள்ள நிலையில், இலங்கை அணி 03 தொடர்களை மாத்திரம் வென்றுள்ளன. 04 தொடர்கள் வெற்றி தோல்வியின்றி சமநிலையில் நிறைவுக்கு வந்துள்ளன.

### 14 வருடங்களாக காத்திருக்கும் இலங்கை

இலங்கை அணி கடந்த 2003ஆம் ஆண்டு சொந்த மண்ணில் வைத்து 03 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்றியதன் பின்னர், தற்போது 14 வருடங்களாக இந்திய அணியுடன் டெஸ்ட் தொடரை கைப்பற்றவில்லை.

### முதல் முறையாக டெஸ்ட் சம்பியன்ஷிப் மோதல்

முதலாவது ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் (2019 – 2021) தொடரில் இலங்கை - இந்திய அணிகள் மோதிக் கொள்ளாத நிலையில், இரண்டாவது (2021 – 2023) டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் இரு அணிகளும் முதல் முறையாக நேருக்கு நேர் மோதுகின்றன. எனவே இந்த டெஸ்ட் தொடர் எவ்வாறு அமையப் போகிறது என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

Sri Lanka Cricket
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog

### இந்தியாவுக்கு சவால் கொடுக்கும் டெஸ்ட் குழாம்

தசுன் சானக்க தலைமையிலான இலங்கை அணி இருபதுக்கு 20 தொடரை முழுமையாக இழந்தாலும், திமுத் கருணாரத்ன தலைமையிலான இலங்கை டெஸ்ட் அணி, நிரோஷன் டிக்வெல்ல, தனஞ்ஜய டி சில்வா, அஞ்சலோ மெத்யூஸ், லஹிரு திரிமான்னே, சுரங்க லக்மால் போன்ற அனுபவ வீரர்களுடன் விளையாடுவதால் டெஸ்ட் தொடர் இந்திய அணிக்கு சவாலாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.



## 12ஆவது ஐ.சி.சி. மகளிர் உலகக்கிண்ணம் இன்று நியூசிலாந்தில் ஆரம்பம்



08 அணிகள் பங்கேற்கும் 12ஆவது ஐ.சி.சி. மகளிர் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் இன்று முதல் நியூசிலாந்தில் ஆரம்பமாகிறது. கடந்த 1973ஆம் ஆண்டு முதல் நடைபெற்றுவரும் மகளிர் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் இறுதியாக கடந்த 2017ஆம் ஆண்டு சொந்த மண்ணில் இங்கிலாந்து மகளிர் அணி சம்பியன் பட்டத்தை சொந்தமாக்கியது.

இந்த தொடரில் 06 முறை சம்பியனான அவுஸ்திரேலியா, நடப்பு சம்பியன் இங்கிலாந்து, நியூசிலாந்து, இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, மேற்கிந்திய தீவுகள், பங்களாதேஷ் ஆகிய 08 அணிகள் பங்கேற்கின்றன. இதில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒருமுறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 04 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும். மொத்தம் 31 போட்டிகள் மவுன்ட் மாங்கானு, டுனெடின், ஹாமில்டன், வெலிங்டன், ஒக்லாந்து, கிறைஸ்ட்சர்ச் ஆகிய 06 நகரங்களில் நடைபெறுகிறது.

லீக் சுற்றில் ஒவ்வொரு வெற்றிக்கும் 02 புள்ளிகள் வழங்கப்படும். ஆட்டம் டையில் (சமனில்) முடிந்தால் சுப்பர் ஓவர் முறை கடைபிடிக்கப்படமாட்டாது. இரு அணிக்கும் தலா ஒரு புள்ளி பகிர்ந்தளிக்கப்படும். அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டியில் டை ஏற்பட்டால் மட்டும் சுப்பர் ஓவர் அடிப்படையில் முடிவு காணப்படும்.

இன்று முதல் போட்டியில் நியூசிலாந்து – மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதுகின்றன. இந்த போட்டி இலங்கை நேரப்படி காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகிறது. சம்பியனை தீர்மானிக்கும் இறுதிப்போட்டி ஏப்ரல் 03ஆம் திகதி நடைபெறும்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## இலங்கை வந்தடைந்த டக்சனின் பூதவுடல்: திங்களன்று நல்லடக்கம்

**மாலைதீவில் கடந்த சனிக்கிழமை இரவு உயிரிழந்த மன்னாரை சேர்ந்த இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணி வீரர் டக்சன் பியூஸ்லஸின் பூதவுடல் நேற்று நாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு கொண்டு வரப்பட்ட அவரது பூதவுடல், நேற்று பிரேத பரிசோதனைகளுக்காக நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டது.**

**பரிசோதனைகளின் பின்னர் பூதவுடல் நாளை மன்னார் பனங்கட்டுக் கொட்டில் உள்ள அவரது இல்லத்துக்கு அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்படும்.**



**பின்னர் எதிர்வரும் திங்கட்கிழமை மாலை மன்னார் பொது மயானத்தில் அவரது உடல் அடக்கம் செய்யப்படவுள்ளது.**

## பீஜிங் குளிர்கால பராலிம்பிக் இன்று ஆரம்பம்

## இறுதி நேரத்தில் ரஷ்யா, பெலாரஸூக்குத் தடை



உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து சகல விளையாட்டு அமைப்புகளும் ரஷ்யாவையும் பெலாரஸையும் தடை செய்துள்ளன. இவ்வாறான ஒரு நிலையில், இன்று ஆரம்பமாகும் பீஜிங் 2022 குளிர்கால பராலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் ரஷ்ய, பெலாரஸ் விளையாட்டு வீரர்கள் போட்டியிட முன்னதாக சர்வதேச பராலிம்பிக் குழு அனுமதி கொடுத்த நிலையில், நேற்றைய தினம் அனுமதி இல்லை என்ற அறிவிப்பு வெளியானது.

ரஷ்ய, பெலாரஸ் கொடி, சின்னம், சீருடை என்பனவற்றுக்கு அனுமதி இல்லை. ஆனால் அவர்கள் பராலிம்பிக் கொடியின் கீழ் போட்டியிடுவார்கள். அனைத்து உத்தியோகபூர்வ விழாக்கள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளின்போது இரு நாடுகளின் வீரர்களும் பிரதிநிதிகளும் தங்கள் சீருடையில் அனைத்து தேசிய சின்னங்கள் மற்றும் கொடிகளை மறைக்க வேண்டும் எனவும் முன்னதாக அறிவுறுத்தப்பட்டிருந்தது. இந்த முடிவு விமர்சனத்துக்கு உள்ளான நிலையில், தற்போது ஒட்டுமொத்தமாக நிராகரிக்கப்பட்டது ரஷ்யா, பெலாரஸ்.

13ஆவது பீஜிங் பராலிம்பிக் போட்டிகள் இன்று முதல் எதிர்வரும் 13ஆம் திகதி வரை சீனாவின் தலைநகர் பீஜிங்கில் நடைபெறவுள்ளது. அண்மையில் நடைபெற்ற பீஜிங் குளிர்கால ஒலிம்பிக்கில் ரஷ்ய ஒலிம்பிக் கொடியின் கீழ் போட்டியிட்ட ரஷ்ய அணி 06 தங்கம், 12 வெள்ளி, 14 வெண்கலம் அடங்களாக மொத்தமாக 32 பதக்கங்களை வென்றது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7